ஸ்ரீ:

ஸ்ரீமத்யை கோதாயை நம: ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



சங்கத்தமிழ்மாலை முப்பது

(ஸ்ரீ.உ.வே.ப்ர.ப.அண்ணங்கராசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்)

பாதகங்கள் தீர்க்குமதாய், பரமனடி காட்டுமதாய், வேதமனைத்துக்கும் வித்தாகுமதான திருப்பாவையின் முடிவில் ''பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத்தமிழ்மாலை'' என்றருளிச்செய்யப்பட்டிருப்பதன் சுவையை நோக்கி ''பாரோர் புகழ்மாலை, உய்வுமாலை, செல்வமாலை, மகிழ்மாலை,... திருவருள் மாலை'' என்றிப்படி முப்பது மாலைகளாகப் பெயரிட்டு வெளியிட்டு ஒவ்வோருபந்யாஸகரும் அடைவே ஒவ்வொருமாலையைப்பற்றி ஸ்வல்ப நிமேஷங்கள் பேசவேண்டுமென்று கோரினார்களாம். இம்முப்பது மாலைகளையே சீர்ஷகமாக வைத்து அவற்றில் உபஜீவிக்கவேண்டிய அர்த்த விசேஷங்களை ஈண்டு நாம் அடைவே உபஹரிக்கிறோம். ரஸிகர்களும் விவேகிகளும் வாசித்து மகிழ்க. உபந்யாஸகர்களுக்கு இவ்வுபஹாரம் மிகச்சிறந்த ஜீவாதுவுமாகும்.

1. பாரோர் புகழ்மாலை

முதற்பாட்டின் ஈற்றடியில் ''பாரோர்புகழ'' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைப் பெயர்க்குறிப்பு. ''பாரோர் புகழ'' என்பதற்கு உலகமெல்லாம் கொண்டாடும்படி யென்று பொருள். ''க்யாதிலாப பூஜாபேக்ஷையற மலர் நாடி யாட்செய்ய'' என்பது ஆசார்யஹ்ருதய (205) திவ்யஸூக்தி. க்யாதியிலும், லாபத்திலும், பூஜையி லும் அபேக்ஷையற்றிருப்பர் பெரியார். பாரோர் புகழவேணுமென்பதை விரும்பலாமோ? விரும்பினால் க்யாதியில் அபேக்ஷையிருப்பதாகவன்றோ ஏற்படும். இது தகுதியன்றே. மேலே இருபத்தேழாம் பாட்டிலும் ''நாடுபுகழும் பரிசினால் நன்றாக'' என்றுள்ளது. திருவாய்மொழியில் ''ஒழிவில் காலப் பதிகத்திற்குப் பலன் கூறும் நம்மாழ்வாரும் ''வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே'' என்றருளிச் செய்கிறார். பாரோர் புகழ்வதையும், நாடு புகழ்வதையும், ஞாலம் புகழ்வதையும் பரமைகாந்திகள் எதிர்பார்க்கத் தகாதே. தத்துவமிங்ஙனேயிருக்க, மேலே குறித்த ஸ்ரீஸூக்திகள் எங்ஙனம் அவதரித்தனவென்னில்; இதற்குப் பலவகையான ஸமாதானங்களுண்டு; ஒருவகையான ஸமாதானம் மட்டும் இங்குணர்த்துவோம். புகழ என்றது மகிழ என்றபடி. ஒருவர் மற்றொருவரைப் புகழவேண்டுமேயானால் முன்னம் மகிழ்ச்சியுண்டாக

http://acharya.org

வேணும். அந்தரங்கத்தில் மகிழ்ச்சியுண்டாகாமல் பண்ணும் புகழ்ச்சி இகழ்ச்சியேயாகும். ''முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத் தகநக நட்பது நட்பு'' என்ற திருக்குறள் இங்கு ஒருவாறு நினைக்கத் தகும். 'உலகமெல்லாம் உகக்கும்படி' என்று பொருள் தேறிற்று. ஏவஞ்ச ''காரணே கார்யோபசார:'' என்ற ஸம்ஸ்க்ருத ஶாஸ்த்ரஜ்ஞர்களின் வழக்குப்படி 'பாரோர்மகிழ' என்ன வேண்டுமிடத்து 'பாரோர் புகழ' எனப்பட்டதென்றதாயிற்று. புகழ்ச்சி எப்படி விரும்பத்தகாததோ, அப்படி மகிழ்ச்சியும் விரும்பத்தகாததுதானே யென்ன வேண்டா. நம்முடைய செய்கையினால் ஒருவர்க்கும் அருவருப்பு உண்டாகாமல் யாவர்க்கும் மகிழ்ச்சி யுண்டாகவேணுமென்று கோருவது ப்ராப்தமேயாகும்.

''பாரோர்புகழப் படிந்து நீராடப் போதுவீர்! போதுமினோ'' என்கிற அந்வயம் போலவே ''நாராயணனே நமக்கே பாரோர் புகழப் படிந்து பறை தருவான்'' என்கிற அந்வயமும் கொள்ளற்பாலதே. இவ்வந்வயத்தில் படிந்து என்பதற்கு 'விதேயனாகி' என்று பொருளாம். திருவாய்மொழியில் (10–6–1) 'ஆழியானருள் தருவானமைகின்றான் அது நமது விதிவகையே' என்றவிடத்திற்கு இருபத்து நாலாயிரப் படியிலும் ஈடு முப்பத்தாறுயிரப்படியிலும் இன்சுவை பொருளுள்ளது காண வேணும். ஈட்டு ஸ்ரீஸூக்தி வருமாறு :–

''(அது நமது விதிவகையே)' அது நம்முடைய பாக்யாநுகுணமாகவிறே யென்று இதுக்குப் பூருவர்கள் நிர்வஹிக்கும்படி. இத்தை எம்பெருமானார் கேட்டருளி 'இத்திருவாய்மொழியில் மேலோடுகிற ரஸத்தோடு சேராது; நாம் விதித்தபடியே செய்வானாயிருந்தானென்கிறார்' என்றருளிச்செய்தார். ...நமது சொல் வகையே என்னுதே விதிவகையே என்பானென்னென்னில்; வித்யதிக்ரமத்தில் ப்ரத்யவாயத்துக்கு அஞ்சுவாரைப் போலேஅஞ்சா நின்றான்....''.

இவ்வண்ணமாக இங்கும் பொருள் கொள்ள இடமுள்ளது. நாராயணன் நமக்குப் பறை தருமிடத்தில் ''படிந்து பறைதருவான்'' = நாம் கீறின கீற்றைத் கடவாமே நாம் விதித்தபடியே தருவான்; அப்படி அவன் தரும்படியைக் கண்டு பாரோர் புகழாதிருக்கமுடியாது. நிரங்குசஸ்வதந்திரனான நாராயணன் வல்லவீஜநவல்லபனாய்ப் பிறந்து இப்படி அவர்கள் விதித்தபடி செய்வதே! என்று அவனது எளிமையைப் புகழ வேணுமென்கிற பொருள் ரஸவத்தரம். (1)

2, உய்வு மாலை

இரண்டாம்பாட்டின் ஈற்றடியில் ''உய்யுமாறெண்ணி'' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைப்பெயர். ''உய்யும் ஆறு'' என்றவிடத்து (ஆறு) என்றது (6)

ஆறென்னும் லக்கத்தைச் சொன்னதாகி, எம்பெருமானுர்க்காகத் திருக்கச்சிநம்பிகள் தேவப்பெருமாள் பக்கலில் பெற்று வெளியிட்டருளின ஆறு வார்த்தைகளே நாம் சிந்தித்து உகப்பதும் ஸூசிதமாகிறதென்றும், இது அலங்கார ஶாஸ்த்ரத்தில் முத்ராலங்கார ப்ரக்ரியை யென்றும் நம்முடைய திருப்பாவை விஶேஷார்த்த வுரையில் விவரித்துள்ளோம். இங்கு, கண்ணபிரான் விஷயமான ஆறுவார்த்தைகளே அருளிச்செயல்களிலிருந்து அருமருந்தாக எடுத்துக் காட்டி ரஸிகர்களே ரஸிக்கச்செய்வோம். கண்ணபிரான் விஷயமான ஆறு வார்த்தைகளாவன:–

1. வதுவை வார்த்தை
2. நெய்யுண் வார்த்தை
3. வெண்ணெய் வார்த்தை
4. நடந்த நல்வார்த்தை
5. மெய்ம்மைப் பெருவார்த்தை
6. கஞ்சன் விடுத்தானென்பதோர் வார்த்தை

இவ்வார்த்தைகளுக்கு ஆகரம் முன்னம் காட்டிவிட்டுப் பிறகு விவரணம் செய்வோம்.

1. திருவாய்மொழி 5–10–2 'வதுவை வார்த்தயுளேறு பாய்ந்ததும்'

2. திருவாய்மொழி 5–10–3 'நெய்யுண் வார்த்தையுளன்னே கோல் கொள்ள'

3. திருவாய்மொழி 6–2–11'ஆய்ச்சியாகிய வன்னேயாலன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டமுகூத்தவப்பன்'

4. திருவாய்மொழி 7–5–9 'தேசமறிய ஓர் சாரதியாய்ச் சென்று சேனேயை நாசஞ்செய்திட்டு நடந்த நல்வார்த்தை'

5. நாச்சியார் திருமொழி 11–10 'செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை'

6. பெரியாழ்வார் திருமொழி 2–8–6 'கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல் கருநிறச் செம்மயிர்ப்பேயை, வஞ்சிப்பதற்கு விடுத்தானென்பதோர் வார்த்தையுமுண்டு'

(சிறுகுறிப்பு: ஒன்று முதல் ஐந்து வரைக்குமுள்ள பாசுரங்களிற் காணும் வார்த்தைகள் ஸாக்ஷாத்தாகக் கண்ணபிரானேயே ஸம்பந்தித்தவை. இப்படிப்பட்ட ஆருவது வார்த்தை யொன்று கிடைக்கவில்லேயேயென்று அடியேன் அலமந்து ஆழ்வாராசார்யர்களின் திருவடிகளேச் சிந்தித்து நின்ற போது, மேலே கண்ட ஆருவது பாசுரத்தை (வார்த்தையை)ப் பரமகாருணிகரான ஆழ்வார் ஸ்புரிக்கச் செய்தார். அந்தப் பாசுரம் மற்ற ஐந்து பாசுரங்கள் போலல்லாமல் 'என்பதோர் வார்த்தையுமுண்டு' என்று விலக்ஷணமாக அமைந்திருப்பது – அடியேனேத் தட்டி யெழுப்பிக் காட்டிக் கொடுப்பது போலன்றேவுள்ளது. இதையும் கண்ணபிரான் ஆறு வார்த்தைகளில் சேர்த்துக் கொள்ள என்ன தடை? தாராளமாகச் சேர்த்துக்கொள்ளாய்– என்று நியமிப்பது போலவே பாசுரம் அவதரித்துள்ளதே யென்று பாவியேன்

நெஞ்சு நீர்ப்பண்டமாயிற்று) இவ் வாறு வார்த்தைகளைப் பற்றிச் சிறிது விவரணம் காட்டுகிறேன்—

1. **வதுவை வார்த்தை**: எம்பெருமானுடைய வொரு திவ்ய மஹிஷி ஜனக சக்ரவர்த்தியின் திருமாளிகையிலே ஸீதாப் பிராட்டியாய் வளர்ந்தவாறு போல, மற்றொரு திவ்ய மஹிஷி நப்பின்னைப் பிராட்டியாய் கும்பர்மகளாய் வளர்ந்துவர, ஸீதா விவாஹத்திற்கு வில் முறியைப் பந்தயமாக வைத்திருந்ததுபோல நப்பின்னை திருமணத்திற்கு எருது முறியைப் பந்தயமாக வைத்திருந்தார் அவளது திருத்தந்தையார். "எருதேழையும் நிரஸிப்பாற்கு இவளைக் கொடுக்கக் கடவோம்" என்று பிறந்த பிரஸித்தியே வதுவை வார்த்தை எனப்படும். எருதேழையுமடர்த்துப் பின்னைதோள் மணந்ததளவும் இந்த வார்த்தையில் அநுஸந்தேயம்.

2. **நெய்யுண்வார்த்தை** – யசோதைப் பிராட்டி, நெய்யைத் திரட்டிக் குறியிட்டு வைத்துப்போய்ச் சிறிதுபோது கழித்துவந்து பார்த்தாள். குறியழிந்து கிடக்கையாலே நெய் களவு போயிற்றென்றாள். அவ்வளவிலே கண்ணன் கண்ணைப் பிசையத் தொடங்கினான்; அவ்வளவிலே யசோதை 'நீராமிது செய்தீர்' என்று ஒரு கோலைக் கையிலெடுத்தாள். தாயெடுத்த கோல்தானே, இதுதான் சிறுகோல்தானே, என்ன ப்ரமாதம் நேர்ந்துவிடும்! என்று ஆறியிராமே தாமரைக் கண்கள் நீர்மல்க நின்றான்; *அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும் அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதும் தொழுகையுமானான். இந்த விசேஷம் நெய்யுண் வார்த்தையில் அநுஸந்தேயம்.

3. **வெண்ணெய் வார்த்தை** – *ஆய்ச்சியாகிய வன்னையால் அன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டழு கூத்தவப்பனும் நங்கண்ணன். ஊரிலே வெண்ணெய் களவு போயிற்றென்றொரு வார்த்தை பிறந்ததாம். 'கண்ணா! நீயா வெண்ணெய் திருடினாய்!' என்று கேட்டாராருமில்லை. ஆயினும் இக்களவு வார்த்தை நம்மையன்றி வேறொருவரையும் இலக்காகக் கொள்ளாதென்று தானே யழப்புக்கான். இவ்விடத்திற்கு பொருத்தமாக நம்பிள்ளை ஒரு லௌகிக கதையை அருளிச்செய்வர்; "மடம் மெழுகுவார் ஆர் என்ன, அச்ரோத்ரியன் என்றார்கள்! இப்பரப்பெல்லாம் என்னாலே மெழுகப் போமோ வென்றான்; அதுபோலே" என்று. அதாவது, பலர் கூடி ஒரு பெரிய மடத்திலே தங்கப்போனார்கள். அந்த மடம் அகலமும் நீளமும் அதிகமாகக் கொண்டிருக்கவே, இவ்வளவு பெரிதான இச்சத்திரத்தை நித்தியம் மெழுகி விளக்கவேணுமே, அது யார் செய்வதோ? என்று சிலர் பேசிக் கொண்டார்களாம். அதற்கு ஒருவன் பதில் சொன்னானாம். 'தங்கி யுறங்கி யெழுந்து போகவந்த வுங்களுக்கு இந்த விசாரம் ஏதுக்கு? எவனாவொரு

விதவாபுத்ரன் அந்த வேலையைச் செய்து போகிறான்' என்று. அந்தத்திரளிலே மெய்யாகவே வொருவிதவாபுத்ரன் இருந்து அவன் காதிலே இந்த வார்த்தை விழுந்தது. 'ஐயோ! இவ்வளவு பரப்பு என்னாலே மெழுகிப் பெருக்கப்போமோ?' என்று அவன் அழத்தொடங்கினானாம். அதனாலே தன்னுடைய அவத்யத்தைத் தானே வெளியிட்டுக் கொண்டானாயிற்று. அதுபோலே, வெண்ணெய் களவு ப்ரஸங்க மாத்ரத்தில் அழுத கண்ணனும் தன்னுடைய களவைத் தானே வெளியிட்டுக் கொண்டானென்கை. இந்த விஶேஷமே வெண்ணெய் வார்த்தையில் அநுஸந்தேயம்.

4. நடந்த நல்வார்த்தை –* தாயஞ் செறுமொருநூற்றுவர் மங்க வோரைவர்க்காய்த் தேசமறிய வோர் சாரதியாய்ச் சென்று சேனையை நாசஞ் செய்திட்டு நடந்த நல்வார்த்தை இது. பஞ்சபாண்டவர்க்குக் கையாளாயிருந்து இழிதொழில் செய்து பார்த்தஸாரதி யென்று பேர்பெற்றுத் தாழ நின்று அநிஷ்டவர்க்கங்களைக் களைந்து ''க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந:, மோஹயித்வா ஜகத் ஸர்வம் கதஸ் ஸ்வம்ஸ்தாநமுத்தமம்'' என்கிறபடியே தன்னடிச்சோதிக்கு நடந்த நல்வார்த்தை யென்க. எம்பெருமான் திருநாடேற வெழுந்தருளினானென்கிற விது தீயவார்த்தையே யொழிய நல்வார்த்தை யாகுமோ வென்ன வேண்டா; 'களிமலர்த்துழாயலங்கல் கமழ் முடியன் கடல் ஞாலத்து அளிமிக்கான்' என்று ஆழ்வாரருளிச் செய்தபடியே எம்பெருமான் இந்நிலத்திலே வாழ மிகவும் விருப்பமுடையவனே; ஸம்ஸாரிகளாய் எதிரம்பு கோத்து நலிய நினைப்பாரும், 'அவஜாநந்தி மாம் மூடா:' என்றும் 'ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:, மாயயாऽபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாச்ரிதா:' என்றும் தானே நெஞ்சாறல்படும்படி அவமானம் பண்ணுவாரும் மலிந்தபடியாலே 'இவ்விடத்தை விட்டுக் கிளம்பிப் போனால் போதும்' என்றாய்விட்டது அவன்றனக்கே. நல்லபடியாய்த் தன்னிடம் போய்ச் சேர்ந்தானே யென்று அன்பர்களும் உகக்க வேண்டியதாயிற்று. ஆகவே தன்னடிச் சோதியேற நடந்ததை நல்வார்ததை யென்னக்குறையில்லை யென்க.

5. மெய்ம்மைப் பெருவார்த்தை *செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை யாவது, *மாயனன்றைவர்தெய்வத் தேரினில் செப்பிய கீதையின் ஸாரமான *ஸர்வதர்மாநித்யாதியாகவுள்ள சரம ச்லோகமாகிற வார்த்தை. கண்ணபிரான் வார்த்தையானவிதனைத் திருவரங்கர் தாம் பணித்த வார்த்தையாகச் சொல்லுவானென் னென்னில்; 'வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந் தன்னுள் கவளமால் யானைகொன்ற கண்ணனை அரங்கமாலை' என்றும், 'கொண்டல் வண்ணனைக் கோவலனாய்

வெண்ணெயுண்டவாயன் என்னுள்ளங் கவர்ந்தானை அண்டர்கோன் அணியரங்கன்' என்றும் கண்ணனையும், அரங்கனையும் ஒரேவ்யக்தியாகவன்றே உகந்திருப்பது. பெரியாழ்வார் 'வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை' என்கிற பதிகம் முழுவதாலும் கண்ண பிரான் செய்த தீம்புகளைச் சொல்லிவிட்டு நிகமனப் பாசுரத்தில் 'வண்டுகளித் திரைக்கும் பொழில் சூழ் வருபுனற் காவிரித் தென்னரங்கன் பண்டவன் செய்த கிரீடை யெல்லாம்' என்று ஸ்ரீரங்நாதனே செய்த செயலாகவன்றே தலைக்கட்டிற்று. ஆண்டாள் தானும் 'கண்ணுலங்கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான் திண்ணூர்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து அண்ணுந் திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்த பெண்ணுளன் பேணுமூர் பேருமரங்கமே' என்றிறே மெய்ம்மைப் பெருவார்த்தை யென்ற அப்பாசுரத்தின் கீழ்ப்பாசுரத்திலே சொல்லிவைத்தது. ஆகவே திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை கண்ணன் வார்த்தையே யாம். ''அநாதிகாலம் பாபங்களை கண்டு நீ பட்ட பாட்டை அவைதான் படும்படி பண்ணுகிறேன், இனி உன்கையிலு முன்னைக் காட்டிதாரேன் என்னுடம்பி லழுக்கை நானே போக்கிக் கொள்ளேனே? பாபங்களை நான் பொறுத்துப் புண்யமென்று நினைப்பிடா நிற்க நீ ஶோகிக்கக் கடவையோ?'' (முமுக்ஷுப்படி 267,268); என்றருளிச் செய்த மெய்ம்மைப் பெருவார்த்தையிது.

6. **கஞ்சன் விடுத்தானென்பதோர் வார்த்தை** – தன்னைக் கொல்லப்பிறந்த கண்ணனென்னும் கருந்தெய்வம் *சீதக்கடலுள்ளமுதன்னதேவகி கோதைக் குழலாளசோதைக்குப்போத்தந்த பேதைக் குழவியாய்த் திருவாய்ப்பாடியிலே யொளித்து வளர்கின்றது என்றறிந்த கம்ஸன் 'ஸ துர்தர்மாந் ஆஸுர ஸத்த்வ பேதாந் நேதா ஸமாஹூய ந்ருசம்ஸ சேதா:, ப்ரஸ்தாபயாமாஸ பரைரத்ருஷ் யம் நந்தாஸ்பதம் நாதவிஹாரகுப்தம்' என்று யாதவாப்யுதயத்திற் பணித்த படியே கண்ணனை நலியும் பொருட்டுப் பலபல ஆஸுர ப்ரக்ருதிகளை ஏவினு னென்றும் அவற்றிலே ஒன்று பூதனை யென்னும் பேய்ச்சியாய் பெற்றதாய் போல் வஞ்சக வேஷத்துடன் வந்து நஞ்சுதீற்றிய முலையை யுண்ணக் கொடுத்து முடிந்துபோனகதை ஸுப்ரஸித்தம். அந்தப்பூதனை வந்து மாண்டுபோய் எத்தனையோநாள் கடந்த பிறகு ''கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல் கருநிறச் செம்மயிர்ப்பேயை வஞ்சிப் பதற்கு விடுத்தானென்பதோர் வார்த்தையுமுண்டு'' என்று யசோதை சொல்லுவதாக ஆழ்வாரருளிச் செய்த தானது விரோதி நிரஸநவார்த்தையை அநுஸந்தித்தபடியாமத்தனை. ஆக இந்த ஆறு வார்த்தையும் ரஸிகர்களுக்கு நித்யாநுஸந்தேயம். இவையே உய்யும் ஆறு. (2)

http://acharya.org

3. செல்வமாலை

மூன்றும் பாட்டினீற்றடியிலே ''நீங்காத செல்வம் நிறைந்து'' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைப் பெயர். இங்கு ஆண்டாள் உத்தேசித்த செல்வம் அவளாலேயே ஸ்பஷ்டமாக விளக்கப்பட்டுள்ளது; (அதாவது) ''வள்ளல் பெரும் பசுக்கள் நீங்காத செல்வம்' என்று சொல்தொடருள்ளது. கைம்மாறு கருதாமல் மஹார்த்தங்களை யருளிச் செய்கையில் மஹா உதாரர்களா யிருப்பவர்கள் வள்ளல் எனப்படுவர்கள். ''கவாம் அங்கேஷு திஷ்டந்தி புவநாநி சதுர்தஶ'' என்கிறபடியே பதினன்கு லோகங்களையும் தம்முட் கொண்டிருக் கும் பசுக்களைப் போலே பதினன்கு வித்யைகளையும் தம்முள் தரித்திருப்பவர் களாய், பஞ்சகவ்யம் போன்ற அர்த்த பஞ்சகத்தினுல் ஸகலாத்மாக்களையும் புனிதராக்குமவர்களான மஹாசார்யர்கள் இங்கு விவக்ஷிதர்கள். இவர்களாலே நீங்காத செல்வம் நிறைந்து – அத்யாத்ம வித்யையும் அதன் பலனுன பக்தியும் ஒருநாளும் குறையாமே மேன்மேலும் பெருகிச் செல்லுமென்றபடி; நிறைந்து என்றது நிறைந்திடும் என்றவாறு. உலகத்தார் செல்வமென்று நினைக்குமது உபாதிவிஶேஷங்களாலே நீங்குமது; மேற்சொன்ன செல்வமே நீங்காததாகும். இந்த வள்ளல் பெரும் பசுக்கள் எப்படிப் பட்டவை யென்ருல், தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி வாங்கக் குடம் நிறைக்குமவை. தேங்குதல் – தயங்குதல், தியங்குதல் இவை பர்யாய மொழிகள். ஆசார்யன் திருமாளிகையில் தயங்காமல் புக்கிருக்க வேண்டும். வருஷக்கணக்காக வாஸஞ் செய்வதிலும் ''தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா'' என்று கீதாசார்யன் விதித்த கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் தயங்காமல் குருகுலவாஸம் செய்ய வேணும். (சீர்த்தமுலைபற்றி வாங்க) பசுக்கள் நான்கு முலைக்கண்களாலும் பால் சுரக்கும்; அதுபோல ஆசார்யர்கள் நான்கு ஹேதுக்களாலே சீரிய பொருள் களைச் சுரப்பர்கள். 1. எம்பெருமான் இவர்களை இந்நிலத்திற்கனுப்பியது ஶிஷ்யோஜ்ஜீவனத்திற்கே யாதலால் பகவதாஜ்ஞா பரிபாலன மென்னும் நினைவு, 2. ஶிஷ்யர்கள் வருந்தி வேண்டிக்கொள்ளுதல். 3. அவர்கள் வேண்டிக்கொள்ளாவிடினும் அவர்களது துர்கதி கண்டு ஸஹிக்கமாட்டாமை. 4. தாங்கள் வாய்விட்டுச் சொல்லாதொழி யில் தரிக்கமாட்டாமை – ஆக இப்படிப்பட்ட நான்கு ஹேதுக்களாலும் ப்ரவசனம் செய்ய வேண்டியவர்களாத லால் இவை சீர்த்த முலைகளாம். (பற்றி வாங்கக் குடம் நிறைக்கும்) அர்ஜுநன் ''ஶிஷ்யஸ்தேஹம்சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்'' என்று ஒரு சொல் சொல்லி ப்ரார்த்தித்தவாறே அத்யாயமத்யாய மாகக் கறந்த கீதாசார்யனைப் போலவும், ''நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முநிபுங்கவம்'' என்கிறபடியே வான்மீகி முனிவர் கேட்டவாறே ஸ்ரீராமாயணும்ரு தத்தைக் கறந்த நாரதமஹர்ஷி போலவும்,

''மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யா பிவாத்யச'' என்கிறபடியே மைத்ரேயர் கேட்டவாறே 'சிதசிதீஸ்வரதத் ஸ்வபாவ போகாபவர்க்கததுபாயகதிகளைக் கறந்த பராஶரபகவான் போலவும், 'ஹிதமருளிச்செய்யவேணும்' என்று ப்ரார்த்தித்தவாறே 'கடல்வாய்ச் சென்று மேகங் கவிழ்ந்திறங்கிக் கதுவாய்பட நீர்முகந்தேறி யெங்கும் குடவாய்ப்பட நின்று மழை பொழியும்' என்றுப்போல தாரை தாரையாக வர்ஷித்துக் குடங்குட மாக நிறைப்பார்களாம் மஹாசார்யர்கள். குடம் என்பது பாத்ரமென்றபடியாய் ஆசார்ய தயாபாத்ர பூதர்களான ஸச்சிஷ்யர்களைச் சொன்னபடி. இவர்களை நிறைக்கையாவது — தம்மோடொக்க ஞானபூர்த்தியுடையவர்களாகச் செய்கை. இப்படிச் செய்யவல்ல வள்ளல் பெரும் பசுக்களாலே (மஹாசார்யர்களாலே) நீங்காத செல்வம் நிறைந்திடும் — ஒரு நாளும் அழியாததும் குறையாததுமான ஜ்ஞானபக்திச் செல்வம் நிறையும் என்றதாயிற்று.

4. மகிழ்மாலை

நாலாம்பாட்டின் ஈற்றடியில் ''நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்து'' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைப் பெயர். திருப்பாவையில் மார்கழி நீராட்ட மென்கிற ப்ரஸ்தாவம் நாலைந்து பாசுரங்களில் வருகிறது. நீரிலே படிந்து குடைந்தாடுகையாகிற நீராட்டமன்று ஆண்டாளுக்கு விவக்ஷிதம். பின்னை எது விவக்ஷிதமென்னில்; அதை அடுத்தபடி தெரிவிப்போம்; நீரில் படிந்தாடுகை விவக்ஷிதமன்று என்றதை முன்னம் மூதலிப்போம். முதற்பாட்டில் ''நீராடப் போதுவீர் போதுமினோ'' என்று நீராட வருகிறவர்களெல்லீரும் வாருங்களென்று அழைத்து, இந்த நாலாம் பாட்டில் மேகத்தையும் விளித்து ''நாங்களும் மார்கழி நீராட வுலகினில் பெய்திடாய்'' என்று மழைபெய்ய நியமித்திருக்கிருள். இவற்றைப் பார்க்கும்போது நீராடுவதற்கே ஆண்டாள் (அல்லது ஆய்ச்சிகள்) புறப்படுவதாகவும் நீராடுவதற்கே தோழிகளையும் அழைப்பதாகவும் நீராடுவதற்கு வேண்டிய தீர்த்தஸம்ருத்தி யுண்டாவதற்காகவே மழைபெய்ய மேகதேவதையை நியமிப்பதாகவும் தெரியவருகிறது. இதுவே உண்மைப் பொருளாகில் இவர்களெல்லாருங்கூடி ஒரு பொய்கைக் கரைக்குச் சென்றிருக்க வேண்டும். நீராடுமிடம் பொய்கை யன்றோ. இவர்கள் ஒரு பொய்கைக் கரையில் சென்று சேர்ந்ததாகத் திருப்பாவையில் ஒருபாட்டிலுமில்லை. ஸ்ரீநந்தகோபருடைய திருமாளிகைக்குச் சென்று அங்கு நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த மலர்மார்பனை யுணர்த்தி நப்பின்னைப் பிராட்டியை யுணர்த்தி அவர்களைத் தோத்திரஞ்செய்து, சிற்றஞ் சிறுகாலை யெழுந்து இங்கு நாம்

http://acharya.org

வந்தது எதற்காக வென்னில் 'உன்றன்னோடுற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம் என்று விண்ணப்பம் செய்வதற்காகவே யென்று தலைக்கட்டியிருக்கிறார்கள். இப்படி திவ்ய தம்பதிகளிடம் சென்று ஸேவிப்பது தான் இவர்கள் தாம் கொண்ட மார்கழி நீராட்ட மென்று நன்கு விளங்கிற்றாயிற்று. ஆகவே 'நீராடப் போதுவீர்' 'நாங்களும் மார்கழி நீராட' 'குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே' 'உக்கமுந் தட்டொளியும் தந்துன் மணாளனை இப்போதே யெம்மை நீராட்டு' 'மாலேமணிவண்ணா மார்கழி நீராடுவான்' என்கிற பாசுரங்களில் ப்ரஸ்தாவிக்கப் பட்ட நீராட்டமானது தண்ணீரில் தோய்வதன்று என்று தேறிற்று. இனி, பகவத் ஸம்ஶ்லேஷத்தையும் பாகவத ஸம்ஶ்லேஷத்தையும் ஆசார்யகுல அவகாஹனத்தையுமே நீராட்டமாகச் சொல்லிற்றென்று நிஷ்கர்ஷிக்கப் போது மான ஔசித்யமுள்ளது. இதை மூவாயிரப்படியில் பெரியவாச்சான்பிள்ளை யும், ஆறாயிரப்படியில் அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும் ஸ்பஷ்டமாக விளக்கியேயுள்ளார்கள். 'நீராடப்போதுவீர்' என்றவிடத்துப் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி வருமாறு — ''(நீராட) இத்தால் இவர்கள் நினைக்கிறது க்ருஷ்ணஸம்ஶ்லேஷம். தமிழரும் கலவியைச் சுனையாடலென்றார் கள். 'ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்' என்று பகவத் ஸம்ஶ்லேஷத்துக்கு க்ரீஷ்மகாலத்தில் குளிர்ந்த மடுவில் படிவதை த்ருஷ்டாந்த மாகச் சொல்லிற்றிறே'' என்று. ஆறுயிரப்படி ஸ்ரீஸூக்தியுமிப்படியே. ஏவஞ்ச, மார்கழி நீராட்டமென்பது மார்கழி மாதத்திற் செய்யும் ஸ்நாநமன்று என்பது சிக்கெனக் குறிக்கொள்ளத்தக்கது. மார்கஶீர்ஷ மென்னும் வடசொல்லே மார்கழி யென்று விகாரப்பட்டதாதலால் பகவானிடத்தில் சென்று சேர்வதற்கு உறுப்பான மார்கங்களில் — உபாயங்க ளில் எது ஶீர்ஷமானதோ (தலையானதோ) அதில் அவகாஹிப்பது தான் மார்கழி நீராட்டமாகக் கூறப்படுவது. உபாயங்க ளில் தலையான உபாயம் எது வென்றால் ''காலை நன்ஞானத்துறைபடிந்தாடி'' என்று (திருவிருத்தத்தில்) நம்மாழ்வாரருளிச் செய்தபடியே நன்ஞானத்துறையான ஸதாசார்ய ஸன்னிதியிலே அவகாஹிப் பதுதான். இதனிலும் மேம்பட்ட தொன்றுண்டு; அதாவது

''ஸ்வாபிமாநத்தாலே ஈஶ்வராபிமாநத் தைக் குலைத்துக்கொண்ட விவனுக்கு ஆசார்யாபிமாநமொழிய கதியில்லை என்று பிள்ளை பலகாலு மருளிச் செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும். ஸ்வஸ்வா தந்த்ர்யபயத்தாலே பக்தி நழுவிற்று. பகவத் ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே ப்ரபத்தி நழுவிற்று. ஆசார்யனையும் தான் பற்றும் பற்று அஹங்கார கர்ப்பமாகையாலே காலன் கொண்டு மோதிர மிடுமோ பாதி, ஆசார்யாபிமாநமே உத்தாரகம்''

என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஶாஸ்த்ர

http://acharya.org

(443–447) ஸர்வஸ்வமான ஆசார்யாபிமாநம், அதில் படிந்து விட்டால் மகிழ்ச்சிக்குக் குறையேது? இந்த மகிழ்ச்சியே நாலாம் பாட்டில் ''நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராட'' என்பதனு லுணர்த்தப் படுகிறது.

இப்பாட்டுக்காக மாலைமகுட மிட்டவர்கள் மகிழ்ச்சிமாலையென்ருே, மகிழ்வுமாலையென்ருே இடாமல் மகிழ்மாலையென்று இட்டதனுல் மகிழ் மாலைமார்பினரான நம்மாழ்வாரைப் பற்றி இப்பாட்டில் பேசவேணு மென்கிற கோரிக்கையும் தெரிந்து கொள்ளலாகிறது. இப்பாட்டில் ''ஆழிமழைக் கண்ணு!'' என்று (மேகமாக) விளிக்கப்படுபவர் நம்மாழ்வார் என்பதும் பொருந் தும். இதற்குச் சார்பாகப் பூருவர்கள் பணித்தவோர் அற்புதமான ஶ்லோக ரத்நமும் இங்கே அநுஸந்திக்கத்தகும் அதாவது – என்பதாம். இதன் பொருளாவது,

லக்ஷ்மீநாத$_2$ாக்யஸிந்தெ$_4$ள ஶடரிபுஜலத$_3$: ப்ராப்ய காருண்யநீரம்
நாத$_2$ாத்$_3$ராவப்$_4$யஷிஞ்சத் தத$_3$நுரகு$_4$வராம்பே$_3$ாஜசக்ஷுர்ஜராப்$_4$யாம்।
க$_3$த்வா தாம் யாமுநாக்$_2$யாம் ஸரிதமத$_2$ யதீந்த்$_3$ராக்ய பத்$_3$மாகரேந்த்$_3$ரம்
ஸம்பூர்ய ப்ராணிஸஸ்யே ப்ரவஹதி ஸததம் தேஶிகேந்த்$_3$ர ப்ரமௌகை$_4$:॥

நம்மாழ்வாராகிற காளமேகம் ஶ்ரிய:பதியென்னும் கடலிலே புக்குக் கருணையாகிற நீரை முகந்துகொண்டு ஸ்ரீமந்நாதமுனிகளாகிற மலை யுச்சியில் வர்ஷிக்க, அந்த மழை உய்யக்கொண்டார், மணக்கால் நம்பிகளாகிற இரண்டு அருவிகளாகப் பெருகி யமுனைத்துறைவர் (ஆளவந்தார்) என்னும் ஆற்றிலே தங்கி, அங்கு நின்றும் பெருகி எம்பெருமானுராகிற ஏரியிலே நிறைந்து, வீராணத்தேரியின் தீர்த்தம் எழுபத்துநான்கு மதகு வழியாகப் பெருகிப் பலவூர் வயல்களிலே பாயுமா போலே எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளின் வழியாய் ஸம்ஸாரி சேதநர்கள் பக்கலிலே இடையருது பெருகிக் கொண்டிருக்கின்ற தென்கை. ஆக இப்படிப்பட்ட மேகம் வர்ஷிக்கப் பெற்றதனுல் நாமெல்லாரும் மகிழ்ந்து மார்கழி நீராடப் பெறுகிருேம்.

5. பிழைமாயும் மாலை

ஐந்தாம்பாட்டில் 7,8 அடிகளில் ''போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைப் பெயர். (போய பிழையும் புகுதருவானின்றனவும் தீயினில் தூசாகும்) ஆசார்ய ஸமாஶ்ரயணம் பெறுவதற்கு முன்னே நிகழ்ந்த பாபங்கள் போயபிழையாம். ஆசார்யனை யடிபணிந்த பின்பு புத்திபூர்வகமாகப் பாபங்கள் விளைவதற்கு ப்ரஸக்தியில்லை. ப்ரக்ருதி ஸ்வபாவத்தாலும் ஸஹவாஸ தோஷாதிகளாலும் ப்ராமாதிகமாகச் சில பிழைகள் நேரும். அவை புகுதருவானின்ற பிழைகளாம்.

ஆக, இருவகுப்பான அபசாரங்களும் தீயிலிட்ட தூசு போல் உருமாய்ந்தொழியு மென்கை.

''வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ் ஐயைந்துமைந்தும்'' என்று ஆன்ருேரருளிச் செய்தபடி திருப்பாவை யென்னுமிந்த திவ்யப்பிரபந்தமானது வேதமனைத்துக்கும் வித்தாகையாலே, ''தததிகம உத்தர பூர்வாகயோ ரஶ்லேஷவிநாஶௌ தத்வ்யபதேஶாத்'' என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தில் விளக்கப் பட்ட வேதாந்தவிழுப்பொருள் இங்கே நன்கு விளங்குமாறு காண்க. சாரீரக மீமாம்ஸையில் நான்காவது அத்யாயத் திலுள்ள அந்த ஸூத்ரம் வித்யையின் பலனைச் சொல்லுவதாம். கீழே வித்யா ஸ்வரூவம் ஶோதிக்கப்பட்டது. இப்போது வித்யையின் பலன் ஶோதிக்கப்படுகின்றது என்று பாஷ்ய காரர் அவதாரிகை யிட்டருளியுள்ளார். ப்ரஹ்மவித்யை யுணர்ந்த புருஷனுக்குப் பூர்வபாபங்களின் விநாசமும் உத்தர பாபங்களின் அலேபமும் உபநிஷத்துக்களில் ஓதப்படுகிறது. பூர்வபாபம், உத்தர பாபம் என்கிற நிர்தேசம் உபநிஷத்தில் இல்லை; ப்ரஹ்மஸூத்ரத்தில் தானுள்ளது. உபநிஷத்திலில்லாததை ஸூத்ரகாரர் எங்ஙனம் சொல்லுகிருரென்னில்— இங்ஙனம் சொல்லும்படியாகவாயிற்று உபநிஷத் வாக்யமுள்ளது. கேண்மின்; ''தத் யதா இஷீகதூலம் அக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே'' என்னுமொரு உபநிஷத் வாக்யமானது பாபங்களின் விநாசத்தைக் கூறுகிறது. ''யதா புஷ்கரபலாஶே ஆபோ ந ஶ்லிஷ்யந்தே ஏவம் விதி பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே'' என்றும், ''தஸ்யைவாத்மா பதவித் தம்விதித்வா, நகர்மணு லிப்யதே பாபகேந'' என்றுமுள்ள உபநிஷத் வாக்யங்கள் ப்ரஹ்மவித்தினிடத்தில் பாபங்கள் ஒட்டவேமாட்டா என்கின்றன. இவை ஒன்ருேடொன்று சேராமலிருக் கின்றன; ஏனென்னில்; பாபங்கள் ஒட்டவே மாட்டா என்னும்படியாலுல் அவற்றுக்கு விநாசம் சொல்ல ப்ரஸக்தி ஏது? ஒட்டிலைன்ருே விநாசம் சொல்லவடுக்கும். அஸங்கதமாக உபநிஷத்து ஓதாதாதலால், பாபங்கள் நசிக்குமென்று ஶ்ருதி பூர்வபாப விஷயமென்றும், பாபங்கள் ஒட்டமாட்டா என்கிற ஶ்ருதி உத்தரபாப விஷயமென்றும் ஸூத்ரகாரரால் விஷய விபாகம் செய்யப்பட்டது ப்ரஹ்மவித்யா ப்ராப்திக்கு முற்பட்ட பாபங்கள் நசித்தொழியும்; ப்ரஹ்மவித்யா ப்ராப்திக்குப் பிறகு புத்திபூர்வகமாகப் பாபம் நேராது; நேர்ந்தால் அவை தாமரையிலையில் தண்ணீர் போலே ப்ரஹ்மவித்தினிடத்தில் ஒட்டவே மாட்டா என்று விஷயம் வகுக்கப்பட்ட தாகி ஸமஞ்ஜஸமாயிற்று.

ஶாஸ்த்ரங்களில் ''நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி ஶதைரபி'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. கருமங்

களின் பலனை அநுபவித்தே தீரவேணும்; வேறு விதமாகக் கருமம் தொலையாது; கல்பகோடி ஶதமானாலும் கருமபலாநுபவம் பண்ணியேயாகவேணும்— என்று சொல்லப்பட்டிருப்பதற்கு முரணாக பிழைகள் மாய்ந்தொழியுமென்று எங்ஙனே சொல்லலாம்? என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமானால்; ப்ரஹ்மவித்யா மாஹாத்மியத்தினால் கூடுமென்று ஸித்தாந்தம் செய்யப்படுகிறது. 'நாபுக்தம் க்ஷீயதே கர்ம' என்கிற ஶாஸ்த்ரத்துக்கும் உத்தரபூர்வ பாபங்களின் அச்லேஷ விநாசங்களைச் சொல்லுகிற ஶாஸ்த்ரத்துக்கும் பரஸ்பரவிரோதந்தானுமில்லை; கேண்மின்; ஒருவன் நெருப்பினுடைய பிரபாவத்தைப் பேசுகிறான்; மற்றொருவன் தண்ணீரினுடைய பிரபாவத்தைப் பேசுகிறான். நெருப்புப் பற்றினால் வீடுவீடாக தஹித்தேவிடுமென்கிறான் முந்தினவன்; தண்ணீர் எப்படிப்பட்ட நெருப்பையும் அணைத்துவிடும் என்கிறான் பிந்தினவன்; இவற்றுக்கு ஏதேனும் பரஸ்பரம் விரோதமுண்டோ? தண்ணீரில்லாத விடத்தில் நெருப்புக்கு ப்ராபல்யமும், தண்ணீருள்ள விடத்தில் நெருப்புக்கு அகிஞ்சித்கரத்துவமும் சொல்லப்படுவது பொருத்தந்தானே. அதுபோல ப்ரஹ்மவித்யாப்ராப்தியில்லாத வ்யக்திகளிடத்தில் கர்மப்ராபல்யமும், அஃதுள்ளவிடத்தில் கருமங்களுக்கு அகிஞ்சித்கரத்துவமும் தேறுமாயின் இதில் பொருத்தமின்மையொன்றுமில்லையே. இத்தகைய வேதாந்த விழுப்பொருளை போயபிழையுமித்யாதி திவ்யஸூக்தி வெளியிட்டதென்க.

6. குளிர்மாலை

ஆறும்பாட்டின் ஈற்றடியில் ''உள்ளம் புகுந்து குளிர்ந்து'' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைக் குறிப்பு. இங்கு உள்ளம் குளிர்ந்ததாகச் சொல்லப் படுகிறது. எதனால் குளிர்ந்ததென்னில், அரியென்ற பேரரவம் உட்புகுந்ததனாலென்று சொல்லப்பட்டுள்ளது. அரி யென்ற பேரரவம் யாருடையதென்னில், முனிவர்களும் யோகிகளுமானவர்களினுடையதென்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. முனிவர்கள் என்பதும் யோகிகள் என்பதும் பர்யாய நாமங்கள் போலவே தோன்றும்; ஸ்ரீமல்லக்ஷ்மணமுநி: என்றாலும், ஸ்ரீமல்லக்ஷ்மணயோகீ என்றாலும் பொருளில் வாசியில்லையே; ஸ்ரீமத்வரவரமுநி: என்றாலும் ஸ்ரீமத்வரவரயோகீ என்றாலும் அப்படியேயன்றோ. வாசியற்றிருக்க, வாசியுள்ளது போல் சொல்லியிருப்பதற்குப் பொருளென்? என்று பரிசீலிக்கவேணும். இத்தகைய சொற்செறிவு மற்றும் பலவிடங்களிலும் காணப்படுவதுண்டு; ஒன்றிரண்டிடங்களை யெடுத்துக் காட்டுகிறோம்; ''வைகுண்டே து பரேலோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ'' என்று பரமபதத்தில் இருப்பைச்

http://acharya.org

சொல்லுகிற பகவச்சாஸ்த்ர ஶ்லோகத்தில் 'பக்தை: பாகவதைஸ் ஸஹ'' என்றுள்ளது. பக்தர்களுக்கும் பாகவதர்களுக்கும் என்ன வாசி? திருவாய்மொழியில் 'சூழ்விசும்பணி முகிற்' பதிகத்தில் 'வைகுந்தத்தமரரும் முனிவரும் வியந்தனர்' என்றருளிச் செய்யப்பட்டது. அமரரும், முனிவருமாகிற வாசி எதனால்? கேண்மின்; பகவத்ப்ரவணர்களில் இரு வகுப்புண்டு; குணாநுபவ நிஷ்டர்களென்றும், கைங்கர்ய நிஷ்டர்களென்றும். இளையபெருமாள் போல்வார் கைங்கர்ய நிஷ்டர்கள்; பரதாழ்வான் போல்வார் குணாநுபவ நிஷ்டர்கள். ஆக இந்த வாசியைப் பற்றவே ஆங்காங்கு இரண்டு சொற்களையிட்டுச் சொல்வது *முனிவர்களும் யோகிகளுமென்ற இவ்விடத்தும் இவ்விரு வகுப்பினர்களே விவக்ஷிதர்களாகக் கடவர்கள். இவர்கள் பள்ளியை விட்டெழுந்திருக்கும்போது அரியரியரியென்று உத்கோஷித்துக் கொண்டேயெழுந்திருக்கின்றார்களாம். அரி என்னும் சொல்லுக்கு மூன்று பொருள்கள் ப்ரஸித்தமானவை; தென்மொழியில் ஹகாரம் கிடையாதாதலால் ஹரியென்ற வடசொல் அரியெனத் திரியும். பத்துப் பொருள்களையுடைய அந்த வட சொல்லுக்கு நாராயணனென்ற பொருளும், சிங்கமென்ற பொருளும் திவ்யப்பிரபந்தங்களில் ப்ரஸித்தமாக உள்ளன. அரி: என்றே ஒரு வடசொல் உண்டு. அதற்கு விரோதியென்று பொருள். திருப்பல்லாண்டில் 'அந்தியம் போதிலரியுருவாகி அரியை அழித்தவனை'' என்றவிடத்து முதலிலுள்ள அரி சிங்கமென்ற பொருளிலும், இரண்டாவதாகவுள்ள அரி விரோதியென்ற பொருளிலும் பிரயோகிக்கப்பட்டிருப்பது காண்க. *அரியென்ற பேரரவ மென்ற விவ்விடத்து மேலே காட்டின முப்பொருளும் விவக்ஷிதமே. சிலர் நாராயணனை விவக்ஷித்து ஹரியென்பர்கள்; சில *அசோதையிளஞ்சிங்கத்தை விவக்ஷித்து ஹரியென்பர்கள்; சிலர் விரோதியை (அதாவது விரோதி நிரஸநத்தை) விவக்ஷித்து அரியென்பர்கள். குணாநுபவநிஷ்டர்கள் ''ஹரிர் ஹரதி பாபாநி'' என்கிறபடியே பாபஹரத்வம் முதலான திருக்குணங்களைச் சிந்தைசெய்து கொண்டும், அசோதை யிளஞ்சிங்கம் *காட்டை நாடித்தேனுகனும் களிறும் புள்ளும் உடன் மடிய வேட்டையாடி வரும் சௌர்ய வீர்ய பராக்ரமங்களைச் சிந்தைசெய்து கொண்டும் எழுந்திருப்பர்கள். கைங்கர்ய நிஷ்டர்கள் *மற்றை நங்காமங்கள் மாற்றென்கிற விடத்தில் கழிக்கப்படுகிற விரோதி தலைகாட்டாதிருக்க வேணுமே யென்று விரோதியைப் பற்றின சிந்தனை யோடு எழுந்திருப்பர்கள். ஸ்வரூப விரோதியென்றும், உபாயவிரோதி யென்றும், ப்ராப்யவிரோதி யென்றும் விரோதிகள் மூவகைப்பட்டிருக்கும். ஸ்வரூபவிரோதியும், உபாயவிரோதியும் லேசாகக் கழிந்துவிடும். ப்ராப்யவிரோதி

http://acharya.org

கழிவது மிகவுமரிது. ஸ்தோத்ரரத்நத்தில் ''கதாஹமைகாந்திக நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி'' என்று ஆளவந்தார் அருளிச்செய்தவிடத்தில் உய்த்துணர வேண்டிய மஹார்த்தமிது. இதை மேலே (29) காமங்கள் மாற்று மாலை என்றவிடத்து இன்னமும் விவரிப்போம். ஆக இவ்வர்த்த விசேஷங்கள் ஸ்புரிக்கும்படி உச்சரிக்கப்படுகிற அரியென்ற பேரரவம் உட்புகுந்தால் உள்ளம் குளிராதிருக்க வழியுண்டோ? கமர்பிளந்த விடத்தே ஒரு பாட்டம் மழை பொழிந்தாற்போலே குளிர்ச்சி மிக்கிருக்குமத்தனையிறே.

7. தேசமாலை

ஏழாவது பாட்டின் ஈற்றடியில் 'தேசமுடையாய்' என்றதை நோக்கியது இந்த மாலைக்குறிப்பு. தேசம் என்றொரு தமிழ்ச்சொல் கிடையாது. தேஜஸ்ஸென்கிற வடசொல் தேசு என்றும் தேசம் என்றும் திரியும். ஜநபதவாசகமான தேசமென்னும் வடசொல்லும் தேசமெனத் தற்சமமாகும். இருபொருளும் இங்கு விவக்ஷிதமே. தேஜஸ்ஸென்னும் பொருளை முன்னம் விவரிப்போம். 1. விலக்ஷண வ்யக்திகளிடத்திலே ''ரூபமேவாஸ்யைதந் மஹிமாநம் வ்யாசஷ்டே'' என்று வேதமோதின கணக்கிலே முகத்திற்காணும் ப்ரஹ்ம வர்ச்சஸ்ஸுடைமை சொன்னபடி. ''ப்ரஹ்மவித இவ தே ஸோம்ய! முகம் பாதி'' என்ற உபநிஷத்வாக்யமும் இங்குக் கூட்டிக் கொள்ளத்தகும். 2. பகவாந் என்கிற திருநாமத்திற்கு ஷாட்குண்ய முடையவனென்று பொருள். ''ப்ரக்ருஷ்டம், விஜ்ஞாநம், ப$_{1}$லமதுலமைஶ்வர்யமகி$_{2}$லம் விமர்யாதம் வீர்யம் வரத$_{3}$! பரமாஶக்திரபி ச பரம் தேஜஶ் சேதி ப்ரவர கு$_{3}$ணஷட்கம்'' (வரதராஜ.ஸ்தவே 15) என்று கூரத்தாழ்வானருளிச் செய்தபடியே ஜ்ஞாநம், ஶக்தி, பலம், ஐஶ்வர்யம், வீர்யம், தேஜஸ்ஸு என்கிற ஆறு குணங்களுக்கு ஷாட்குண்ய மென்று பெயர். இவற்றுள் தேஜஸ்ஸும் சேர்ந்தது. தேஜஸ்ஸாவது இன்னதென்பதை பட்டர் விவரித்தருளுமிடத்து ''ஸஹகார்யபேக்ஷ மபி ஹாதுமிஹ ததநபேக்ஷகர்த்ருதா, ரங்கதந! ஜயதி தேஜ இதி'' என்றருளிச்செய்தார். அஸஹாய ஶூரத்வமே தேஜஸ்ஸென்றதாயிற்று. இப்பாட்டில் உணர்த்தப்படுகிற வ்யக்திவிசேஷத்தினிடத்தில் இக்குண முமுள்ளதாகச் சொல்லிற்றாயிற்று. ஏகாகியாயிருந்து கரதூஷணாதிகளான பதினாலாயிரம் அரக்கர்களை அவலீலையாக மாய்த்தொழித்த சக்ரவர்த்தி திருமகனுரை வேதாந்த தேசிகன் ரகுவீரகத்யத்தில் 'அஸஹாய ஶூர!' என்று விளித்தார். அப்படிப்பட்ட போர்வல்லமையன்று இங்கு விவக்ஷிதம்; தத்த்வஹிதபுருஷார்த்தங்களை உபபத்தி மிக்கதாக ஸ்தாபிக்கும் வாதப்போரில் அஸஹாய

ஸாமர்த்யத்தைச் சொன்னபடியாம்.

பெரியதிருவந்தாதியில் நம்மாழ்வார் ''உண்ணுட்டுத் தேசன்றே' என்கிற பாட்டில் ஒரு விலக்ஷணமான தேஜஸ்ஸை யருளிச் செய்கிருர்; அதற்கு உண்ணுட்டுத் தேசு என்று திருநாமம் சாற்றினர்; 'பரமபதத்துத் தேஜஸ்ஸு' என்பது பொருள். அதுதான் எதுவென்னில்; ''மண்ணுட்டிலாராகி எவ்விழி விற்ருனுலும் ஆழியங்கை பேராயற்கு ஆளாம் பிறப்பு– உண்ணுட்டுத் தேசன்றே'' என்றுள்ளது பாசுரம். (கருத்து) எவ்வகையான இழிகுலத்திற் பிறந்தவர்களாளுலும் எவ்வகையான நடத்தைகளே யுடையவர்களாஞலும் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருத்தலாகிற ஒரு நலம் உள்ளதாகில் அப்படிப்பட்டவர்களுடைய பிறப்பு நித்யஸூரிகளின் திருமேனி போலே மிக்க தேஜஸ்ஸை யுடையதேயாம் என்கை. ஆசார்ய ஹ்ருதயத்தில் (81) ''பண்டை நாளிற் பிறவி உண்ணுட்டுத் தேசிறே'' என்ற ஸ்ரீஸூக்தியும் இங்கே இணக்கத்தக்கது. பண்டைநாளிற் பிறவி யென்பது இங்கே ஸங்கேதவ்யபதேசம் திருவாய்மொழியில் (9–2) 'பண்டை நாளாலே' என்கிற பதிகத்தில் ''பல்படிகால் குடிகுடிவழி வந்தாட் செய்யும் தொண்டர்'' ''உன் பொன்னடிக் கடவாதே வழிவருகின்ற வடியர்'' ''தொல்லடிமை வழிவருந் தொண்டர்'' என்று சொன்னபடியே அடிமைக்கு இடையூருன ஜன்மாதிகளால் வரும் அபிமானமின்றிக்கே கைங்கர்யா நுரூபமான குடிப்பிறவி ''ஆழியங்கைப் பேராயற்காளாம் பிறப்பு – உண்ணுட்டுத் தேசன்றே'' என்கிறபடியே பகவத் விமுகர் நிறைந்து புறநாடான லீலாவிபூதி போலல்லாமல் அவனுக்கு அந்தரங்கமாயிருக்கிற பரமபதத்துத் தேஜஸ்ஸு யுடையதன்ரே என்பது மேலே யெடுத்துக் காட்டின ஸ்ரீஸூக்தியின் கருத்து. ஆக, இத்தகைய தேஜஸ்ஸு பொலிந்த திருமேனியையுடைய வ்யக்தி விஶேஷமும் இப்பாட்டிஞல் உணர்த்தப் படுகின்றதென்று கொள்ளலாம்.

இனி ஜநபதவாசகமான தேச ஶப்தமாகக் கொண்டால் ஸகலதேசங்களேயும் தன்கையிலே யுடைமை சொல்லிற்ருகும். ஸகலதேசங்களும் மென்பதில் உபயவிபூதியுமடங்கும். ''பொன்னுலகாளீரோ, புவனிமுழு தாளீரோ'' என்று ஆழ்வாரருளிச் செய்தது உபயவிபூதியையும் தாமிட்ட வழக்கு என்னும் அத்யவஸாயத்தாலன்ரே. 'அருளார் திருச் சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்' என்றும், 'பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமேயாள்கின்ற வெம்பெருமான்' என்றும் உபயவிபூதி நிர்வாஹகனுகச் சொல்லப்பட்ட எம்பெருமான் *தம்மையே யொக்க அருள்செய்யுங் கணக்கிலே சில வ்யக்திவிஶேஷங் களிடத்திலே அந்த நிர்வாஹத்தை

ஒப்படைப்பதுண்டாகையாலே அத்தகைய வொரு வ்யக்தி விஶேஷத்தை இங்கு விளித்தபடியாம். ஆக, தேசமுடையாய்! என்றது உபயதேசவாஸிகளையும் தன்கையிலே யுடையாய்! என்றதாயிற்று. ஸ்வாமி ராமாநுஜர்க்கு உடையவர் என்ற திருநாமமும் இப்பொருளதே. (7)

8. அருள்மாலை

எட்டாம்பாட்டின் ஈற்றடியில் *ஆவாவென்றுராய்ந்தருளென்றதை நோக்கியது இந்த மாலைக்குறிப்பு. தேவாதி தேவனை நாம் சென்று ஸேவித்தால் (அவன்) ஆராய்ந்து ஆவா வென்றருளும் என்று இங்குள்ளது. வடமொழியில் (ஹாஹா) என்கிற அவ்யயச் சொல்தொடர் தமிழில் ஆவா வென்று திரிந்தது. தமிழில் ஹகாரம் கிடையாதாதலால் (ஹா) என்பது ஆவென்றுகும். எனவே ஹாஹா வென்று அருள் செய்வன் என்றதாயிற்று. ஸந்தோஷம் மிக்கபோதும் ஹாஹா என்பதுண்டு. ஸங்கடம் மிக்கபோதும் ஹாஹா என்பதுண்டு. ஐயோ! என்பது போலவாமிது. திருப்பாணாழ்வார் பெரியபெருமாளை ஆனந்தமாக ஸேவித்தபோது ''நீலமேனி ஐயோ! நிறை கொண்டதென்னெஞ்சினையே'' என்றும், ''செய்யவாய்ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே'' என்றும் பேசினவிடங்க ளில் ஐயோ வென்றது ஸந்தோஷாதிஶயத் தைக்காட்டுவதன்றோ. இனி, ஸங்கடத்தில் ஐயோவென்பதற்கு நாம் உதாரணம் காட்டவேண்டுமோ? உலகில் ஐயோ வென்பதெல்லாம் ஸங்கடத்தில்தானே. ஆக, இங்கு எம்பெருமான் ஹாஹா வென்றருள்வன் என்றது ஸந்தோஷத்தி னுலுமாம்; ஸங்கடத்தினுலுமாம். என்ன வென்று ஸந்தோஷமென்னில்; இவ்வாயர் சிறுமிகள் குளிருக்கு அஞ்சியும் கோபாலக்கிழவர்களுக்கு அஞ்சியும் இடத்தைவிட்டுப் பெயராமல் கிடந்துறங்க வேண்டியிருக்க, இங்ஙனே சிற்றஞ்சிறுகாலையில் எழுந்து பதறியோடி வந்தது ஆற்றுமையின் கனத்தாலன்றோ? இவர்களுடைய பக்திதான் என்னே! 'ஜந்மாந்த்ர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதிபி:, நராணும் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே' என்று மிகவரிதாகச் சொல்லப்பட்ட பக்தி இவர்களுக்கு இவ்விளமையில் அநாயாஸமாகக் கிடைத்தபடி என்னே! நம்முடைய பிரிவுக்கு ஆற்றமாட்டாமல் இவர்கள் என்ன பாடுபடுகிருர்கள்! 'ஸ மஹாத்மா ஸுதுர்லப:' என்று 'ஒரு வ்யக்தி பெறுதற்கரிது' என்று நாம் சொல்லியிருக்க, இத்தனை வ்யக்திகள் எளிதாகக் கிடைப்பதே! ஹாஹா! என்ன ஆஶ்சர்யம்! என்ன அதிஶயம்! என்று எம்பெருமானுக்கு ஸந்தோஷமுண்டாகும். ஆக, நாம் சென்று ஸேவித்தால், ஆராய்ந்து – நம்முடைய பக்திப் பெருங் காதலை ஆராய்ந்து பார்த்து,

http://acharya.org

ஆவாவென்று அருள்வன் – ஸந்தோஷா திஶயங்காட்டி க்ருபைபண்ணுவன் என்றதாயிற்று.

இனி, ஸங்கடப் பொருளையும் விவரிப்போம். சக்ரவர்த்தி திருமகன் தண்டகாரணியத்திற் கெழுந்தருளிய போது மஹர்ஷிகளின் ஆஶ்ரமங்களில் தானே சென்று அவரவர்கள் அரக்கர்களால் பட்ட நலிவுகளை விசாரித்து ஈரக்கையாலே அவர்களைத் தடவிக் கொடுக்க வேணுமென்றும் அவர்களுக்கு அபயப்ரதாநம் பண்ணியருளவேணுமென்றும் (பெருமாள்) நினைப்பிட்டிருக்க, முந்துற முன்னம் அந்த மஹர்ஷிகள் தாமே பெருமாளுடைய பர்ணசாலையேறத் திரண்டோடிவந்து படுகாடுகிடக்க, அதைக் கண்ட பெருமாள் தாம் பெரிய அபராதம் செய்துவிட்டதுபோல வருத்தங்கொண்டு ''ப்ரஸீதந்து பவந்தோமே ஹ்ரீரேஷா ஹி மமாதுலா, யதீத்ருஶை ரஹம் விப்ரை: உபஸ்தேயை ருபஸ்தித:'' என்று அஞ்ஜலி பந்தத்துடனே 'மஹர்ஷிகாள்! என்னுடைய மஹத்தான அபராதத்தை நீங்கள் க்ஷமித்தருள வேணும்; எனக்கு வாசாமகோசரமான வெட்கத்தை யுண்டாக்கிவிட்டீர்களே! உங்களிடந்தேடி நான்வரவேண்டியிருக்க, என்னிடந்தேடி நீங்கள் வந்தது தகுதியன்றே; என்னைப் பெரிய குற்றவாளனாக்கி விட்டீர்களே! இக்குற்றத்தை நீங்கள் பொறுத்தேயாகவேண்டும்' என்றார். அவ்வாறாக, 'பெண்காள்! நீங்கள் மிகவும் சிரமப்பட்டு இவ்வளவும் வந்தீர்களே; உங்களிருப்பிடம் தேடிவந்து உங்களை நோக்குகையன்றோ எனக்குக் கடமை; அதுமாறாடி விட்டதே!' என்று ஸங்கடம் தோற்றப் பேசுவன் கண்ணபிரானும். பரகதஸ்வீகாரத்தாலே பேறு என்றிருக்க வேண்டியது ப்ராப்தமாயிருக்க, ஸ்வகதஸ்வீகாரத்திலே யிழிந்தால் எம்பெருமானுடைய திருவுள்ளம் புண்படும் என்கிற ஶாஸ்த்ரார்த்தம் இப்பொருளில் விளங்குமாயிற்று.

9. திருநாமமாலை

ஒன்பதாம்பாட்டின் ஈற்றடியில் ''நாமம் பலவும் நவின்று'' என்றிருப்பதை நோக்கியது இப்பாசுர மாலைக்குறிப்பு. முன்னடியில் ''மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று'' என்றருளிச் செய்திருத்தலால் ப்ரக்ருதத்தில் உத்தேஶ்யமான திருநாமங்கள் இன்னின்னவை யென்பது ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டதாயிற்று. மாமாயன் மாதவன் வைகுந்தன் என்கிற திருநாமங்கள் எம்பெருமானுக்கும், ஆசார்யனுக்கும் பொதுவானவை. பாட்டுத்தோறும் பகவத்பரமான அர்த்தம் போலவே ஆசார்யபரமான அர்த்தமும் பொதிந்திருக்கையாலே ஆண்டாள் திருவுள்ளத்திற்குச் சேர இரு பொருள்களையும் விவரிப்போம். முன்னம் பகவத்பரமான பொருள்

http://acharya.org

கேண்மின்; (மாமாயன்) மஹத்தான மாயையை யுடையவன். பகவத்கீதையில் 'அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநா மீஶ்வரோபி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்மமாயயா'' என்றவிடத்து பாஷ்யத்தில் ஸ்வாமி யெடுத்துக்காட்டியுள்ள ''மாயா வயுநம் ஜ்ஞாநம்'' என்கிற நிகண்டுவின்படி மாயையாவது ஸங்கல்பம். ஸங்கல்ப மாத்திரத்தாலே ஸகலத்தையும் நிர்வஹிப்பன் என்றபடி. அதவா, அந்த கீதையிலேயே ''தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா'' என்று ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்கப்போகாதாப்போலே பகவான் தான் ஒருமாயப் பிணை பிணைத்து வைத்திருக்கையாலே அதைச் சொல்லிற்றுகவுமாம். அன்றிக்கே மிகவும் ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடையவனென்னவுமாம். ''அதுவிதுவுது என்னலாவனவல்ல என்னையுன் செய்கை நைவிக்கும்'' என்று ஆழ்வார் ஈடுபடும் படியான அவற்றைச் சிறிது கேண்மின்; *பொத்தவுரலைக் கவிழ்த்து அதன் மேலேறித் தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயு முண்பது, கன்றுகளோடச் செவியில் கட்டெறும்பு பிடித்திடுவது, வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு அதனோசை கேட்டு நிற்பது, புண்ணில் புளிப்பெய்தா லொக்குந் தீமைகளை மனை தோறுஞ் சென்று செய்வது, உருகவைத்த குடத்தொடு வெண்ணெய் உறிஞ்சி உடைத் திட்டுப்போந்து அருகிருந்தார் தம்மை அநியாயஞ் செய்வது, இல்லம் புகுந்தொரு மகளைக் கூவிக் கையில் வளையைக் கழற்றிக் கொண்டு கொல்லையில் நின்றுங் கொணர்ந்து விற்ற அங்கொருத்திக்கு அவ்வளை கொடுத்து நல்லன நாவற் பழங்கள் கொண்டு நானல்லே னென்று சிரிப்பது, ஆற்றிலிருந்து விளையாடுபவர்களைச் சேற்றாலெறிந்து வளைதுகில் கைக்கொண்டு காற்றில் கடியனா யோடி யகம்புகுவது, வண்டமர் பூங்குழலார் துகில்கைக்கொண்டு விண்டோய் மரத்தேறுவது, மச்சொடு மாளிகையேறி மாதர்கள் தம்மிடம் புக்குக் கச்சொடு பட்டைக் கிழித்து காம்பு துகிலவை கீறி நிச்சலும் தீமைகள் செய்வது, தாயெடுத்த சிறுகோலுக்கு உளைந்தோடுவது, ஒளியா வெண்ணெ யுண்டானென்று உரலோ டாய்ச்சி ஒண் கயிற்றால் விளியா வார்க்க வாப்புண்டு விம்மி யழுவது, கஞ்சனுங் காளியனுங் களிறு மருது மெருதும் வஞ்சனையில் மடிய வளர்வது, ஆயனாகி ஆயர் மங்கை வேயதோள் விரும்பியது, குன்றெடுத்தா நிரை காத்துக் கோவலனாய்க் குழலூதி யூதிக் கன்றுகள் மேய்த்துத் தன் தோழரோடு கலந்து வருவது, சீமாலி கனவனோடு தோழமைக் கொண்டு சாமாறவனை எண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டது, நாறிய சாந்தம் நமக்கிறை நல்கென்ன தேறியவளும் திருவுடம்பிற் பூச ஊறிய கூனினை உள்ளே யொடுங்க

ஏறவுருவியது, வார்கடாவருவி யானை மாமலையின் மருப்பிணைக் குவடிறுத் துருட்டி ஊர்கொள் திண்பாக னுயிர் செகுத்து அரங்கின் மல்லரைக் கொன்று போர்கடாவரசர் புறக்கிட மாடமீமிசைக் கஞ்சனைத் தகர்த்தது, பொய்ச் சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய்ப் பாரதங்கைசெய்தது, பற்றலர் வீயக்கோல் கையில் கொண்டு மலைபுரை தோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியப் பார்த்தன் தன் தேர்முன் நின்றது, பாழியால் மிக்க பார்த்தனுக் கருளிப் பகலவனொளிகெட ஆழியாலன்றங் காழியை மறைத்தது, கொல்லாமாக் கோல் கொலை செய்து பாரதப்போர் எல்லாச் சேனையு மிருநிலத் தவித்தது, மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தது, படர்புகழ்ப் பார்த்தனும் வைதிகனு முடனேறத் திண்தேர் கடவிச் சுடரொளி யாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன் பிள்ளைகளை உடலொடுங் கொண்டு கொடுத்தது முதலான மாமாயச் செயல்களை அநுஸந்திப்பது. மாதவன் என்பதற்கு லக்ஷ்மீபதி யென்னும் பொருளும், வைகுந்தனென்பதற்கு வைகுண்டபதி யென்னும் பொருளும் உலகறிந்ததே.

இனி இம்மூன்று திருநாமங்களுக் கும் ஆசார்யபரமான பொருள் கேண்மின்; (மாமாயன்) எம்பெருமான் செய்யு மற்புதச் செயல்களிற் காட்டிலும் ஆசார்யர் செய்யு மற்புதச் செயல்களே மேம்பட்டவை. இராமாநுசநூற்றந்தாதி யில் (52) ஒரு பாசுரமே இங்குப் போதும்; ''பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப, இப்பார் முழுதும் போர்த்தான் புகழ் கொண்டு புன்மையினேனிடைத்தான் புகுந்து தீர்த்தானிருவினை, தீர்த்து அரங்கன் செய்ய தாளிணையோடார்த்தான் இவை யெம்மிராமாநுசன் செய்யு மற்புதமே'' என்னுமிப் பாசுரத்தில் ஆசார்ய ஸார்வபௌமருடைய அற்புதச் செய்கைகள் அத்புதமாகச் சொல்லப்பட்டி ருப்பது காண்க. இப்பாட்டுக்கு நமது விரிவுரை நோக்கத்தக்கது. (மாதவன்) இப்போது லக்ஷ்மீபதி யென்று பொருளன்று. மஹா தபஸ்வி யென்று பொருள். மா – பெரிய, தவன் – தவத்தை யுடையவன். தைத்திரீயோபநிஷத்தில் ''ஸத்ய மிதி ஸத்யவசா ராதீதர:''என்று தொடங்கி தபஸ்ஸின் அர்த்தத்தை இருவர் வாக்காலே இரண்டு படியாகச் சொல்லி, முடிவாக ''ஸ்வாத்$_4$யாய ப்ரவசநே ஏவேதி நாகோ மௌத்$_3$க$_3$ல்ய: தத்$_3$தி$_4$ தபஸ் தத்$_3$தி$_4$ தப:'' என்று தலைக்கட்டியுள்ளபடியே ஸ்வாத்யாய ப்ரவசநங்களே தபஸ்ஸாகையாலே தந்நிரதர் என்றபடி. (வைகுந்தன்) ''த$_3$த்தே ரங்கீ$_3$ நிஜமபி பத$_3$ம் தே$_3$ஶிகாதே$_3$ஶ காங்க்ஷீ'' என்கிற ந்யாஸதிலக (24) ஸூக்திப்படியே வைகுண்ட ப்ரதாயக னென்றபடி. ஆசார்யருடைய அநுமதி யின்றி ஸர்வேச்வரன் திருநாடு தருவதில்லை யாதலால் ஆசார்யனையே

http://acharya.org

வைகுண்ட ப்ரதனைக் சொல்லத் தட்டில்லை. ஆக எம்பெருமானுக்கும் ஆசார்யர்க்கும் ஸாதாரணமான திருநாமங்களை நவின்ற தாயிற்று.

10. தேற்றமாலை

பத்தாம்பாட்டின் ஈற்றடியிலே ''தேற்றமாய் வந்து திற'' என்றதை நோக்கியது இப்பாசுரமாலைக் குறிப்பு. தேற்றமாவது தெளிவு. தெளிவாய் வந்துதிற வென்கை. திருநெடுந்தாண்டகத்தில் (21) ''இருவராய் வந்தார்'' என்றவிடத்து இருவராம்படி வந்தாரென்று வியாக்கியானம் செய்தருளப்பட்டிருப்பதுபோலே இங்கும் தேற்றமாய் என்பதற்கு தேற்றமாகும்படி யென்று பொருள் கொள்ளத்தக்கது. இப்பாட்டிலுணர்த்தப்படுகிற பெண்பிள்ளை மிகத்தெளிவுடைய வ்யக்தியென்னுமிடம் ''நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்'' என்கிற விளியினாலும் அருங்கலமே! யென்கிற விளியினாலும் விளங்கா நின்றது. எங்ஙனே யென்னில்; பேற்றுக்கு ஒருஸாதநாநுஷ்டாநம் பண்ணவேணு மென்றும், என்ன ஸாதநத்தை யநுஷ்டிக்க லாமென்னும் சிந்தித்திருக்கும் நிலை தெளிவில்லாத நிலையாகும். ''தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா:'' என்றும் ''செய்தவேள்வியர்'' (திருவாய் 5–7–5) என்றும் சொல்லுகிறபடியே க்ருதக்ருத்யராயிருக்கும் நிலை தெளிந்த நிலையாகும். ''ஶாஸ்த்ரிகள் தெப்பக்கையரைப்போலே இரண்டையு மிடுக்கிப் பிறவிக்கடலை நீந்த, ஸாரஜ்ஞர் விட்டத்திலிருப்பாரைப் போலே இருகையும்விட்டுக் கரை குறுகுங்கால மெண்ணுவர்கள்'' என்னுமாசார்ய ஹ்ருதய சூர்ணையும் (19) அதன் வியாக்கியானமுங் கொண்டு இதில் தெளிவு பெறவேணும். ஸ்வப்ரவ்ருத்தியானது பகவத்ப்ரவ்ருத்தி விரோதி யென்றறுதியிட்டு, அப்படி பகவத் ப்ரவ்ருத்தி விரோதியான ஸ்வப்ரவ்ருத்தியில் நின்றும் கையொழிந்து நிற்கும் நிலையுண்டே இதுவேதான் தெளிந்தநிலை யெனப்படும். ''சசால சாபஞ்ச முமோச வீர:'' என்னும் ஸ்ரீராமாயண ஶ்லோகத்தில் 'சாபஞ்ச முமோச' என்பதற்கு முற்பட்ட நிலையைக் கலங்கின நிலையாகவும்; 'கச்சாநுஜாநாமி' என்று பெருமாள் திருவுள்ள மிரங்குகைக் குறுப்பாக 'சாபஞ்ச முமோச' என்றிருந்த நிலையைத் தெளிந்த நிலையாகவும் நிரூபிப்பர்கள் நம் ஆசார்யர்கள். த்ரௌபதியினுடைய அநுஷ்டாநத்தையும், ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய அநுஷ்டாநத்தையும் ஆராய்ந்து தெளியவேணும். த்ரௌபதி தன் அபிலஷித ஸித்திக்கு உறுப்பாக என்ன செய்தாளென்று பார்க்கில், ஒன்றும் செய்திலள்; ''இருகையும் விட்டேனோ த்ரௌபதியைப்போலே'' என்கிறபடியே மிக்க பெருஞ்சபை நடுவே தான் படும் பரிபவத்திற்குப் பரிஹாரமாகப் புடவையை இறுக்கிக் கொண்டிருந்தமையாகிற

http://acharya.org

ப்ரவ்ருத்தி நிலையை விட்டுத்தொலைத்த துண்டே இது தான் த்ரௌபதி செய்தது. கஜேந்த்ரராழ்வானும் ''கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே'' என்கிற படியே முதலை நீருக்கிழுக்க, தான் கரைக்கு இழுத்துக் கொண்டிருந்தமை யாகிற ப்ரவ்ருத்தி நிலையில் நின்றும் கையொழிந்தமை யத்தனையே யாயிற்று செய்தது. அஷ்டஶ்லோகியில் ''ஆத்மத்ராணோந்முகச் சேத் நம இதி ச பதம்'' என்று பட்டரருளிச்செய்தபடியே ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் ஸ்வரூப விருத்த மென்கிற துணிவு ஹ்ருதய பூர்வகமாக (அநுஷ்டாந பர்யவஸாயி யாக) வுண்டானால் இதனில் மிக்க தெளிவு வேறில்லையாம். ''நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்!'' என்பதற்கு – செய்யவேண்டியதைச் செய்துமுடித்து ப்ரஹ்மாநந்தாநுபவம் செய்து கொண்டிருக்கிறவளே! என்பது பொருள். உண்மையில் இவ்வதிகாரிக்கு செய்யவேண்டியதென்று ஒன்று இருந்தாலன்றோ அதைச் செய்து முடித்ததாவது. கீழே உபபாதித்த அத்யவஸாய விஶேஷத்தாலே ஸித்திக்கிற தாயிற்று க்ருதக்ருத்யத்வம். ''தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா:'' என்றதும் ''செய்த வேள்வியர்'' என்றதும் அதையிட்டே யன்றோ. ஸாத்யோபாய நிஷ்டர்களன்றிக்கே ஸித்தோபாய நிஷ்டராயிருக்குமவரைச் சொன்னவாறு. தொண்டரடிப்பொடியாழ்வார் ''காம்பறத் தலைசிரைத்து உன் கடைத்தலையிலிருந்து வாழுஞ் சோம்பர்'' என்றருளிச் செய்தது இத்தகைய அதிகாரியையேயன்றோ. **அருங்கலமே!** என்றது துர்லபமான ஸத்பாத்ரமே! என்றபடி. இத்தகைய நிஷ்டை எளிதன்றே. மிகவுமரிதான தொன்றே. பெறுதற்கரிய நிஷ்டையைப் பெற்ற ஸத்பாத்ரமே! என்ற விது மிக அவசியமான விளியாகும். உனக்குண்டான தெளிவு எமக்கு முண்டாம்படி வந்து வாயைத் திறந்தருள வேணுமென்றதாயிற்று. (10)

11. பொருள்மாலை

பதினோராம் பாட்டின் ஈற்றடியில் ''எற்றுக் குறங்கும் பொருள்'' என்றிருப்பதை நோக்கியது இப்பாசுரமாலைக் குறிப்பு. இத்தனை சிறுமிகள் நாங்கள் உணர்ந்து வந்து திரண்டு நிற்க நீ மட்டும் உறங்குகைக்குப் பொருளென்ன? என்று கேட்கப்படுகிறதிங்கு. பொருளாவது – அர்த்தம். உறங்குகைக்கு என்ன அர்த்தம் என்றது, என்ன பிரயோஜநத்திற்காக நீ உறங்குகிறாய்? என்றபடி. உலகத்தில் உறங்குகிறவர்கள் ஒரு பிரயோஜநத்திற்காகவா உறங்குகிறார்கள்; இல்லையே. அப்படியிருக்க இக்கேள்வியின் கருத்து என்ன? என்று ஆராயவேணும். ஆராய்வோம். ஸம்ஸாரிகளின் உறக்கம் தமோ குணத்தினாலாயது. *வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாக விரித்து அதன் மேலே கண் வளர்ந்தருளுமவனுடைய நித்திரை எதனாலாயது? ஜகத்ரக்ஷணசிந்தையினா

http://acharya.org

லாயது. நங்காய் உன்னுடைய நித்திரை எதனாலாயது? என்று கேட்கிறார்க ளென்க. ஆங்காங்கு திவ்யதேசங்களில் எம்பெருமான் துயில் கொள்ளும்படியை அநுபவிக்கின்ற ஆழ்வார்கள் ''நடந்த கால்கள் நொந்தவோ? நடுங்க ஞால மேனமாய், இடந்த மெய்குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம், கடந்த கால் பரந்த காவிரிக் கரைக் குடந்தையுள் கிடந்தவாறு'' (திருச்சந்த. 61) என்றும், ''கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும், மடியா தின்னே நீ துயில் மேவி மகிழ்ந்தது தான் அடியாரல்லல் தவிர்த்த அசைவோ? அன்றே லிப்படி தான் நீண்டு தாவிய அசைவோ பணியாயே'' (திருவாய் 8–3–5) என்றும் வினவுகின்றார்கள். திருப்பாவையில் உணர்த்தப்படுகிறவர்கள் உத்தமாதிகாரி களாகையாலே இவர்கள் உறங்க ப்ரஸக்தியேயில்லை. *தொல்லை மாலைக் ''கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே யென்கையாலே காண்பதற்கு முன்பு உறக்கமில்லை; கண்டால் 'ஸதாபஶ்யந்தி'யாகையாலே உறக்க மில்லை'' (முமுக்ஷுப்படி 109) யென்கிறார் பிள்ளையுல காசிரியர். இந்நிலத்தில் பிறந்தவர் களுக்கு நித்திரை அவர்ஜநீய மென்று கொண்டாலும் க்ருஷ்ண குணநுபவத்தி லீடுபட்ட திருவாய்ப் பாடிப் பெண்கள் ப்ராஹ்ம முஹூர்த்தத் திலே அதிலும் மார்கழி மாதத்திலே கிடந்து உறங்குகை ஸர்வாத்மநா அஸம்பாவிதம். ஆனாலும் பாசுரந் தோறும் உறங்குவதாக வைத்து எழுப்புகை காணப்பட்டு வருகின்றது. இதற்கொரு பொருள் சொல்லியாக வேண்டும். ''எற்றுக்குறங்கும் பொருள்?'' என்று கேட்கிற வ்யாஜத்தினால் அந்தப் பொருளை ஆராய்ச்சி செய்ய ஆண்டாள் நமக்கு உத்போதனம் செய்தருளாயிற்று. இது அஜ்ஞாத ப்ரச்நமன்று, ஜ்ஞாத ப்ரச்நமேயாகும். நன்னூலில் ''அறிவறி யாமை ஐயுறல் கொளல் கொடை, ஏவல்தரும் வினா...'' என்பதொரு சூத்திரம். அறியாத விஷயத்திற் கேள்வி கேட்பதுபோல அறிந்த விஷயத்திலும் கேள்வி கேட்பதுண்டு. அறிந்ததில் கேள்வி எதுக்கு? என்னில்; தாம் மட்டுமறிந்தால் போதாதே; பிறரையும் அறியச்செய்ய வேண்டியே கேட்கிறபடி.

திருமங்கையாழ்வார் சிறுபுலியூர்ச் சலசயனப்பெருமாளை நோக்கி ''சேயோங்கு தண்திருமாலிருஞ் சோலை மலை யுறையும் மாயா! எனக்குரையாயிது, மறைநான்கினுள்ளாயோ? தீயோம்பு கைமறையோர் சிறு புலியூர்ச்சலசயனத் தாயோ? உனதடியார் மனத்தாயோ அறியேனே'' என்கிறார். உண்மையில் அறியாததா இவ்விஷயம். கூரத்தாழ்வான் தேவப்பெருமாளை நோக்கி ''ப$_4$க்தாநாம் யத்$_3$ வபுஷி த$_3$ஹரம் பண்டி$_3$தம் புண்ட$_3$ரீகம் யச்சாம்லாநம் வரத$_3$! ஸததாத்$_4$யாஸநாத$_3$ாஸநாப்ஜம் । ஆம்நாயாநாம் யத$_3$பி ச ஶிரோ யஶ்ச மூர்த்த$_4$ா ஶட$_2$ாரே: ஹஸ்த்யத்$_3$ரேர் வா

கிம் அதிஸுகதம் தேஷு பாதாப்ஜ யோஸ் தே?'' (வரதராஜ ஸ்தவே 59) என்ெருரு கேள்வி கேட்கிருர். இதுவும் அஜ்ஞாத ப்ரச்ந மன்று. அறிந்ததிலும் கேள்வி கேட்பதில் ஒரு ரஸவிஶேஷ முண்டு. ஆழ்வாராசார்யர்களின் திவ்ய ஸூக்திகளில் இத்தகைய கேள்விகள் எண்ணிறந்தவையுள்ளன. ஆங்காங்கு நம்முடைய வியாக்கியானங்களிலே நிரூபிக்கப்பட்டுள்ள ரஸவிசேஷங்களே ரஸிகர்கள் குறிக்கொண்டேயிருக்கின்ருர் கள். *எற்றுக் குறங்கும் பொருளென்ற விவ்விடத்தில் இந்த உறக்கத்தின் மருமத்தை உய்த்து உணரவேண்டு மென்பதே ஆண்டாள் திருவுள்ளம்.

''அநாதிமாயயா ஸுப்த:'' என்றவிடத்துச் சொல்லப்பட்ட உறக்கம் போலன்றிக்கே விலக்ஷணமான உறக்கமே விலக்ஷண வ்யக்திகளுக்குள் ளது. பகவத் கீதையில் (2–69)'யா நிஶா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ, யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிஶா பஶ்யதோ முநே'' என்னுமிந்த ஶ்லோகமானது ஸம்ஸாரிகளின் ஜாகர நித்ரைகளேயும் யோகிகளின் ஜாகர நித்ரைகளேயும், நன்கு உணர்த்துவதாகும். ஸர்வப்ராணிகளுக்கும் எது இரவோ அவ்விரவில் ஜிதேந்த்ரியனுனவன் விழித்துக் கொண்டிருக்கின்ருனென்றது இந்த ஶ்லோகரத்நத்தின் பூர்வார்த்தத்தில். ஸர்வப்ராணிகளும் கண்விழித்துக் கொண்டிருக்கும்படியான பகலானது ஜிதேந்த்ரியனுக்கு இரவாகிறது என்றது உத்தரார்த்தத்தில். இந்த வார்த்தை மருமமாகவுள்ளது. நாம் கண்ணெடுத்துப் பார்க்க விரும்பாமல் வெறுத்திருக்கும் விஷயத்தை ஜிதேந்த்ரியர்கள் விரும்பிப் பார்க்கிருர்களென்பது வாஸ்தவந்தானே. பகவத்பாகவத விஷயங்களே நாம் விரும்பிப்பாராமல் அவற்றிலே வெறுப்புக் கொண்டிருக்கிருேமென்பதும், இவ்விஷயங்களே ஸாதுக்கள் விரும்பிப் பார்க்கிருர்களென் பதும் உண்மைதானே. இதுதான் பூர்வார்த்தத்தில் சொல்லப்பட்ட தாயிற்று. நாம் விரும்பிப்பார்க்கிற லௌகிக விநோதங்களேக் காணக் கண்கூசி யிருப்பர்கள் ஸாதுக்களென்பது உத்தரார்த்தத்தின் தாத்பர்யம். நம்முடைய பகல் ஸாதுக்களுக்கு இரவாகிறது. ஸாதுக்களின் பகல் நமக்கு இரவாகிறது என்று சொன்னவிது அநுபவத்திற் கிணங்கிதேயன்ருே. ஸ்வரூபாநுரூபங்க ளான விஷயங்களில் கண்ணுேட்டம் செலுத்தாமல் ஸ்வரூபநாசகங்களான விஷயங்களிலேயே நாம் கண்ணுேட்டம் செலுத்தியிருப்பது தகாது என்கிற சிக்ஷணத்தில் இந்த கீதா ஶ்லோகத்திற்கு முழுநோக்கு. இப்பாட்டிலுணர்த்தப்படு கிற உத்தமவ்யக்தி உறங்குவதாகச் சொல்லப்படுவதன் பொருள் இப்போது நன்கு விளங்கிற்ருயிற்று. ஸம்ஸாரிகளின் பகலே இரவாகக் கொண்டு கண்மூடியிருக் கும் விலக்ஷண வ்யக்தி யல்லவோ நீ; நாங்களும் உன்னேப்போன்றவர்களே யாதலால் கண்திறக்கலாம் என்றதாயிற்று. (11)

http://acharya.org

12. அறிவுமாலை

பன்னிரண்டாம் பாட்டின் ஈற்றடியில் *அனைத்தில்லத்தாரு மறிந்தென்றதை நோக்கியது இம்மாலைக் குறிப்பு. *அனைத்தில்லத்தாரு மறிந்தென்ற விதற்குப் படிபலயாகப் பொருள் கூறுவர். ''இனித்தானெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்'' என்று சொன்னவுடனே *அனைத்தில்லத்தாரு மறிந்தென்று கூறினவிதன் கருத்தை ஆழ்ந்து நோக்க வேணும். 'நங்காய்! உண்மையில் நீ உறங்குகின்றாயல்லை; பகவத்விஷயாநுபவத்திற்குப் புறம்பு அதிகாரிகளில்லாமையாலே நாம் ஏகாந்தமாகவிருந்து அநுபவிக்கவேணுமத்தனை யென்று நினைத்து (குருகை காவலப்பனைப்போலே) ரஹஸ்யமாக அநுபவிக்கிறாய் போலும்; புறம்பே இதற்கு அதிகாரிகளில்லை என்று நினைக்கவேண்டா; அனைத்தில்லத்தாரும் பகவத்விஷயாவகாஹனம் முற்றியிருக்கும்படியான இப்பாடியிலே இஃதறியாதாருமுளரோ? பகவதநுபவ மறியாத இல்லமேயில்லைகாண்' என்பதாகக் கொள்க. பொய்கையார் தமது திருவந்தாதியில் (22) ''அறியுமுலகெல்லாம் யானேயுமல்லேன்'' என்கிறார். 'ஆழ்வார்களில் முதன்மைபெற்ற முதலாழ்வார்களிலும் முதல்வனான யான் மட்டு மறிவேனல்லேன்; உலகெல்லாம் அறிந்துளது' என்பதன்றோ இங்குச் சொல்லப்படுகிறது. அப்படி அறியப்பட்ட விஷயம் எதுவென்னில் 'வெறிகமழுங் காம்பேய் மென்தோளி கடை வெண்ணெ யுண்டாயை, தாம்பே கொண்டு ஆர்த்த தழும்பு'' என்பதனால் அஃது இன்னதென்று விளக்கப்பட்டது. வெண்ணெயுண்ட குற்றத்திற்காக யசோதைப் பிராட்டி உன்னைக் கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டிவைத்திருந்ததனால் உன்னுடம்பு தழும்பேறிக் கிடக்குஞ் செய்தியை நானொருவன் மட்டுமா அறிவேன்? உலகமெல்லாமறியுமே யென்று கூறினர். அவனுடைய பரத்வத்தை யறிவதற்கு அதிகாரிகள் துர்லபரானாலும் ஸௌலப்யத்தை யறியாதாருளரோ?க்ருஷ்ணாவதாரத்தில் ஸாந்தீபநி புத்ராநயநம், வைதிகபுத்ராநயநம் முதலான பரத்வசரித்ரங்களை யறிவார் மிகச்சிலரேயாயினும், வெண்ணெய் களவுகண்டான், கட்டுண்டான் அடியுண்டழுதேங்கினான் என்கிற எளிமைச் சரிதையை அறியாதார் ஒருவரேனுமுளரோ? இத்தகைய ஸௌலப்யத்தை யநுபவிப்பதன்றோ சிறந்தவநுபவமாவது; இவ்வநுபவத்திற்கு அதிகாரிகள் ஊராக மலிந்திருக்கையாலே சடக்கென எழுந்துவந்து நீயுமித்திரளிலே சேர்ந்து அநுபவிக்கப் பாராய் என்பதாகக் கருத்தை விரிக்க.

அன்றியும் முன்னம் ''சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானைப் பாடவும்'' என்று ராமவ்ருத்தாந்தம் சொன்னதனால், 'க்ருஷ்ணகுணங்களே வெள்ளங்கோத்திருக்குமித் திருவாய்ப்பாடியிலே க்ருஷ்ண கதையை விட்டு ராமகதையைச் சொல்லுவது நீதியோ? ''ராமோ ராமோ

http://acharya.org

ராம இதி ப்ரஜாநாம் அபவந் கதா:'' என்ன நின்ற அயோத்தியிலே க்ருஷ்ணநாமம் சொன்னல் ஸஹித்திருப்பர்களோ? நந்தன் மைந்தனை அசோதை யிளஞ்சிங்கத்தின் சீர்மல்குமிப்பாடியிலே ராமன் பேர்சொன்னல் ஸஹித்திருக்கத் தகுமோ? அநீதியான இப்பெயரை இங்குப் பேசுவாரார்?' என்று சிவிட்கென்றிருந்தாயாகில்; ராமக்ருஷ்ணர்களின் அபேதத்தை (ஒற்றுமையை) இங்கு அறியாதாரில்லை; அனைத்தில்லத்தாரு மறிந்துள்ளார்கள் காண் – என்றதாகவுமாம். நாம் சிற்றிலிழைக்க அதைச் சிதைத்தவன் கண்ணனுயிருக்க ''சீதை வாயமுதமுண்டாய்! எங்கள் சிற்றில் நீ சிதையேல்'' என்றிலோமோ? நம்முடைய வளை துகில்களைக் கைக்கொண்டு வேண்டவும் தாராதான் கண்ணனுயிருக்க ''இரக்கமே லொன்று மிலாதாய்! இலங்கை யழித்த பிரானே!'' என்றிலோமோ? ஆக, தென்னிலங்கைக் கோமானைச் செற்றவனும், நம்மனத்துக்கினிய கண்ணனும் வெவ்வேறு வ்யக்திகளன்றிக்கே ஒரு வ்யக்தியே யென்பதை அனைத்தில்லத்தாரும் அறிந்திருக்கையாலே சீறுபாறென்னுதே கடுகவந்துசேர் என்கிறதாகவுமாம். (12)

13. கள்ளந்தவிர்மாலை

பதின்மூன்ரும் பாட்டின் ஈற்றடியில் *கள்ளந்தவிர்ந்து கலந்தென்றிருப்பதை நோக்கியது இப்பாசுரமாலைக்குறிப்பு. இப்பாட்டி லுணர்த்தப்படுகிற ஆய்மகள் கள்ளங்கொண்டிருப்பதாக வைத்து அதைத் தவிர்ந்து தங்களோடே கலக்க வேணுமென்று கூறப்படுகிறது. ஶாஸ்த்ரங்களில் ''யோந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே, கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மா பஹாரிணா'' என்ருெரு வசனம் காண்கிரேம். எம்பெருமானுக்கு அடிமைப்பட்ட தன்னை ஸ்வதந்திரனுகவோ அந்யஶேஷபூதனுகவோ நினைப்பது கள்ளமெனப்படுகிறது. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் கச்சிநகரில் விளங்கும் கள்வரென்னும் பெருமாளுக்கு பாடினபாட்டு,

''பண்டேயுன் தொண்டாம் பழவுயிரை என்னதென்று கொண்டேனைக் கள்வனென்று கூருதே – மண்டலத்தோர் புள்வாய் பிளந்த புயலே! உனைக் கச்சிக் கள்வா வென்ரேதுவது என் கண்டு?''

என்றிங்ஙனேயுள்ளது. இதனுலும் ஆத்மாபஹாரக்கள்ளமே பாபங்களில் தலையான கள்ளமென்று காட்டப்பட்டுளது. இத்தகைய கள்ளம் இங்கு நெஞ்சால் நினைக்கவும் அப்ரஸக்தம். பகவத்பாகவத ஶேஷத்வத்தின் எல்லையிலே நிற்கும் உத்தமவ்யக்தியன்ரே உணர்த்தப்படுகிருள். அவளுக்கு இத்தகைய கள்வம் புக வழி ஏது? பின்னை எத்தகைய கள்ளம் தவிரவேண்டுமென்கிறது இங்கு?

என்னில்; அநுபவ நிஷ்டர்களில் ஏகாந்தமாக அசலறியாதபடி அநுபவிக்க ஆசைப்படுவர் சிலர். ''அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்களின்பமிகு பெருங்குழுவுகண்டு யானுமிசைந்துடனே யென்று கொலோ விருக்கும் நாளே'' (பெருமாள். திரு.1–10) என்று குலசேகராழ்வார் பாரித்தபடியே அடியார்கள் குழாங்களுடன் கூடி *மொய்ம்மாம் பூம்பொழிற் பொய்கைத் திருவாய் மொழிப்படியே அநுபவிக்க ஆசைப்படு வர் சிலர். இலங்கையில் பிராட்டியைக் கண்டு திரும்புகையில் மதுவனத்திற் புகுந்த வானரமுதலிகள் படியிலே அநுபவிக்க ஆசைப்பட்டிருக்கு மவர்கள், உள்ளே தனியிருந்து ஏகாந்தாநு பவம் பண்ணுவதைக் கள்ளமாகக் கருதுமவர்களாதலால், 'நங்காய்! கைவல்யாநுபவம் பண்ணுமாபோலே தனியிருந்து செய்யும் அநுபவமானது எங்களையெல்லாம் வஞ்சித்துச் செய்யு மதாகையாலே கள்ளமேயாகுமத்தனை; அதனைத் தவிர்ந்து எங்களோடே கலந்து அநுபவிக்கவாராய்' என்றதாயிற்று.

கள்ளத்தை மற்றொருவிதமாகவுங் கொள்ளலாமிங்கு. (இப்பாட்டின் முதலடியையும் இரண்டாமடியையும் நோக்குக.) நாங்கள் புள்ளின் வாய் கீண்டவனை கண்ணபிரானுடையவும், பொல்லவரக்கனைக் கிள்ளிக் களைந்தவனை இராமபிரானுடையவும் கீர்த்திமாலைகளை வாசியறப் பாடுமவர்களாயிரா நின்றோம். இதற்குக் காரணமென்னவென்றால், யசோதைப்பிராட்டி கண்ணனை அழைக்கும்போது 'கண்ணா! இங்கு வா' என்றழையாமல் ''வருக வருக வருக விங்கே வாமன நம்பி வருக விங்கே, கரியகுழல் செய்யவாய் முகத்து என் காகுத்த நம்பீ வருக விங்கே'' என்று 'வாமனமூர்த்தீ! இங்குவா; இராம பிரானே! இங்குவா' என்றும் ''என் சிற்றுயர் சிங்கமே சீதை மணாளா'' என்று மழைப்பது வழக்கமாதலால் அதற்கு இணங்கவே நாங்கள் உபயரையும் அநுபவிக்கிறோம்; நீ இங்கு 'ராமனை யநுபவிப்பது தேவதாந்தர பஜனத்தோ டொக்குமென்று நினைத்து ஸ்ரீக்ருஷ்ண குணாநுசிந்தனத்தை மட்டும் செய்கிறாய் போலும்; இது யதாப்ரதிபத்தி யன்றாகை யாலே கள்ளமேயாகும். இக்கள்ளத்தைத் தவிர்ந்து நந்தன் மதலையையும் காகுத்தனையும் நவின்று பாடுமெங்கள் கோஷ்டியிலே கலந்து உபயாநுபவமும் பண்ணப்பாராய் என்கிறதாகவுமாம்.

கீழ்ப்பாட்டில் ''தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானை'' என்றோம். ''என்று மெனக்கினியானை என் மணிவண்ணனை'' என்று அசோதை கூறினதற்கு முரணாக வேறொருவனை மனத்துக்கினியானாகக் கூறிய இவர்களோடே நமக்கென்ன சேர்த்தி யென்று நினைத்துத் தனியநுபவம் பண்ணுகிறாயாகில் இந்த அயதாப்ரதி பத்தியையும் தவிரவேணுமென்கிறார்க ளென்றுணர்க. (13)

http://acharya.org

14. பாடல்மாலை

பதினுன்காம் பாட்டின் ஈற்றடியில் *பங்கயக்கண்ணுனைப் பாட என்றதை நோக்கியது இப்பாசுரமாலைக் குறிப்பு. இப்பாட்டில் பங்கயக்கண்ணுனை மட்டு மன்றிக்கே சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையனையும் பாடுகின்றூர்கள் (அல்லது) பாட விரும்புகின்றூர்கள். தடக்கையில் சங்கொடு சக்கரமேந்து மழகும் பங்கயக் கண்ணழகும் அநுபோக்தாக்களுக்கு அரிய பெரிய விருந்தாகும். சிறிது அநுபவிப்போம். கண்ணபிரான் சக்ரவர்த்தி திருமகனுகத் தோன்றின முந்தின அவதாரத்தில் திருவாழி திருச்சங்குகளைக் திருக்கையில் கொள்ளவேயில்லை. ஸ்ரீராமசரிதாம்ருத ஸாகரத்தில் சங்கசக்ரப்ரஸ்தாவமே யில்லையன்றே. ஆயினும் இராவணன் மாண்டொழிந்த பின்பு ப்ரேத பூமியிலே புலம்ப வந்த மந்தோதரி பெருமாளைப் புகழ்ந்து பேசும் பேச்சுக்களில் ''தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர:'' (ரா.யு.114–15) என்று (பெருமாளைத்) திருவாழி திருச்சங்குடையவராகப் போற்றினள்) இதற்கு முன்னே பம்பாஸரஸ்ஸின் கரையிலே ஸுக்ரீவ ப்ரேரணையால் பெருமாளைக் காணவந்த திருவடி ''ஆயதாஶ்ச ஸுவ்ருத்தாஶ்ச பாஹவ: பரிகோபமா:, ஸர்வ பூஷண பூஷார்ஹா: கிமர்த்தம் ந விபூஷிதா:'' (கிஷ்.3–15) என்று கேள்வி கேட்டிருக் கிறுர். இங்கு ''ஆயதௌ ஸுவ்ருத்தௌ ச பாஹூ தே பரிகோபமௌ ஸர்வபூஷண பூஷார்ஹௌ கிமர்த்தம் ந விபூஷிதௌ'' என்று த்விவசன மிட்டு ஶ்லோகம் கூடுவதாயிருக்க, பஹுவசந மிட்டிருக் கைக்கு அடி ஆராயவேணும். இளைய பெருமாளையும் கூட்டிப் பேசிவருகிற ப்ரகரணமாகையாலே அவருடைய இரு புஜங்களையும் சேர்த்து பஹு வசநப்ரயோகம் பண்ணிற்றென்று நிர்வஹிப்பாருமுண்டு. வ்யாக்க்யாத்ரு ஸார்வபௌமரான கோவிந்தராஜர் இங்கு மூவகைப் பொருள் பணிக்கையில் ''திருவடி பக்த ஶ்ரேஷ்டராகையாலே இவர்க்குப் பெருமாள் சதுர்புஜராக ஸேவை ஸாதித்தார்' என்னும் பொருளை மத்யஸ்தமாக்கிப் பணித்தார். இப்பொருளே ஸம்ப்ரதாயத் தலைவர்கள் ஆதரிக்குமது. இது எப்படியாஞலும் மந்தோதரி வாக்கு ஸுஸ்பஷ்டமாக அமைந்துள்ளது. அவள் 'ஶங்கசக்ர கதாதர:'' என்று பெருமிடறு செய்து சொன்னதைக் கேட்ட பெருமாள் இவ்வவதாரத்தில் ஶங்க சக்ர கதைகளு டன் வந்திலோமே! என்று மனக்குறை யுற்று இனி அடுத்த அவதாரத்திலே ஶங்க சக்ர கதைகளில்லாமே வருவதில்லை யென்று திடமாக ஸங்கல்பித்துக் கொண்டு, அடுத்ததான க்ருஷ்ணுவதாரத் திலே ''ஜாதோஸி தேவதேவேஶ! ஶங்க சக்ர கதாதர!'' (வி.பு.5–3–10)என்று தாய் தந்தையர் உகந்து சொல்லும்படி ஶங்கசக்ரகதா பாணியாகவே தோன்றினன். ஆஞலும் ''உபஸம்ஹர விச்வாத்மந் ரூபமேதச் சதுர்புஜம், ஜாநாது மாவதாரம் தே கம்ஸோயம் திதி

http://acharya.org

ஜந்மஜ'' (வி.பு.5–3–1) என்கிற வேண்டு கோளுக்கிணங்கி திவ்யாயுதங்களை மறைத்துக் கொண்டான். உகவாதார்க்குக் கூசியே மறைக்கச் சொன்னபடியாலே உகந்தார்க்கு ஸேவை ஸாதிப்பித்துக் கொண்டேயிருந்ததாகத் தெரியவருகின்றது.

பெரியாழ்வார் திருமொழியில் (2–1) 'மெச்சூது பதிகத்தில்' 'அப்பூச்சி காட்டுகின்ருன் அம்மனே! அப்பூச்சி காட்டுகின்ருன்' என வருமிடத்து வியாக்கியானத்திலுள்ள ஐதிஹ்யம் அற்புதமானது. அப்பூச்சி காட்டுகையாவது– கண்ணை இறுத்துவது, மயிரால் முகத்தை மறைத்துக் காட்டுவது முதலானவை செய்து சிறுவர்களுக்கு அச்சத்தை விளைவிக்கும் சேஷ்டித விஶேஷம் என்று ஸாமான்யமாகக் கொள்ளுவர் மருமமறியாதார். நம்பெருமாள் ஸந்நிதியில் சிறிய திருவத்யயநோத்ஸவத்தில் அரையர் இப்பதிகம் ஸேவிக்கையில் (எம்பெருமானுர் காலத்திலே) உய்ந்தபிள்ளை யென்பாரொரு அரையர் அபிநயிக்குமளவில் அப்பூச்சி காட்டுகின்ருனென்பதை கண்ணன் கண்ணிமையை மடக்கிக் கொண்டு வருவதாக அபிநயித்துக் காட்ட, அப்போது கோஷ்டியில் உடையவர் பின்னே எழுந்தருளியிருந்த எம்பார் அத்தகைய அபிநயத்தில் வைரஸ்யத்தைக் காட்டி, தம் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக்காட்ட, இச் சுவடறிந்த அரையர் தாம் முன்பு அபிநயித்த ரீதியை விட்டு எம்பார் காட்டினபடியே எம்பெருமான் திருத்தோள்களில் சங்கு சக்கரங்களைத் தரித்துக்கொண்டு சிறுவர்களையும் சிறுமிகளையும் அஞ்சச் செய்வதாக அபிநயித்துக் காட்ட, உடையவர் மிகவு முகந்தருளினுர். இதனுல் தேறுவதாவது (பாரதங் கை செய்த அத்தூதனப் பூச்சி காட்டுகின்ருன்) தூதனுய்த் தன் ஸௌலப்யத்தை வெளியிட்டு 'நம்மிலே ஒருவன்' என்று இவ்வுலகத்தவர் கொள்ளும்படி யிருப்பவன் அவர்கள் வெருவும்படி சில காலங்களில் ஈஶ்வரத்வ சின்னங்களைத் காட்டுவது முண்டு என்பதாம். அப்படிக் காட்ட கண்டவர்கள் இவ்வாய்ச்சிகளாகை யாலே இவர்கள் சங்கொடு சக்கரமேந்து மழகைப் பாடவிரும்புவது பாங்கே.

கண்ணபிரான் வடமதுரையி லிருந்து நந்தகோபர் திருமாளிகையிலே வந்து சேர்ந்தவுடனே யசோதைப்பிராட்டி அத்தெய்வக் குழவியின் பாதாதி கேசாந்த மான வடிவழகை ஆயர்மங்கையர்களை யழைத்துக் காட்டுகையில் ''நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய கைத்தலங்கள் வந்து காணீரே'' என்று காட்டியதையும் குறிக்கொள்க. கண்ணன் காளிய மர்த்தனம் செய்து திரும்புகையில் யசோதை 'அஞ்சுட ராழியுன் கையகத்தேந்துமழகா! நீ பொய்கைபுக்கு நஞ்சுமிழ் நாகத்திேனுடு பிணங்கவும் நானுயிர் வாழ்ந்திருந்தேன்'' என்று கையுந் திருவாழியுமான வழகை யநுபவித்துப் பேசுமழகு என்னே!

http://acharya.org

''அஞ்சுடராழி யுன் கையகத்தேந்து மழகா!'' என்பது பாசுரத்தில் ஒரு முறை யிருந்தாலும் இதனே யசோதை ஒருமுறையா சொல்லி யிருப்பள்? பன்முறை பேசியும் த்ருப்தியடையா திருப்பளன்ரே. மேலே *போற்றி போற்றி யென்று மங்களாஶாஸநம் செய்யுமிவர்கள் ''வென்று பகைகெடுக் கும் நின்கையில் வேல் போற்றி'' என்று திருவாழியாழ்வானுக்கன்ரே பல்லாண்டு பாடுவது. பகவத்கீதையில் விச்வரூபங் கண்ட அர்ஜுநன் அக்காட்சியில் அத்ருப்தியைக் காட்டி ''கிரீடிநம் கதிநம் சக்ர ஹஸ்தம் இச்சாமி த்வாம் த்ரஷ்டுமஹம் ததைவ, தேநைவ ரூபேண சதுர்ப்புஜேந...'' என்று பழைய ரூபத்தையே காட்டியருளவேணுமென்று வேண்டுகிருன். இங்கு பாஷ்யத்தில் ஸ்வாமி ''பூர்வவத் கிரீடிநம் கதிநம் சக்ர ஹஸ்தம் த்வாம் த்ரஷ்டுமிச்சாமி; அத: தேநைவ பூர்வஸித்தேந சதுர்புஜேந ரூபேண யுக்தோ பவ'' என்றருளிச் செய்வதனுல் அர்ஜுநன் சதுர்புஜரூப தர்ஶநத்தில் பழகியிருக்கிருனென்பதும் தெரியவருகிறது.

அன்றியும் கண்ணபிரானது திருக்கைத் தலங்களிலுள்ள சங்கசக்ர ரேகைகளேப் பற்றவும் இது சொன்னதாகக் கொள்ளலாம். ஏந்தும் என்றதற்கு இது அவ்வளவு சோராதாயினும் கொள்ளக் குறையில்லே. யாதவாப்யுதயத்தில் நான்காவது ஸர்க்கத்தில் 30,31,32 ஶ்லோகங்களிலுள்ள இன்சுவைமிக்க கதையை உபேக்ஷிக்கமனமில்லே. *ஆரண்யகாநாம் ப்ரபவ: பலாநாம் இத்யாதி, திருவாய்ப்பாடி வீதியில் ஒரு குறத்தி காட்டுப்பழங்களேக் கொணர்ந்து விற்கையில் அவற்றை வாங்கியுண்ண வேணுமென்று விருப்பங்கொண்ட கண்ணபிரான் நெல்லேக் கொடுத்து அந்தப் பழங்களே வாங்க வேணுமென விரும்பிக் கைநிறைய நெல்லேக் கொண்டு உள்ளிருந்து புறப்பட்டான்; இளங்கையாகையாலே நெல்லுகள் கையில் தங்காமல் கீழே விழுந்து கொண்டே வந்தன. பழக்காரியிடம் வரும்போது வெறுங்கையனுகவே காணப்பட்டான் கண்ணன். 'ஸுஜாத ரேகாமய ஶங்க சக்ரம் தாம்ரோதரம் தஸ்ய கராரவிந்தம் விலோகயந்த்யா: பலவிக்ரயிண்யா: விக்ரேது மாத்மாநமபூத் விமர்ச:'' கண்ணன் வெறுங்கையை விரித்தவாறே அந்தக் கையில் சங்கும் சக்கரமும் ரேகையாக நன்கு காணலாயின. அவற்றைக்கண்ட அக்குறத்திக்கு 'ஐயோ! இந்த பரம புருஷக் குழந்தைக்கு இந்தக் காட்டுப் பழங்களேயா நாம் விற்பது! ஆத்மாவையே விற்கவேண்டாவோ' வென்று தோன்றிற்றும். இப்படிப்பட்ட கதைகளேப் பாடவிரும்பினபடியைச் சொல்லிற்ருகக் கொள்க.

(பங்கயக்கண்ணனேப்பாட) ''க: புண்டரீக நயந:? புருஷோத்தம: க:?'' என்னும்படி புருஷோத்தமத்வ பிசுநங்களான செந்தாமரைக் கண்களினழ

http://acharya.org

கையும் பாட விருப்பம். *பங்கய நீணயனத்தஞ்சன மேனியனே! *தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணு*. (14)

15. வேருரர் பாடல் மாலை

பதினைந்தாம் பாட்டின் ஈற்றடியில் 'மாயனைப்பாட வென்றிருப்பதை நோக்கியது இம்மாலைக்குறிப்பு. வநபர்த்தி கத்வால்ஸம்ஸ்தான ஸதஸ்ஸில் வேதபரீக்ஷை கொடுக்கப் போனுர் ஒரு ஸ்ரோத்ரியர். பதக்ரம ஜடா கனங்களிற் போலே ஸம்ஹிதையிலும் பரீக்ஷை நடக்கிறது. பரீக்ஷகர் ''யத்வை'' என்றுர்.பரீக்ஷ்யர் உடனே ''வைஹோதாத்வர்யும்'' என்று ஆரம்பித்தார். அப்போது பரீக்ஷகர் தெலுங்கில் ''வை, காது'' ('வை அன்று') என்ன, பரீக்ஷிதர் ''வா அநீசாநோ பாரமாதத்தே'' என்று சொல்லித் தலைக்கட்டினுர். வேதம் ஓதாதவர்களுக்கு இங்கு ரஸமொன்று மேற்படாது. விவரிக்கிறேம் கேண்மின்; ''யத் வை ஹோதா'' என்று தொடங்கும் பஞ்சாதி மூன்ருங் காண்டத்திலுள்ளது; ''யத் வா அநீசாநோ பாரம்'' என்று தொடங்கும் பஞ்சாதி ஆரும் காண்டத்தில் உள்ளது. இரண்டிடத்திலும் இரண்டாவது பதம் (வை) என்பதுதான். ஆனுல் முந்தின விடத்தில் ஹல்லெழுத்து பரமாயிருப்பதால் அந்த பதத்திற்கு (வை) என்றே ஸ்ரவண முள்ளது. பிந்தின விடத்தில் அச்செழுத்து பரமாயிருக்கையாலே வை என்பது (வா) என்ருய் விட்டது. பரீக்ஷகர் தாம் விரும்பும் பஞ்சாதியை வ்யக்தமாகச் சொல்லி பரீக்ஷியாமல் மருமமாகக் கேட்டிருக்கிருர். (யத்வை) என்றவுடனே (யத்வை ஹோதா) என்கிற பஞ்சாதி தான் எவர்க்கும் அநாயாஸமாக ஸ்புரிக்கும். வேறென்றிருக்கிற தென்பது நினைவுக்கே வராது. பரீக்ஷகர் ஜடராயிருந்தால் 'இதைப் போல் வேருரிடம் இருக்கிறதா? பார்? என்பர். பரீக்ஷ்யனும் அவனுக்குத் துணைவனுயிருந்தால் திசிதிசி விலோல நயநனுயிருப்பன். இங்கு பரீக்ஷகரும் சதுரர்; பரீக்ஷிதரும் அதி சதுரர். (வை, காது) என்று சொல்லி வாய் மூடுவதற்குள்ளே சொல்ல வேண்டியதைச் சொல்லித் தீர்த்து விட்டார் பரீக்ஷிதர். அதாவது ஆருங்காண்டத்துப் பஞ்சாதியைச் சொல்லிமுடித்தார்.

ப்ரக்ருதத்தில் திருப்பாவையில் அப்படிப்பட்ட பரீக்ஷையில்லை. ''ஒவ்வொரு காலக்ஷேப ஸ்வாமியும் அடைவே ஒவ்வொரு பாட்டின் ஈற்றடியை உயிராகப் பற்றிக் கொண்டு பேசுவது'' என்ருலே போதும். மாலையாகவே குறிப்பிடவேண்டில் (14) பாடல்மாலை. (15) அதுவே என்று குறித்து விட்டால் குறிப்பறியமாட்டாரா? ப்ரச்நமாலிகையில் எவ்விதமான சாதுர்யமும் சுவையுமில்லையே. வேதலக்ஷணங்களில் எழுத்தடையாளம் காட்டியிருப்பது போல் 'ஞனைப்பாடல்மாலை'' ''யனைப் பாடல்மாலை'' என்றிட்டாலாவது அது

http://acharya.org

வொரு விலக்ஷண லக்ஷணத்தில் சேரும். கண்ணனைப் பாடல் மாலை, மாயனைப் பாடல் மாலை என்றிட்டாலு மழகியதே. திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில் ''வெண்ணெய் திரண்டதனை வேறோர் கலத்திட்டு'' என்றார். இங்கு வேறோரென்றதற்கு ரஸமான பொருளுண்டு; யசோதை தான் கடைந்த வெண்ணெயை வெண்ணெய்க் கலத்தில் இட்டு வைத்தால் கள்வக் கண்ணன் தெரிந்து கொள்வனென்று உப்பு, புளி, மிளகாய் வைக்கிற கலத்திலே அதை இட்டு வைத்தாளாம். இப்பொருளை ரஸிகர்கள் கேட்கும்போது மிக ரஸிப்பர்கள். 'வேறோர் பாடல்மாலை' என்று அபூர்வ ரஸிகர்கள் இட்டவிம் மகுடத்தில் ஒரு சுவையுமில்லையே.

வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாட விரும்பினார்கள் இங்கு ஆய்ச்சிகள். இந்தப்பாடல் ஸ்ரீக்ருஷ்ண விஷயத்திற் போல ஆசார்யவிஷயத்திலும் நன்கு பொருந்தும். கண்ணன் கம்ஸனால் அக்ரூரரை யிட்டு மதுரைக்கு தன்னுடைய வில்விழ வென்கிற வியாஜத்தினால் வரவழைக்கப்பட்ட போது அங்கு அரண்மனை வாசலில் மதமூட்டி நிறுத்தப் பட்டிருந்த குவலயா பீட மென்னும் யானையைப் பாகனோடுங் கூட அவலீலை யாகக் கொன்றிட்ட கதை வல்லானை கொன்ற கதை; இதனைப் பாடுகையாவது, 'ஆவரிவை செய்வதறிவார் அஞ்சன மாமலைபோலே, மேவு சினத்தடல் வேழம் வீழ முனிந்து, அழகாய காவிமலர் நெடுங்கண்ணார் கைதொழ வீதி வருவான் வாழ்க வாழ்க வாழ்கவே' என்றும், *கவள யானை கொம்பொசித்த கண்ணன் வாழி, *காமருசீர்க்குவலை மேகமன்னமேனி கொண்ட கோனென் னானை வாழி யென்றும் பாடுகை. (மாற்றாரை மாற்றழிக்க வல்லான்) கண்ணபிரான் பகைவரைக் கண்டால் 'இன்றுபோய்நாளைவா'' என்ற இராம பிரானைப்போல் ஒரு பேச்சுப் பேசான்; மாரீசனையும் சூர்ப்பணகையையும் முடித்திடாதே விட்டு வைத்து அனர்த்தத்தை விளைத்துக் கொண்டது போல் விளைத்துக்கொள்ளான்; வெட்டொன்று துண்டிரண்டாக்கி முடித்திடுவன். (மாயன்) இத்தனையும் சிரமப்பட்டுச் செய்கையன்றிக்கே ''எல்லையில் ஞானத்தன் ஞானமஃதே கொண்டு எல்லாக் கருமங்களுஞ் செய் எல்லையில் மாயனைக் கண்ணனை'' என்கிற திருவாய்மொழியின்படியே ஸங்கல்ப மாத்திரத்தினால் செய்து தலைக்கட்டுமவ னென்கை. இத்தகைய சீர்த்திமைகளைப் பாட விரும்பியபடி.

இனி ஆசார்ய விஷயத்திற் கேண்மின்; *வல்லானை கொன்றானை யென்றவிடத்து ஆனை யென்னுஞ் சொல் பால்பகா அஃறிணைப் பெயரதாதலால் ஒரு யானையை யன்றிக்கே பல யானைகளையுஞ் சொல்லும்; கண்ணன் முடித்திட்டது ஒரு யானையை; ஆசாரியர் களோவென்னில் ''வாரிசுருக்கி

http://acharya.org

மதக்களிறைந்திஜீனயும் சேரிதிரியாமல்'' (47) என்ற பொய்கையா ரருளிச் செயலின்படியே பஞ்சேந்திரியங் களாகிற ஐந்து யானேகளேத் தகர்த்தவர் கள். ''வஹதி மஹிளாமாத்யோ வேதா:'' இத்யாதி யதிராஜஸப்ததி (45) ஸூக்தி யின்படியே ஜிதேந்திரியர்களென்கை. மாற்றுரை மாற்றழிக்கும் வல்லமையும் இவர்கள் பக்கலிலே புஷ்கலம். ''நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கி யாதொன்றுமில்லே, கலியுங்கெடும்'' ''கொன்றுயிருண்ணும் விசாதி பகைபசி தீயனவெல்லாம் நின்றிவ்வுலகில் கடிவான் நேமிப்பிரான் தமர்போந்தார்'' ''இடங்கொள் சமயத்தை யெல்லா மெடுத்துக் களேவன போலே தடங்கடல் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய்'' என்று *பொலிக பொலிக(திருவாய் 5–2)விலே ஆழ்வார் பகர்ந்த பெருமை இவர்களுடையதே யன்றே. (மாயனே) எம்பெருமான் தானவதரித்து ஆனேத்தொழில்கள் புரிந்தும் திருத்தப் போகாத வுலகத்தைத் திருத்திப் பணிகொண்ட ஆச்சரியத்தை யநுஸந்திப்பது. ''மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலும் காணகில்லா வுலகோர்களெல்லாம் அண்ணலிராமானு சன் வந்து தோன்றியவப்பொழுதே நண்ணரு ஞானம் தலேக்கொண்டு நாரணற் காயினரே'' என்கிற இராமானுச நூற்றந்தாதிப் (41) பாசுரத்தை இங்கே பொருத்தமாக அநுஸந்திப்பது. இரும்பைப் பொன்னுக்குமாப்போலே நித்யஸம்ஸாரியான சேதநனே *வெள்ளுயிராக்கி, நித்யஸூரிபரிஷத் திலே வைக்குமாச்சரியம் ஆசிரியர்கட்கே அஸாதாரணமானது. ஆக இங்ஙனம் கண்ணபெருமானேயும், ஆசாரியர்களே யும் ஏகயோக்ய்யா பாடப் பாரித்தபடி. (15)

16. நேயமாலே

*நாயகனுய் பாசுரத்தின் ஈற்றடியில் *நேச நிலேக்கதவம் நீக்கென்றிருப்பதை நோக்கியது இம்மாலேக்குறிப்பு. திருப்பாவை முக்கியமாக ஸ்வாபதே சார்த்தத்தையே உயிராகக் கொண்டிருப் பதால் ஒவ்வொரு பாட்டுக்கும் விரிவான ஸ்வாபதேசார்த்தங்களே நாம் நம்முடைய விரிவுரைகளிலும், விஶேஷித்து ஸம்ஸ்க்ருத வியாக்கியானத்திலும் விவரித்துள்ளோம். இப்பாட்டில் நேசநிலேக்கதவம் நீக்கென்றதன் இன்சுவைப்பொருள் நெஞ்சிற்படவேணு மானல் பாசுரத்தின் பூர்த்தியான ஸ்வாபதேசார்த்தம் முன்னம் குறிக்கொள்ளப்படவேணும். ஆகவே அதைச் சுருக்கமாக விளக்கிக் காட்டிவிட்டு, பிறகு நேசநிலேக்கதவம் நீக்க வருவோம்.

(நாயகனுய் நின்ற) ஆசார்ய கோஷ்டியில் நடுநாயகமாக நிற்பவர் எம்பெருமானுர் என்று காட்டுகிறபடி. ''அமுநா தபநாதிஶாயிபூம்நா

http://acharya.org

யதிராஜேந நிபந்த நாயகஸ்ரீ:'' என்ற யதிராஜஸப்ததி(15)ஸூக்தியும் காண்க. (நந்தகோபன்) எம்பெருமானைப் புத்ரனாகப் பெற்ற விஷயத்தில் எம்பெருமானார்க்கு நந்தகோபனோடு ஸாம்யம். யதிராஜ ஸம்பத்குமாரனெனப் படுகிற செல்வப்பிள்ளையை க்ருஷ்ண கிசோர ஸ்தானீயனாகக் கொள்க. (உடைய) ஸ்வாமிக்கு உடையவரென்று வழங்குந் திருநாமத்தை ஸூசிப்பித்தபடி. (கோயில் காப்பான்) கோயிலென்கிற சொல் திருவரங்கம் பெரியகோயிலை மட்டும் சொல்லுவதாகவுங் கொள்ள லாம்; மற்றும் பல கோவில்களையும் சொல்லுவதாகவுங் கொள்ளலாம். 'தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே'' என்றும், 'ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய'' என்றும் சொல்லுகிற படியே திருவரங்கச் செல்வத்தைக் காத்தருளினவரென்கை. 'மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடு நாள்''என்கிறபடியே ஸகலதிவ்யதேசங் களையும் உத்தரிப்பித்தவர் ஸ்வாமியே யாதலால் கோயில்களைக் காத்தருளினவ ரென்பது பொருத்தமே. (கொடித் தோன்றுந் தோரணவாசல் காப்பானே) ''கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகினர்'' என்றும், ''நெடுவரைத் தோரணம் நிறைத்தெங்குந் தொழுதன ருலகே'' என்றும் சொல்லுகிறபடியே கொடியும் தோரணமுமான வாசல் பரமபதவாசல்; அதுதன்னையும் ஸ்வாமி எம்பெருமானார் தம்முடைய ஆளுகையிலே வைத்துக்கொண்டிருப்ப ரென்கை. எம்பெருமானார் திருவருளைப் பெறுதவர்களுக்கு அந்த வாசலிற் புகுவது அரிது என்கிற ப்ரஸித்தியைக் காட்டினபடி. (மணிக்கதவம் தாள் திறவாய்) மணியாவது ரத்னம். நவரத்ன மென்று சொல்லப்படுவதனால் ரத்னங்கள் ஒன்பது என்று ப்ரஸித்தம். நவரத்னங்கள் போன்ற ஒன்பது திவ்யக்ரந்தங்களை ஸ்வாமி பணித்தருளினார். வேதார்த்த ஸங்க்ரஹம், ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், சரணாகதிகத்யம், ஸ்ரீரங்ககத்யம், வைகுண்டகத்யம், நித்யம் என்று ஒன்பது திவ்யக்ரந்தங்களையே இங்கு மணிக்கதவ மென்கிறது. கதவு எப்படி பதார்த்தங் களுக்கு ரக்ஷகமோ அப்படியே இந்த திவ்யக்ரந்தங்களும் மறைப்பொருள் களுக்குச் சேமக்காப்பாக அமைந்தவை யாதலால் கதவென்றது மிகப்பொருத்தம். (கதவு, கதவம் இவை பர்யாயமே) இந்த க்ரந்தங்களிலுள்ள பொருள்களை நாங்கள் அநுபவிக்கும்படி செய்தருளவேணு மென்பது தாள்திறவா யென்றதன் கருத்து. ''ஆயர்சிறுமியரோ முக்கு மணிக்கதவம் தாள் திறவாய்'' என்று அந்வயிப்பது. அறிவிலிகளான எங்களுக்குப் புரியும் படி யருளிச் செய்யவேணுமென்கை.

(மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்) எம்பெருமான் தன்னுடைய சாஸ்த்ரங் களிலே முன்னமே தேவரீரைப் பற்றிச்

http://acharya.org

சோதிவாய் திறந்து பணித்துள்ளானென்று கருத்து. ''கலௌ ராமாநுஜஸ் ஸ்ம்ருத:'' ''கலௌ கஶ்சித் பவிஷ்யதி'' ''உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வதர்ஶிந:'' இத்யாதி ப்ரமாணங்களை இங்கே அநுஸந்திப்பது. (தூயோமாய் வந்தோம்) 'ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே'' என்கிறபடியே ஆசார்யர்க்கு மேற்பட்ட தெய்வமில்லை யென்கிற பாவசுத்தி யோடே வந்திருக்கிறோம் என்கை. தூயோமாகவந்தோம் என்றும் கொள்ள லாம். ஸகலார்த்தங்களையும் நாங்கள் தெரிந்துகொண்டு பவித்திரர்களாம்படி வந்தோமென்றவாறு. (துயிலெழ பாடுவான் வந்தோம்) ''அநாதி மாயயா ஸுப்த:'' என்னும்படி அநாதிமாயையி னாலே உறங்கிக்கிடக்கிற நாங்கள் அவ்வுறக்கம்விட்டு உணர்ச்சிபெறுவதற் காகவும், 'ஏதத் ஸாம காயந்நாஸ்தே'' என்கிறபடியே ஸாமகானம் பண்ணிக் கொண்டிருக்கவும் வந்தோம். (வாயால் முன்னமுன்னம் மாற்றுதேயம்மா) 'நாஸம்வத்ஸரவாஸிநே ப்ரப்ரூயாத்' இத்யாதிகளைச் சொல்லி எம்மை விலக்கித் தள்ளாமல் அங்கீகரிக்கவேணுமென்கை.

இனி நேயமாலைக்கு வருவோம். (நீ நேச நிலைக்கதவம் நீக்கு). கதவுகள் இரட்டையாயிருப்பதுபோலே, திருமந்த்ரமும், த்வயமும், சரமஶ்லோக மும் இரட்டையாயிருக்கையாலே அவற்றைக் கதவாக விவக்ஷித்து அவற்றின் பொருள்களையும் உபதேஶித் தருளவேணுமென்கிறது. திருமந்த்ரமா வது–ப்ரணவம், மந்த்ரஶேஷமென்று இரட்டை; த்வயம் – பூர்வவாக்யம், உத்தர வாக்யமென்று இரட்டை, சரமஶ்லோகம் – பூர்வார்த்தம் உத்தரார்த்தம் என்று இரட்டை. இவையே நேசநிலைக்கதவ மாகச் சொல்லப்பட்டன. இவற்றைத் திறப்பதாவது – இவற்றின் பொருள்களை விவரித்தலாம்.

கதவம், நிலைக்கதவம், நேசக் கதவம் என்று மூன்றுகப் பிரித்து முறையே திருமந்திரத்தையும், சரமஶ்லோகத்தையும், த்வயத்தையும் பொருளாகக் கொள்க. (கதவம்) நம்முடைய பொருளைக் காப்பாற்றித் தருவது கதவு. *எண்பெருக்கந்நலத் தொண்பொருளான ஆத்மஸ்வரூபத் தைக் காப்பாற்றிக் கொடுப்பதான திருமந்திரம் கதவு. (நிலைக்கதவம்) நம்மை நிலை நின்று ரக்ஷிப்பதாக ப்ரதிஜ்ஞை செய்கிற சரமஶ்லோகம் நிலைக்கதவம். (நேசக்கதவம்) எம்பெருமானைக் காட்டிலும் நம் பக்கலில் நேசமுள்ளவளான பிராட்டியின் மந்திர மான த்வயம் நேசக்கதவம். ''இவள் தாயாய் இவர்கள் க்லேஶம் பொறுக்க மாட்டாதே அவனுக்குப் பத்னியாய் இனிய விஷயமாயிருக்கையாலே கண்ணழிவற்ற புருஷகாரம், திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன் சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்கச் சொல்லவேண்டாவிறே'' என்கிற முமுக்ஷுப்படி சூர்ணைகள் (128,129)

http://acharya.org

இங்கே அநுஸந்திக்கத்தக்கன. ஆக, ரஹஸ்யத்ரயத்தின் பொருளை விளக்கி யருளவேணுமென்றும், விஶேஷித்து த்வயார்த்தத்தை திறந்தருளவேணு மென்றும் பிரார்த்தித்தபடியாயிற்று. (16)

17. உறங்காமாலை

பதினேழாம்பாட்டின் ஈற்றடியில் ''உம்பியும் நீயுமுறங்கேல்'' என்றிருப் பதை நோக்கியதாம் இம்மாலைக் குறிப்பு. 'உம்பியும் நீயும் உறங்கேல்' என்பதன் உயிரான பொருள் உள்ளத்திற் பதிய வேண்டுமானுல் இங்கும் பாசுரத்தின் பூர்த்தியான உயிர்ப்பொருள் உணரப்பட வேண்டும். அதனை முன்னமுணர்த்து வோம்.

இப்பாட்டில், நந்தகோபர் யசோதை கண்ணபிரான் பலராமன் என்கிற வியாஜத்தினுல் முறையே ஆசார்யன், திருமந்த்ரம், திருமந்த்ரார்த் தம், திருமந்த்ரார்த்தஸாரம் ஆகிய இந்நான்கும் உரிய சொற்களால் தெரிவிக்கப்படுகின்றன. எங்ஙனே யென்னில்; நந்தகோபாலன் அம்பரமும், தண்ணீரும் சோறும் அறஞ்செய்வதாகச் சொல்லியுள்ளது. இம்மூன்றும் ஆசார்யனே அறஞ்செய்யக்காண்கிறோம். அம்பரமென்பது ஆகாஶம்; பரமாகாஶ ஶப்த வாச்யமான *நலமந்தமில்லதோர் நாடெனும் ஸ்ரீவைகுண்டத்தை ப்ராபிக்கச் செய்வதே அம்பரம் அறம்செய்கை. தண்ணீரென்பது விரஜையாறு. விரஜா நதீஸ்நானத்தைச் செய்விப்பவனென்கை. சோறு என்பது —''அந்நம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத்'' என்று உபநிஷத்தில் அன்னமாக ஓதப்பட்ட ப்ரஹ்மமேயாம். ''அஹமந்நாதோஹ மந்நாதோஹமந்நாத:'' என்று ஸாமகானம் செய்துகொண்டு ப்ரஹ்மாநுபவம் செய்யும்படி பண்ணுவிப்பவர் ஆசார்யர். நந்தகோபா லன் என்றதும் ஆசார்யரிடத்திற் பொருந்தும். 'எடுத்த பேராளன் நந்தகோபன்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி நந்தகோபர் நிதியெடுத்தாற்போலே அகஸ்மாத்தாகக் கண்ணனைப்பெற்றுப் பரிபூர்ண பகவத நுபவம் செய்தவர். ஆசார்யரும் அப்படியேயன்றோ.

இனி கொம்பனுர்க்கெல்லாம் என்று தொடங்கி இரண்டடிகளால் பகவானைப் பிள்ளையாகப்பெற்ற மாதாக்களுள் மிகச் சிறந்தவளே! என்று சொல்லி யசோதைப் பிராட்டி எழுப்பப்படுகிருள். ''மந்த்ரோ மாதா குரு: பிதா'' என்ற ப்ரமாணத்தின் படி மாதாவாகச் சொல்லுகிறது மந்த்ரத்தையே. மாதாவானவள் ப்ரஜையைத் தன் வயிற்றினுள்ளே அடக்கிக் கொண்டிருப்பது போல மந்த்ரமும் பகவானைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்குமே. பகவானு டைய மாதாக்களுள் யசோதை 'ஞாலத்துப் புத்திரனைப் பெற்ருர் நங்கை மீர்! நானே மற்றுருமில்லை' என்னும்படி

சிறப்புற்றது போலத் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரம் மற்றுமுள்ள மந்த்ரங்களிற் காட்டில் சிறப்புற்றதன்றே. முமுக்ஷுப் படியில் (8–11) 'பகவந் மந்த்ரங்கள் தான் அநேகங்கள்; அவைதான் வ்யாபகங்கள் என்றும், அவ்யாபகங்கள் என்றும் இரண்டு வர்க்கம். அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ஶ்ரேஷ்டங்கள்; இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம்'' என்றருளிச் செய்தது இங்கே அநுஸந்தேயம்.

இதற்கு மேல் ''அம்பரமூடறுத்து தோங்கி யுலகளந்த'' இத்யாதியால் திருமந்த்ரார்த்தம் அநுஸந்திக்கப்பட்டதாகிறது. எம்பெருமான் ஸர்வவ்யாபகன் என்பதே நாராயண மந்த்ரார்த்தமாதலால் அந்த ஸர்வவ்யாபகத்வமே இங்கு அநுஸந்திக்கப்பட்டதாயிற்று. திருமங்கையாழ்வாரும் திருநெடுந்தாண்டகத்தில் (4) ''மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும் வாழுதியேல்'' என்று திருமந்த்ர ப்ரஸ்தாவம் செய்தவுடனே (5) 'ஒண்மிதியிற் புனலுருவி' என்கிற அடுத்த பாசுரத்தினுல் திருமந்த்ரார்த்தமான திரிவிக்ரமாபதானத்தையேயன்றே அநுஸந்தித்தது. இதற்குமேல் 'செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா'' இத்யாதியினுல் பாகவதோத்தமனுன நம்பி மூத்தபிரானை (பலராமனை) யுணர்த்தியது ''நின்திருவெட்டெழுத்தும் கற்று நானுற்றது முன்னடியார்க்கடிமை'' (பெரிய.திரு.8–10–3) என்று திருமங்கையாழ்வார் திருமந்த்ரத்தின் ஸாரார்த்தமாக எடுத்துக் காட்டியருளினது பாகவத ஶேஷத்வமாகையாலே அதனை ஸூசிப்பித்தபடி. இங்கு 'உம்பியும் நீயுமுறங்கேல்'' என்று இருவரையும் ஒன்று சேர்த்துச் சொன்னது பகவச்சேஷத்வமும், பாகவத சேஷத்வமும் ஒன்றை விட்டொன்று பிரிந்திராதென்கிற தத்துவத்திற்கு ஸ்மாரகமாகும்.

சிலர், பகவச்சேஷத்வம் வேறு, பாகவதசேஷத்வம் வேறு என்று மயங்கியிருப்பர்கள்; அது தவறு. பகவச்சேஷத்வ காஷ்டையே பாகவத சேஷத்வமாகும். காஷ்டாபந்ந பகவச் சேஷத்வமேவ பாகவத ஶேஷத்வம் இத்யர்த்த:. இங்கு ''யஸ் ஸப்த பர்வ வ்யவதாந துங்காம் ஶேஷத்வகாஷ்டா மபஜந்முராரே:'' என்கிற பாதுகாஸஹஸ்ர திவ்யஸூக்தி அநுஸந்தேயம். ஆக இவ்விரண்டு சேஷத்வமும் ஒன்றைவிட்டொன்று பிரியாதென்பதை உணர்த்தவே 'உம்பியும் நீயும் உறங்கேல்'' என்று இருவரையும் சேர்த்துப் பிணைத்துப் பேசிற்று. (17)

18. மகிழ்ச்சி மாலை

பதினெட்டாம் பாட்டின் ஈற்றடியில் 'வந்து திறவாய் மகிழ்ந்து' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைக் குறிப்பு. 'பந்தார் விரலி யுன்மைத்துனன் பேர்பாடச் செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப மகிழ்ந்துவந்து திறவாய்''

http://acharya.org

என்னுமளவும் ஒரு வாக்கிய மாகையாலே இவ்வளவுக்கும் உயிரான பொருளை அறிந்தாலல்லது 'மகிழ்ச்சி மாலை' அறியப்போகாதாதலால் அதனை அறிவிக்கிறோம் முன்னம்.

(பந்தார்விரலி) 'ஹரே விஹரஸி க்ரீடா கந்துகைரிவ ஜந்துபி:' என்கிற படியே லீலோபகரணமாயிருக்கின்ற பிராணிகளையே பந்தாகச் சொல்லுகிறது. இவர்களைக் கைப்படுத்தி அவர்களோடே போது போக்குவர் ஆசாரியர். (செந்தாமரைக்கையால்) யதிராஜஸப்ததி யில் (25) ''உந்நித்ரபத்மஸுபகாம் உபதேஶ முத்ராம்'' என்று கூறியிருப் பதை நினைப்பது. உபதேஶமுத்ரை கொண்ட திருக்கையினுலென்றபடி. (சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்) த்வனிப்பொருள்கள் மல்கும்படி உபதேஶித்தருள வேணுமென்கை. (மகிழ்ந்து) எம்முடைய நிர்பந்தத்திற்காக வன்றிக்கே தம்பேருக உகந்து உபதேஶிக்க வேணுமென்கை. இப்பாட்டுக்கு அந்தரங்கமான வொரு ஸ்வாபதேஶார்த்தம் கேளீர். 'தக்கார் பலர் தேவிமார் சாலவுடையீர்' (பெரிய.திரு. 10-8-8) என்றும், 'பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு' (பெரியாழ்.திரு. 4-1-6) என்றும் சொல்லுகிறபடியே கண்ணபிரானுக்கு இவ்வவதாரத்தில் பல பல தேவிமார்களிருந்தாலும் திருவாய்ப் பாடியில் நப்பின்னைப் பிராட்டியே மிகச்சிறந்த தலைத்தேவியாவள். இதுபோல எம்பெருமானுக்கு அபிமத விஷயபூதர்களான ஆசாரியர்கள் பல பலரிருந்தாலும் எம்பெருமானுரொரு வரே 'தஸ்மிந் ராமாநுஜார்யே கு₃ருரிதி ச பத₃ம் ப₄ாதி நாந்யத்ர'' என்னும்படி அவன் திருவுள்ளமுகந்த பேராசிரிய ராவர். ஒருவர்க்கு மடங்காத ஏழு காளை களை வலியடக்கிக் கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணம் புரிந்தான். பகவான் எம்பெருமானுரைப் பரிக்ரஹித்து, ஒருவர்க்குமடங்காத காளைபோன்ற ஏழுவிரோதிகளைக் களைந்தொழித்தான். அந்த ஏழு விரோதிகள் யாவரென்னில், ''அறுசமயச் செடியதனை அடியறுத்தான் வாழியே'' என்பதிற் சொல்லப்பட்ட அறுவரும் ''செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்து விட்டான் வாழியே'' என்பதிற் சொல்லப்பட்ட கலி புருஷனுமாக எழுவர். இந்த நப்பின்னையைக் ''கந்தங் கமழுங் குழலீ!'' என்று கேசபாசத்தி னழைகையிட்டுக் கூறினது எம்பெருமானுர் மதாந்தர ஸந்ந்யாஸி களைப் போலே சிகையைத் துறவாமல் ''கமநீயஶிகாநிவேஶம்'' என்றும், ''ஶிகயா ஶேகரிணம் பதிம் யதீநாம்'' என்றும், ''காரிசுதன் கூழல் சூடிய முடியும் கனநற் சிகைமுடியும்'' என்றும் சொல்லுகிறபடியே சிகாபந்த ஸௌந்தர் யத்துடன் எழுந்தருளியிருந்தபடியை நினைப்பூட்டும். பந்தார் விரலி! என்றதும் ஸ்வாமிக்கு மிகப்பொருத்தம். பந்து என்பது ஆசார்யஹ்ருதயத்தில் (149) ''பந்து கழற்பாவை...பொங்கைம்புலனில் போக்யாதி ஸமூஹம்'' என்றருளிச்

http://acharya.org

செய்தபடி லீலாவிபூதி முழுவதையும் சொல்லுகிறது. இது நித்ய விபூதிக்குமுப லக்ஷணம். ஸ்வாமிக்கு உடையவர் என்றிறே திருநாமம்; உபயவிபூதியும் தம் கையிலே யுடையவர் என்றபடி. அதுவே பந்தார் விரலி யென்பதனால் ஸூசிதமாகிறது.

இப்பாட்டின் ஈற்றடியில் மகிழ்ந்து என்கிற வினையெச்சம் உயிராகக் கொள்ளப்பட்டது. உபதேசிக்கும் ஆசிரியர்க்கு மகிழ்ச்சியுண்டாவது அரிது; ஏனென்றால், இவன் ஸம்வத்ஸர வாஸம் பண்ணிற்றிலனே; ''நாஸம்வத்ஸரவாஸிநே ப்ரப்ரூயாத்'' என்கிற விதியைக் கடந்து உபதேசிக்க வேண்டியிருக்கிறதே; ஶிஷ்ய: ப்ராப்த: ப்ரீக்ஷாம் –ஶிக்ஷணீய: என்றிருக்க ஒரு பரீக்ஷையுமின்றிக்கே இவனுக்கு உபதேசிக்கவேண்டிய தாகிறதே; இவன் ப்ரேமத்தோடே பேணியநுஸந்திக்கு மவனே அல்லனே? இத்யாதி ஶங்கைகளினால் நெஞ்சு தளும்பியிருக்கு மாசிரியர்க்கு மகிழ்ச்சி எங்ஙனே யுண்டாகும்? ஆனாலும் ''மனமுடையயீ ரென்கிற ஶ்ரத்தையே அமைந்த மர்மஸ்பர்ஶிக்கு நானும் நமருமென்னும் படி ஸர்வருமதிகாரிகள்'' என்கிற ஆசார்யஹ்ருதய (18) ஸூக்தியின்படி எங்களைப் பூர்ணாதிகாரிகளாகக் கொண்டு மகிழ்ச்சியில் ஈஷத்தும் குறையின்றியே பரமத்ருப்தியோடு நெஞ்சு திறந்து வாய்திறந்து கதவு திறந்து உபதேசிக்க வேணுமென்கை. (18)

19. தகவுமாலை

பத்தொன்பதாம் பாட்டின் ஈற்றடியில் *தத்துவமன்று தகவென்றிருப் பதை நோக்கியது இம்மாலைக்குறிப்பு. தத்துவமன்று தகவு என்று யாரை நோக்கிச் சொல்லப்படுகிறது? என்ன காரணத்தினால் சொல்லப்படுகிறது? என்று தெரிந்து கொண்டாலன்றி இங்கு ஈற்றடியின் பொருள் த்ருப்திகரமாக நெஞ்சிற்புகாது. ஆகவே *மைத்தடங் கண்ணினையென்று தொடங்கி விவரித்தாகவேண்டும். நுட்பமாக விவரிக்கிறோம்.

(மைத்தடங்கண்ணினாய்) ஆசார்ய ஸார்வபௌமருடைய விஶேஷாபிமான பாத்ரபூதனான விலக்ஷண ஶிஷ்யனு டைய தன்மை சொல்லுகிறது இதனால். மையென்பது அஞ்சனம். அதாவது ஸித்தாஞ்ஜனம். 'மநஸி விலஸதாக்ஷ்ணா பக்தி ஸித்தாஞ்ஜநேந' என்று பட்டரும், 'ஸித்தாஞ்ஜநேந பவதைவ விபூஷிதாக்ஷா: பஶ்யந்தி'' என்று தேசிகனும் பணித்தபடியே பக்தி ஸித்தாஞ்ஜனம் அணியப் பெற்று அதனால் ஞானவிகாஸம் பெற்றவரே! என்கை. (நீயுன் மணாளனை எத்தனை போதும் துயிலெழவொட்டாய்) மணாளன் என்கிறது ஆசார்யரை. அவர் கண் திறந்து எங்களைக் கடாக்ஷிக்க நினைத்தாலும் எங்கள் மேல் கடாக்ஷ வீக்ஷணம் ப்ரஸரிக்க வொண்ணாதபடி உன்மேல் ஒரு

மடைப்படுத்தியிருக் கின்ருயே என்றவாறு. இப்படியிருக்கை யன்ரே ஸச்சிஷ்யர்களுக்குப் பெருமை. ''எத்தனே போதும் துயிலெழவொட்டாய்'' என்றதனுல் அந்தப் பெருமைதான் காட்டப்பட்ட தாகிறது. (எத்தனேயேலும் பிரிவாற்ற கில்லாய்) 'ஆசாரியன் செய்த உபகாரமாவது, தூய்தாக நெஞ்சு தன்னில் தோன்று மேல் தேசாந்தரத்திலிருக்க மனந்தான் பொருந்தமாட்டாது' என்கிறபடியே ஆசார்யரை க்ஷணகாலம் விட்டுப் பிரிகையும் அஸஹ்யமாயிருக்கு மாயிற்று ஸச்சிஷ்யனுக்கு.

(தத்துவமன்று தகவு – தத்துவம் தகவன்று) இதில் பரம குஹ்யமான வேதாந்த விழுப்பொரு ளொன்று நுட்பமாகக் காணத்தக்கது. அத்வைதிகள் ''தத்த்வமஸி'' என்கிற வாக்யத்தையே பற்றிக்கொண்டு அத்வைத வாதத்தை ப்ரபலப்படுத்து கிருர்கள். அவர்கள் கூறும் பொருளே நம் ஆசார்யர்கள் அயுக்தமென்று கண்டிக்கிருர்கள்; இங்கு 'தத்த்வம் தகவன்று' என்றது *தத்த்வமஸிக்குப் பிறர்கூறும் பொருள் தகுதியற்றது– என்று ஸூசிப்பித்தபடி. தத்த்வமஸிக்கு நாம் சொல்லும் பொருள் தகுதியற்றது என்று ஸூசிப்பித்ததாகவும் ஆகலாமன்ரே? என்று சிலர் கேட்கக் கூடும். அவர்களே முன்னம் தெளிவிக்கிரேம். 'தத் த்வம் தகவன்று' என்று மூலத்திலுள்ளது; தத் என்பதற்கு வாச்யமான பரப்ரஹ்மமும், த்வம் என்பதற்கு வாச்யனுன ஜீவாத்மாவும் ஒன்றே யென்பது தகவன்று என்பதாக ஸ்வரஸப்பொருள் கிடைப்பதால் அந்யதா ஶங்கைக்கு அவகாஶமில்லே. பட்டருடைய ஶ்ரீரங்கராஜஸ்தவ உத்தர ஶதகத்தில் (24) ''தத்த்வமஸ்யேவமாத்யா வ்யாக்யாதா ரங்கதாம ப்ரவண விஜயிபிர் வைதிகை: ஸார்வபௌமை:'' என்றவிடத்து நம்முடைய சிந்தாமணி வியாக்யானத்தில் *தத்த்வமஸிக்குப் பிறர் கூறும் பொருள் ஸர்வாத்மநா அஸங்கத மென்பது மிகவிரிவாக உரைக்கப்பட்டிருப்பதால் அங்குக் கண்டுகொள்வது.(19)

20. நீராட்டுமாலே

இருபதாம்பாட்டின் ஈற்றடியில் ''இப்போதே யெம்மை நீராட்டு'' என்றிருப்பதை நோக்கியது இம்மாலேக் குறிப்பு. நப்பின்னே நங்கையை நோக்கி ''உன்மணுளனே எம்மை இப்போதே நீராட்டு'' எனப்படுகிறதிங்கு. உன் மணுளனேடே எம்மைச் சேர்த்து நீராட்டு என்பது தாத்பர்யமாகத் தேறுகின்றது. நீராடுவதென்பது தாபம் தீருகைக்காகச் செய்யும் செயலாதலால் உன்மணுளனு டைய தாபமும் எங்களுடைய தாபமும் தீர்ந்ததாகும்படி திருவே! நீ செய்ய வேணுமென்கிற பிரார்த்தனே தேறிற்ருகிறது. ஸம்ஸாரிகளான நமக்குத் தாபமுண் டென்பது வாஸ்தவம்; ''ஸம்தப்தம் விவிதைர் து:கை: துர்வசை ரேவமாதிபி:।

தேவராஜ தயா ஸிந்தோ! தேவதேவ! ஜகத்பதே, த்வதீக்ஷண ஸுதாஸிந்து வீசி விக்ஷேபசீகரை:, காருண்ய மாருதாநீதை: சீதலைரபிஷிஞ்ச மாம்'' (தேவராஜாஷ்டகம் 7,8) என்று திருக்கச்சி நம்பிகளும், ''தாபத்ரயீமய தவாநல தஹ்யமாநம்.. ஹஸ்தீச! த்ருஷ்ட்யம்ருத வ்ருஷ்டிபிரா பஜேதா:'' (வரதராஜஸ்தவம் 72) என்று கூரத்தாழ்வானும் பணித்தபடியே நாம் தாபதப்தர்களாயிருக்கிறோம்; எம்பெருமானுக்குத் தாப ப்ரஸக்தியேது? என்று கேட்கக்கூடும். கேண்மின். பிள்ளைப் பெருமாளையங்கார் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் திருநாங்கூர்த் திருவெள்ளக்குளத் திருப்பதிக்குப் பாடல் பாடுமவர்; ''நானடிமை செய்ய விடாய் நானுனே னெம்பெருமான், தானடிமை கொள்ள விடாய் தானுனன்—ஆனதற் பின், வெள்ளக் குளத்தே விடாயிருவரும் தணிந்தோம், உள்ளக்குளத் தேனையொத்து'' என்று பாடினர். எம்பெருமானுக்கு அடிமை செய்யவேணு மென்கிற விடாய் நமக்கிருப்பதுபோல, நம்மை அடிமை கொள்ளவேணுமென்னும் விடாய் அவனுக்குமுள்ளது. சேதநனும் ஈஶ்வரனும் கலந்தால் இருவருடைய விடாயும் தணியுமாயிற்று. உண்மையில் நம்முடைய விடாயிற்காட்டிலும் அவனுடைய விடாய் மிகப்பெரிது என்பது ஆழ்வார்களின் ஈரச்சொற்களினுல் அறுதியிடப்படுகின்றது. பகவத் கீதையில் (8–14) 'அநந்யசேதாஸ் ஸததம் ... தஸ்யாஹம் ஸுலப: பார்த்த'' என்றவிடத்திற்கு பாஷ்யமருளா நின்ற ஸ்வாமி ''தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே'' என்று பகவானுடைய உக்தியாக வருளிச் செய்துள்ளார். அவன் பேராவல் கொண்டு நம்மோடு ஸம்ச்லேஷிக்க வந்தாலும் நாம் வெறுத்துத் தள்ள, அவன் நம்முடைய பிரிவை ஆற்றவொண்ணுமே பதறுகிருனென்ருல் அவனது விடாய் எத்தகைத்தாயிருக்க வேண்டும்! ஆளவந்தாரும் ''மஹாத்மபிர் மாம் அவலோக்யதாம் நய க்ஷணேபி தே யத்விரஹோதி துஸ்ஸஹ:'' (ஸ்தோ.ர.56) என்றருளிச்செய்தாரிறே. அவனுடைய விடாயை உள்ளபடி யறிந்தவர்கள் பேசுகிற பேச்சுகளன்றோ இவை. 'க்ஷுத் த்ருட் பீடித நிர்தநரைப்போலே கண்டு கொண்டுண்டு பருகி'' என்ற ஆசார்ய ஹ்ருதய திவ்யஸூக்தி யொன்று போதுமே. ஆக, நப்பின்னை நங்காய் திருவே! எம்மையும் உன்மணாளனையும் இப்போதே நீராட்டு என்றது இருதலையினுடையவும் தாபத்தைத் தணியச் செய்திடாய் என்றதாயிற்று. (20)

21. புகழ்மாலை

இருபத்தோராம் பாட்டின் ஈற்றடியில் 'போற்றியாம் வந்தோம் புகழ்ந்து'' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைக்குறிப்பு. இது கண்ணபிரானை நோக்கி ஆய்ச்சியர்கள் சொல்லுவது. 'மாற்ருருனக்கு வலிதொலைந்து உன்

வாசற்கண் ஆற்றாது வந்து உன்னடிபணியுமாபோலே போற்றியாம் வந்தோம் புகழ்ந்து'' என்னுமளவும் ஒரு வாக்கிய மாகையாலே இதற்குச் சேர பொருள் காணவேணும். பகவத்பரமான அர்த்தமும், ஆசார்யபரமான அர்த்தமும் இதற்குக் கேளீர். ஸர்வபூத ஸுஹ்ருத்தாகவும், ஸர்வபூதேஷு ஸமனாகவும், *தேவாநாம் தாநாவாநாஞ்ச ஸாமாந்ய தைவதமாகவும் ப்ரஸித்தனான பகவானுடைய திருவுள்ளத்தினாலே மாற்றாரெனப் படுபவர் யாருமிலர். 'பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:'' என்று பகவதுக்தியின் படியே தாம் தாமாக பாகவத விரோதம் பண்ணித் திரியுமவர்களே மாற்றாரெனப் படுபவர். அன்னவர்கள் எதிரம்பு கோத்து ஜீவிக்க மாட்டாமல் தத்தம் வலிமாண்டு தங்கள் அநந்யகதித்வம் தோற்ற உன் திருவாசலிலே வந்து படுகாடு கிடந்து போற்றிப் புகழுமா போலே நாங்களும் வந்து சேர்ந்து உனது பாலேபோல் சீரில் பழுத் தொழிந்து புகழுரைகளைப் பேசாநின்றோ மென்கை. இனி ஆசார்ய பரமான அர்த்தம் கேளீர்.

(மாற்றாருனக்கு வலி தொலைந்து இத்யாதி) மாற்றார் — மாறுபாடு கொண்டவர்கள்; பகைவர்களென்றபடி. ப்ரமாணங்களையும், ப்ரமேயங்களையும், ப்ரமாதாக்களையும் தூஷித்துக்கொண்டு வேறுபட்டிருந்த மதாந்தரஸ்தர்கள் இங்கு மாற்றார் எனப்படுகிறார்கள். அவர்கள் வந்து வாதஞ்செய்து வலிமாண்டு அடிபணிந்தார்களென்பது எம்பெருமானார் பட்டர் நம்பிள்ளை போல்வாருடைய சரிதைகளிலே விசதம். யாதவப்ரகாசர், யஜ்ஞமூர்த்தி முதலானோர் எம்பெருமானார் திருவடி களிலே வலிதொலைந்து அடிபணிந்தவர்கள். தஞ்சீரை ஞானியர்கள் தாம் புகழும் வேதாந்திகள் நஞ்சீயராகி பட்டர் திருவடிகளிலே வந்து பணிந்ததும், துன்னுபுகழ்க் கந்தாடை தோழப்பர், நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் முதலானோர் நம்பிள்ளை திருவடி களிலே வந்து பணிந்ததும் ப்ரஸித்தம். அவரவர்கள் குணங்களுக்குத் தோற்றுப் போற்றிப் புகழ்ந்துகொண்டு வந்து புகுந்ததுபோலே அடியோங்களும் வந்து புகுந்தோம். எம்மையும் ஆட்கொண்டருள வேணும் — என்று வேண்டிக்கொள்ளுகிற படி. அத்வேஷிகளாகவும் அநுகூலர் களாகவுமிருந்தவர்கள் வந்து பணிவதிற் காட்டிலும் த்வேஷிகளாயிருந்தவர்கள் மாச்சரியம் நீங்கி வந்து பணிவது விசேஷமாதலால் அஃது இங்கெடுத்துப் பேசப்பட்டது. ஆசார்யவிஷயத்தில் சிஷ்யர்கள் முக்கியமாகச் செய்ய வேண்டியது 'குரும் ப்ரகாஶயேத் தீமாந்' என்கிறபடியே ஆசார்யனுடைய திருக்குணங்களைப் புகழ்வதேயாம்.''ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும் மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனும் காணகில்லான், போற்றியுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றிவளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே,'' (21)

22. சாபநிவாரணமாலை

*அங்கண்மாஞாலப் பாசுரத்தில் 'அங்கணிரண்டுங் கொண்டெங்கள்மேல் நோக்குதியேல் எங்கள் மேல் சாபம் இழிந்து' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைக்குறிப்பு. ஆனால் சாபநிவாரண மென்றிருக்கத்தகாது. சாபநிவ்ருத்தி மாலை யென்றிருக்கவேணும். நிவாரண மென்பதற்கு போக்குவதென்று பொருள். சாபத்தை ஒருவர் போக்குவதா கப் பாசுரத்தில் சொல்லப்பட்டிருக்க வில்லை. சாபம் தன்னடையே தொலையு மென்றே சொல்லப்பட்டுள்ளது. அதற்குச் சேர நிவ்ருத்திபதம் இருக்கவேணுமே யல்லது நிவாரணபதம் இருக்கத்தகாது. விழுந்தா னென்பதற்கும் தள்ளுண்டான் என்பதற்கும் எவ்வளவு வாசியுண்டோ அவ்வளவு வாசியுண்டு நிவ்ருத்திக்கும் நிவாரணத்திற்கும். ஆகவே சாப நிவ்ருத்தி மாலையென்று மகுடத்தைத் திருத்திக் கொள்வது. எம்பெருமானு டைய கடாக்ஷம் சாபநிவாரணம் செய்வ தாகக் கொண்டால் என்ன குறை? என்று மன்றுடவேண்டா. தப்பென்று நாம் சொல்லிவிட்டால் தப்புத்தானது. ''த்ராதும் நஶக்த்யா யுதிராமவத்யம்'' என்றதை நினைப்பது. சாமமிழியுமாலை யென்று எளிதாக இட்டிருக்கலாமே. இது நிற்க. ஆய்ச்சிகள் தங்கள் மேல் ஏதோ சாபமிருப்பதாக இப்பாட்டில் சொல்லு கிறார்களே, இவர்களுக்கு எவ்விதமான சாபம், யார் கொடுத்த சாபம்? எப்போது கிடைத்த சாபம்? என்று கேட்கவேண்டா; அவசியம் அனுபவித்தே தீரவேண்டிதான பாபமே சாபமென்பது. எம்பெருமானை விட்டுப் பிரிந்திருப்பதானது ப்ரபல பாபத்தின் பலனுதலால் இதுவே சாபமெனப்படுகிறது. இது அவன்றன்னு டைய திருக்கண்ணோக்கம் பட்டவாறே தொலையுமென்க. இங்கு 'ச்ரமணீ விதுர ரிஷிபத்னிகளைப் பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு சாபமிழிந் தென்னப் பண்ணுமிறே'' என்கிற ஆசார்ய ஹ்ருதய சூர்ணை (95) வியாக்கியானத் துடன் அநுஸந்திக்கத்தக்கது. எம்பெருமானுடைய ஒவ்வோர வயவமும் ஒவ்வொருவருடைய சாபம் தீர்த்தது. திருவடித்தூள் அஹல்யையின் சாபம் தீர்த்தது. திருமுழந்தாள் குபேர புத்திரர்களான நளகூபர மணிக்ரீவர் களின் சாபம் தீர்த்தது(யமளார்ஜுந பங்க கதையை நினைப்பது). திருத்துடைகள் மதுகைடபர்களின் சாபம் தீர்த்தன. *பிஷ்டதுஷ்ட மதுகைடப கீடௌ இத்யாதி ஸுந்தரபாஹுஸ்தவ ஸூக்தியை ஸ்மரிப்பது. ருத்ரசாபம் மார்வில் ஸ்வேதத்தாலே தீர்ந்தது. துர்வாஸச் சாபம் மார்பிலிருப்பவளாலே தீர்ந்தது. இப்போது திருக்கண்களாலே ஒரு சாபம் தீர்கிறது. நித்யஸம்ச்லேஷம் கிடைப்பதே இவர்களுக்கு ஶாபம் தீர்வதாம்.

எம்பெருமானுடைய திருமேனி யில் மூன்று திவ்யாவயவங்கள் பக்தர் களுக்கு முக்கிமானவை. இவற்றுள் முதல் அவயவம் திருக்கண்; 'ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேத் மதுஸூதந:।

http://acharya.org

ஸாத்த்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:'' என்கிறபடியே ஜாயமாந காலத்திலேயே கடாக்ஷித்து ஸாத்த்விகத்வத்தை யுண்டாக்கவல்ல தன்றோவிது. அப்படி கடாக்ஷிப்பெற்ற வர்களுக்குத் திருவடியே தஞ்சமாகிற படியால் அது இரண்டாவதான அவயவம். அப்படி திருவடிகளிலே விழுந்தவர்கள் 'அஞ்சேலென்று கைகவியாய்' என்று அபயப்ரதானத் தையே விரும்பிக் கொண்டிருப்பவர்களா தலால் அபயமுத்ராஞ்சிதமான ஹஸ்தம் மூன்றாவதான அவயவம். இவை யெல்லாவற்றினுள்ளும் முக்கியமான அவயவம் திருக்கண்களேயாகும். அவற்ருல் கடாக்ஷிக்கப்பெற்ருல் ஶாப மென்று பேர்பெற்றவையெல்லாம் தொலைந்து போம். அவஶ்யம் அநுபோக்தவ்யமான பாபமென்று எதுவும் சேஷியாது. இங்கு ஸ்வாபதேஶார்த்த முறையில் ஆசார்ய ருடைய கடாக்ஷமே அபேக்ஷிக்கப்படு கிறது. ஆசார்யர் முதலிலேயே பரிபூர்ண கடாக்ஷம் செய்தருளினல் அதை பால ஶிஷ்யர்கள் தாங்ககில்லார்கள். *புள்ளுப் பிள்ளைக்கிரைதேடும் மென்கிற புள்ளம் பூதங்குடிப் பாசுரத்தின் வியாக்கியானத் திலே ஆலவாயுடையானென்னும் தமிழனுக்கு பட்டர் உரைத்தருளின அர்த்த விஶேஷத்தின்படி ஶிஷ்யர்கள் தாங்கள் கிரஹிக்கக்கூடியவளவில் அர்த்தங்களைச் சிறுகச் சிறுக உபதேஶிப் பதுதான் செங்கண்சிறுச்சிறிதே விழிக்கை. இனி அங்கணிரண்டுங்கொண்டு விழிக்கையாவது – (இது விஶேஷித்துக் குறிக்கொள்ள வேண்டிய சீரிய பொருள்) ஸுபாஷிதநீவியிலும், ஸங்கல்ப ஸூர்யோதயத்திலுமுள்ளதொரு ஶ்லோக ரத்நம் கேண்மின்; ''ஏகயைவ குரோர் த்ருஷ்ட்யா த்வாப்யாம் வாபி லபேத யத், நதத் திஸ்ருபிரஷ்டாபிஸ் ஸஹஸ்ரேணாபி கஸ்யசித்'' என்பது. ஆசார்யனுடைய ஒரு திருக்கண்ணினுலோ, இருதிருக்கண்க ளாலோ ஒருவன் அடையக்கூடிய நன்மையை மற்றையோருடைய மூன்று கண்களினுலும், எட்டுக் கண்களினுலும், ஆயிரங்கண்களினுலும் அடைய முடியாது என்கை. ஆசார்யனுடைய ஒரு திருக்கண்ணாவது 'ஶுபேந மநஸா த்யாதம்' என்னும்படியான அந்தரங்க கடாக்ஷம். எம்பெருமானாரை ஆளவந்தார் 'ஆமுதல்வனிவன்' என்று உட்கண்ணாலே கடாக்ஷித்தது இங்கு நினைக்கத்தக்கது. இனி ஆசாரியன் இரு திருக்கண்களாலே கடாக்ஷிக்கையாவது – உட்கண்ணாலும், வெளிக்கண்ணாலும் கடாக்ஷிக்கையாம். ''சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந'' என்று சபரி சொன்னபடிக்கும், ''யம்யம் ஸ்ப்ருஶதி பாணிப்யாம் யம்யம் பஶ்யதி சக்ஷுஷா'' என்றபடிக்கும் வெளிக்கண் பார்வைதானே பவித்ரமாக்கவல்லது; உட்கண் கடாக்ஷமும் உடன்சேர்ந்தால் கேட்க வேணுமோ? (மேலெடுத்த ஶ்லோகத்தில் ஸஹஸ்ரேணாபி என்றத ஞல் இந்த்ரன் கண் விவக்ஷிதமன்று;

http://acharya.org

புருஷஸூக்தோபக்ரமத்தில் ஸஹஸ்ராக்ஷ: என்றும், திருவாய்மொழியில் ''துணைமலர்க்கண் களாயிரத்தாய்'' என்றும் சொல்லப்பட்ட பரமபுருஷனுடைய திருக்கண்ணே விவக்ஷிதம்.) ஆக, த்ரிமூர்த்திகளின் கடாக்ஷத்தினும் மேம்பட்டதான ஆசார்ய கடாக்ஷம் லபிக்கப்பெற்றால் ஶாபம் தொலையத் தட்டென்? ப்ரபலமான அவித்யாதிகளையே ஶாபமென்கிறது. ''போயிற்று வல்லுயிர்ச்சாபம்'' என்றவிடத்து வியாக்கியானம் ஸேவிப்பது. (22)

23. ஆராய்ச்சிமாலை

*மாரிமலை முழஞ்சிற் பாசுரத்தின் ஈற்றடியில் *யாம்வந்தகாரியம் ஆராய்ந்தருள் என்றதை நோக்கியது இம்மாலைக் குறிப்பு. தாம்வந்த காரியம் இன்னதென்பதைச் சொல்லாதே 'காரியமாராய்ந்தருள்' என்னக்கூடாது. கீழ்ப்பாட்டிலே எம்மைக் கடாக்ஷித்தருளவேணுமென்று பிரார்த்தித்த ஆய்ச்சிகளை நோக்கிக் கண்ணபிரான் 'ஆயர் சிறுமிகளே! என்னிடம் பலர்வந்து கடாக்ஷிக்க வேணும் கடாக்ஷிக்கவேணும் என்பதுண்டு; கண்ணைத் திறந்து பார்ப்பது தானே கடாக்ஷம்; பார்த்தாயிற்று, போங்கள்' என்றால் உடனே, ஒரு காரியமாக வேணுமென்று ப்ரஸ்தாவிப்பர்கள்; நீங்களும் அப்படி ஒரு காரியத்தை உத்தேஶித்து வந்தவர்கள் தானே; அது இன்ன காரியமென்பதைச் சொல்லிவிடுங்கள்' என்று பணித்தான். அது கேட்ட ஆய்ச்சிகள் 'பிரானே! திருப்பள்ளியறையில் சயனித்தபடியே என்னகாரியமென்று கேட்டருளாதே; உன் கோயில் நின்றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து அதன்பிறகு யாம் வந்த காரியம் இன்னதென்பதை ஆராய்ந்தருள்' என்றார்கள். ஆகவே இங்கு ஆராய்ந்தருள் என்பதற்கு ஆலோசித்தருள் என்பது பொருளன்று; வினவியருள் என்பது பொருள். இவர்கள் வந்த காரியத்தை இப்பாட்டிலும் சொல்லவில்லை, மேற்பாட்டிலும் சொல்லவில்லை என்று பலர் நினைப்பர்கள். இரண்டுபாட்டிலும் சொல்லியேயிருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அறிய வேணும். ஆராய்ச்சியில் வல்லவர்களே இதை அறியவல்லவர்கள் என்று காட்டவே ஆராய்ந்தருள் எனப்பட்டது. கீழே எட்டாம்பாட்டிலும் ஆராந்தருளென்றுள்ளது. இங்கும் அங்ஙனமேயுள்ளது. ஆனால் பொருளில் வாசியுண்டு. அங்கு அருள்வன் என்பது அருளென்று குறைந்துகிடக்கிறது. தேவாதிதேவனை நாம் சென்று ஸேவித்தால் (அவன்) ஆராய்ந்து ஆவாவென்று அருள்வன் என்றதங்கு. இங்கு அருளவேணுமென்று வேண்டுகோள். அருள் – ஏவலொருமை வினைமுற்று என்க. நுனிப்புல் மேய்வார் கடக்கநின்று, ''ஸாரம் து ஸாரஸ்வதம் ஜாநீதே நிதராம்'' என்னும்படியான ஞானப்பெருமை வாய்ந்தவர்கள்

ஆராய்ந்து பார்த்தால் இவர்கள் வந்த காரியம் இப்பாட்டிலேயே சொல்லப் பட்டுள்ளதென்று அறியலாம். வந்த காரியம் என்றது வருகைக்கு உறுப்பான காரியம் என்றபடி. ''யத்கார்யார்த்தம் வயமாகதாஸ்ம: தத்கார்யம் விசாரயேத் யர்த்த: இவர்களுக்கு உத்தேச்யமான காரியம் இப்பாட்டில் தெரிவிக்கிறபடி கேண்மின். கண்ணபிரான் பள்ளிகொள் ளும் போது ''ஏரார்கோலந் திகழக் கிடந்தாய் கண்டேனெம்மானே!'' என்றும் ''அம்மாமலர்க்கண்வளர்கின்ருனே என்னுன் செய்கேனே!'' என்றும் ஈடுபட்டு ''அரவணையாய் ஆயரேறே!' துயிலெழாயே'' என்று திருப்பள்ளி யுணர்த்தவேணுமென்பது ஒரு காரியம். இக்காரியம் நிறைவேறியாயிற்று. அடுத்த காரியங்கள் — உள்ளிருந்து புறப்பட்டருளு மழகு காணவேணும், சீரியசிங்காசனத்து வீற்றிருக்குமழகு காணவேணும், பல்லாண்டு பாட வேணும் என்பன. இவை ஒவ்வொன்றும் ஸமப்ரதானங்க ளான காரியங்கள். புறப்பட்டருளும் அழகு காண்கையும், வீற்றிருக்குமழகு காண்கையுமாகிற காரியங்களானவை விண்ணப்பம் செய்தவுடனே இப்பாட்டிலேயே ஸித்தித்துவிட்டன. பல்லாண்டு பாடுகையாகிற காரியம் அடுத்தபாட்டில் நிறைவேறுகிறது.

பெருமாள் புறப்பட்டருளு மழகுண்டே, அது வாசாமகோசரம். இது விஶேஷித்து நம்பெருமாள் ஸந்நிதி யிலே அநுபவிக்கத்தக்கது. ஸ்ரீராமாய ணத்தில் பெருமாளுடைய புறப்பாட்டி னழகை ''பர்வதாதிவ நிஷ்க்ரம்ய ஸிம்ஹோ கிரிகுஹாஶய:'' என்று வான்மீகி வருணித்தார். அதனையே ஆண்டாள் இப்பாட்டில் நான்கு அடிகளாலே விவரித்துரைத்தாள். அதற்குமேல் 'உன்கோயில் நின்று இங்ஙனே போந்தருளி' என்பதனுல் நடையழகு காணுமாசை தெரிவிக்கப் பட்டது. அசோகவனத்திலே அலற்ரு நின்ற பிராட்டி ''தந்யா: பஶ்யந்தி மே நாதம் ஸிம்ஹ விக்ராந்தகாமிநம்'' என்று பெருமாளுடைய நடையழகை நினைத்துப் புலம்பினுள். ''அக்ரதஸ் தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குஶகண்டகாந்'' என்று சொன்னவள் முன்னே போகாமல் ''அக்ரத: ப்ரயௌ ராம: ஸீதா மத்யே ஸுமத்யமா'' என்னும்படி பெருமாளை முன்னே போகவிட்டுத் தான்பின்னே போனது அவருடைய நடையழகு காணவேண்டியேயன்ரே. அந்த நடையின் சிறப்பு விளங்கவே முனிவனும் யயௌ என்னுதே ப்ரயயௌ என்ருன். ஸுமித்திரை இளையபெருமாளுக்கு வநப்ரயாண அநுமதி தருமிடத்து ''ராமே ப்ரமாதம் மா கார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி'' என்று கூறினவள் பெருமாளுடைய நடை யழகிலே துவக்குண்ணுதே கொள்ளாய் என்றன்ரே ஶிக்ஷித்தது. கச்சதா மாதுல குலம் என்றவிடத்துள்ள கச்சத்து போலன்றே இந்த கச்சத்து.

இனி கண்ணபிரானுடைய

http://acharya.org

நடையழகு பற்றிச் சொல்லவேணுமோ? ''கானகம்படி யுலாவி யுலாவிக் கருஞ்சிறுக்கன் குழலூதினபோது, மேனகையொடு திலோத்தமை யரம்பை உருப்பசியரவர் வெள்கிமயங்கி, வானகம்படியில் வாய்திறப்பின்றி ஆடல்பாடலவை மாறினர்தாமே'' என்னும்படியாகவன்றோ கண்ணபிரானுடைய உலாவுதல். இப்படிப்பட்ட நடையழகைக் கண்ணன் கானகத்திலேயன்றோ காட்டுவது. காவலிலே அடங்கியொடுங்கி நடுங்கிக் கிடந்த விவர்களுக்கு அந்நடையழகு காண அவகாஶமேது. *விண்ணின்மீதமரர்கள் விரும்பித்தொழ மிறைத்தாயர்பாடியில் வீதியூடே காலிப்பின்னே யெழுந்தருளுமளவில் நடையழகு காணலாமெனினும் *சாலகவாசல்பற்றி நுழைவனர் நிற்பனராகி யிருந்தவக்காலத்திலும் கண்ணுரைக்காண அவகாஶமில்லாமே போயிற்று. அவ்விழவுகள் தீர இப்போது சதுர்கதியும் சதுரகதியும் காணக் குதூஹலித்தபடி.

இதற்குமேல் சீரியசிங்காசனத் திருக்குமழகு காணவாசை. ''பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு பௌவமெறி துவரை எல்லாருஞ் சூழச் சிங்காசனத்தே யிருந்தானைக் கண்டாருளர்'' (பெரியாழ். திரு.4–1–6) என்கிறபடியே நரகனைத் தொலைத்துக் கவர்ந்த பதினாறுமாயிரவர் தேவிமார்களுடனே ஶ்ரீத்வாரகையிலே சீரியசிங்காசனத் திருந்தவழகைக் கண்டாருளரென்று கேள்விப்பட்டால் போதுமோ? அவ்வழகை நாங்கள் இங்கே காண வேண்டாவோ? இவையன்றோ நாங்கள் விரும்பி வந்த காரியங்கள். ஆராய்ச்சி யற்றவர்கள் இங்ஙனே யறியமாட்டாதே வேறேயொரு காரியம் விவக்ஷிதமாயிருப்பதாகவெண்ணித் தேடிக்கிடப்பர்கள். ஆராய்ச்சிமாலையில் ஆழவிழியத் தக்க அறிஞர்களின் அறிவுக்கன்றோ இவை நிலமாவது.

இன்னமும் ஆராய்ந்தால் இன்னுமோர் இன்சுவைப்பொருள் தோன்றும். நூற்றந்தாதியில் (88) 'கலிமிக்க செல்நெல் கழனிக்குறையல் கலைப் பெருமான் ஒலிமிக்க பாடலை யுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயமிராமானுசன்'' என்று சீரிய சிங்கமாகச் சொல்லப்பட்ட ''ஜைநேப கண்டீரவ: யதிஸார்வபௌம ஸிம்ஹம்'' உள்ளுறைப் பொருள் வகையில் இப்பாட்டுக்கு விஷயமாதலால் அந்த ஸிம்ஹத்தைப்பற்றின ப்ரார்த்தனைகளும் பாங்காகத் தெரியவரும். பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானவளான ஆண்டாளுடைய அந்தரங்கத்திலுறையும் அப்பொருள் தன்னை நம்முடைய ஆராய்ச்சியின் எல்லையான பொருளாகக் கேளீர்.

(முழங்கிப் புறப்பட்டுப் போதரும்) எம்பெருமானுருடைய திக்விஜய யாத்ரையில் எங்கும் ஸிம்ஹகர்ஜனையாகவே யிருந்தபடியைச் சொன்னவாறு. 'போதருமாபோலே' என்று இங்கு

http://acharya.org

உவமையாகக் கூறியிருந்தாலும் உபமாநார்த்தங்களுக்கு உபமேயந் தன்னிலேயே உபஸம்ஹாரமென்று கொள்ளக்கடவது. 'இந்துரிந்துரிவ ஸ்ரீமாந்' 'ககநம் ககநாகாரம் ஸாகரஸ் ஸாகரோபம:, ராமராவணயோர் யுத்தம் ராமராவணயோரிவ' என்றவையுங் காண்க. அநந்வயாலங்காரப்ரக்ரியை. (உன் கோயில் நின்று இங்ஙனே போந்தருளி) உன் கோயிலென்று ஸ்வாமி யின் திருவவதார ஸ்தலமான ஸ்ரீபெரும் பூதூரை விவக்ஷிக்கிறது. அங்குநின்றும் பெருமாள் கோயிலாகிய காஞ்சீபுரிக் கெழுந்தருளியும் திருமலைக் கெழுந்தருளி யும் திருவரங்கம் பெரியகோயிலுக் கெழுந்தருளியும் திருநாராயணபுர மெழுந்தருளியும் இங்ஙனே போந்தருளும்படியைச் சொல்லுகிறது. (கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து) சிங்காசனம், சீரியசிங்காசனம், கோப்புடைய சீரியசிங்காசனம் என்று மூன்று வகைப்பட்ட ஆஸனமாகக் கொள்ள வேணும். யதிராஜஸப்ததியில் (70) ''க$_3$ாத$_2$ா தாத$_2$ாக$_3$தாநாம் க$_3$லதி'' என்ற ஶ்லோகத்தின் முடிவில் ''ப$_4$ஜதி யதி பதௌ பத்$_3$ரவேதீ$_3$ம் த்ரிவேதீ$_3$ம்'' என்று எம்பெருமானார் த்ரிவேதியாகிற சிங்காசனத்திலே யெழுந்தருளியிருப்ப தாகச்சொல்லிற்று. இதன் பொருளை ஒரு வ்யாக்யான கர்த்தாவும் உள்ளபடி உரைத்திலர்.: த்ரயாணும் வேதாநாம் ஸமாஹார: த்ரிவேதீ; மூன்று வேதங்கள் என்றபடி. ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் ஆகிற மூன்று வேதங்களும் எம்பெருமானார்க்குச் சிங்காசனமாயிருந் தனவாக உரைப்பது சிறப்புடையதன்று. பேதஶ்ருதி, அபேதஶ்ருதி, கடகஶ்ருதி என்று மூன்றாக வகுக்கப்பட்ட ஶ்ருதிகளே த்ரிவேதியாக வேதாந்த தேஶிகனுக்கு விவக்ஷிதம். அத்வைதிகளுக்கு அத்வைத ஶ்ருதியொன்றே ஆஸனமாயிற்று; த்வைதிகளுக்கு த்வைத ஶ்ருதியொன்றே ஆஸனமாயிற்று; நம் ஸ்வாமிக்கோ வென்னில் அவ்வுபய ஶ்ருதிகளோடு கூட கடகஶ்ருதியும் ஆஸனமாயிற்று. அதாவது, ஸ்வாமி ஒரு ஶ்ருதியையும் தள்ளாமல் மூன்று ஶ்ருதிகளையும் முக்யார்த்தமாகவே கொண்டருளி விஶிஷ்டாத்வைத தர்ஶநநிர்வாஹம் செய்தருளினபடியால் இவர்க்கு அம்மூன்று வேதபாகங்களும் சீரியசிங்காசனமாயிருந்தனவென்கை. இப்படிப்பட்ட ஆசார்யஸார்வபௌமரி டத்தே வந்து சேர்ந்த ஶிஷ்யர்கள் யாம் வந்த காரியமாராந்தருளென்றது – ஆழ்ந்து ஆராய்ந்தறியவேண்டிய பொருள்களை ஆராயுமாற்றலை யருள்க என்றபடி. (23)

24. இரக்கமாலை

*அன்றிவ்வுலகப் பாசுரத்தின் ஈற்றடியில் *இன்றுயாம் வந்தோம் இரங்கு என்றிருப்பதை நோக்கியது இம்மாலைக் குறிப்பு. கண்ணபிரானை நோக்கி இரங்கவேணும் பிரானே! என்று பிரார்த்திக்கப்படுகிறது. 'நாஶௌ

புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந॥' என்றும், ''நிர்ஹேதுக கடாக்ஷேண மதீயேந மஹாமதே ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்ய:'' என்றும் அவன்தான் சொல்லி வைத்திருக்க, கடாக்ஷித்தருளவேணு மென்றும் இரங்கவேணுமென்றும் தத்த்வ வித்துக்கள் ப்ரார்த்திக்கத்தகுமோவென்று ஶங்கிக்கக்கூடியதுண்டு. கடாக்ஷிப்பதும் இரங்கியருள்வதும் அவன் திருவுள்ளத் தினுலாகுமத்தனையல்லது ஒருவருடைய ப்ரார்த்தனையினுலாகக்கூடியதன்றுதான், ஆனுலும் அது புருஷார்த்தமாக வேண்டியதற்காக அப்ரதிஷேத த்யோதக மாயும் சைதந்யகார்யமாயும் இத்தலேயில் ப்ரார்த்தனேயுண்டாகிறது. நம்முடைய ப்ரார்த்தனேக்காக அவன் இரங்கினு னென்ருே கடாக்ஷித்தானென்ருே தத்த்வ வித்துக்கள் ஒருகாலும் நினேயார்கள். நம்முடைய வாய்படைத்த ப்ரயோஜநம் பெறுவதற்காக நாம் எம்பெருமானே நோக்கி ஏதோ சொல்லவேண்டியது கடமையாகிறது. ''ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி'' என்றபடி நாப்படைத்த ப்ரயோஜநம் பெறுகைக்கு எம்பெருமானேத் துதிக்கவேண்டியது அவர்ஜநீமாகிறது. ''ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜந்து திஷ்டத்யகர்மக்ருத்'' என்று கீதாசார்யன் சொன்னபடி எதையாவது (த்ருணச்சேத கண்டூயநாதி கள் போன்ற காரியங்களேச்) செய்து கொண்டும், வாய்மூடியிருக்க முடியாமல் பேசிக்கொண்டும் போதைப் போக்க வேண்டியிருக்கிறது. அங்ஙனே நிகழும் வாய்ப்பேச்சுக்களிலே ''ந ஹி கல்யாண க்ருத் கஶ்சித் துர்கதிம் தாத கச்சதி'' என்றதை நோக்கி நன்ருன வார்த்தைகளேப் பேசவிரும்பி பகவத் பாகவத ஆசார்ய விஷயங்களிலே நாவைச் செலுத்தித் துதிகள் செய்கிறோம். அப்படிப்பட்ட துதிகளில் ஏதாவதொரு வினேமுற்று (க்ரியாபதம்) இடவேண்டிய தாகிறது. 'உன்னேநானடைந்தேன்' 'உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்' 'உனக்கு அடிமைத்தொழில் பூண்டேன்' 'உன்னே யெங்ஙனம் விடுகேன்' உனக்குப் பல்லாண்டு கூறுவன் 'ஒருநாள் காண வாராய்' 'என்னே நீகுறிக்கொள்ளே' 'ஒருவனடியேனுள்ளான்' என்றிப்படி பலபலவகையாகப் பேசுமடைவிலே ''அடியேனிடரைக் களேயாயே' 'நெடியாய்! அடியேனிடர் நீக்கே' 'அடியேற்கொருநாளிரங்காயே' 'தாமரைக் கண்களால் நோக்காய்' என்றிங்ஙனேயும் வார்த்தைப்பாடுகள் வெளிவருகின்றன. இவையெல்லாம் பர்யாயேண ஸமாநார்த்தகங்களே யென்று கொள்ளலாம். 'உன்னே நானடைந்தேன்' என்பதும் 'அடியேற்கு இரங்காய்' என்பதும் ஸமாநார்த்தமாக ஆய்விடுமோ வென்று சோதநம் பண்ண எழவேண்டாம். பெரும்பாலும் ஒரே வகையான பாவவ்ருத்தியோடே சொல்லும் வார்த்தைகளே இவையெல் லாம் என்றுணர்க.

http://acharya.org

'ஸர்வஜ்ஞோபி விஸ்வேஸ: ஸதா காருணிகோபி ஸந் ஸம்ஸார தந்த்ர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே' என்பது நூற்கொள்கையாகையாலும், முமுக்ஷுப்படியில் (163) "இவன் அர்த்திக்க வேண்டாமோ? "ஸர்வஜ்ஞன் இவன் நினைவறியானோ வென்னில், இவன் பாசுரம் கேட்டவாறே திருவுள்ள முகக்கும்" என்று பிள்ளையுலகாசிரியரு மருளிச் செய்கையாலும் "கடாக்ஷித்தருள வேணும்" இத்யாதி ப்ரார்த்தனைகளுக்கு விஸேஷித்து ஒரு பொருளும் கிடையாது. இரங்கவேணுமென்று நாம் வேண்டினால்தான் அவன் இரங்கியருள் வன் என்று நினைக்குமவர்களல்லர் இவர்கள். "நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:" என்று தேஸிகன் நிஷ்கர்ஷித்தபடியும் அதற்கும் நிதாநமாக "வரத! தவ கலு ப்ரஸாதாத்ருதே ஸரணமிதிவசோபிமேநோத்ரியாத்" என்று ஆழ்வான் அருளிச்செய்தபடியும், அது தனக்கும் நிதாநமாக "அதுவுமவனதின்னருளே" என்று ஆழ்வார் தாமருளிச் செய்தபடியும் அத்தனையில் நினைவாலே வெளிவரு மிந்த வார்த்தைகளில் எவ்விதமான சோத்யத்திற்கும் அவகாஸமில்லையென்க.

இரங்கு யென்பதற்கு தயை பண்ணவேணுமென்று பொருள். தயை பண்ணவேணுமென்பது ஸமயானுகுண மாகப் பலபல பொருள்களைத் தாங்கி நிற்கும். உதாரனிடத்திலே யாசகன் சென்று தயை பண்ணவேணுமென்றால் தேஹி என்று பொருள்படும். ஆசாரியன் பக்கலிலே ஸிஷ்யன் வந்து தயை பண்ணவேணுமென்றால் அடியேனுக்கு உபதேஸிக்க வேணுமென்றதாகும். ப்ரபுவினிடத்திலே குற்றவாளன் வந்து தயை பண்ண வேணுமென்றால் க்ஷமித்தருளவேணுமென்றதாகும். இங்ஙனே பல்வேறு பொருள்களை ஸந்தர்ப்பானுகுணமாகத் தரக்கடவதான இச்சொல் 'இன்று யாம்வந்தோமிரங்கு' என்ற இவ்விடத்தில் எப்பொருளைத் தருகின்றதென்னில்; கேண்மின்.

(1) சித்ரகூட பரி ஸரத்தில் காகன் வந்து நலிந்த போது பெருமாளைத் துயிலெழுப்பின பிராட்டி 'ஸமயா போதித: ஸ்ரீமாந் ஸுக ஸுப்த: பரந்தப:" என்று, கெட்டேன் ! கெட்டேன் !! துயில் கொள்ளுமழகு கண்ணாரக் கண்டு கொண்டேயிருக்க வேண்டியிருக்க, ஐயோ! பாவியேன் துயிலுணர்த்தி விட்டேன்! என் செய்தேன்! என் செய்தேன் !! என்று பலவாண்டுகள் கடந்த பின்புங்கூட அக்ருத்யகரணம் பண்ணினாற்போலத் துடிக்கவேண்டி யிருந்தது. இஃதறிந்துவைத்தும் நாங்கள் கோயில் காப்பானையும், வாசற்காப்பானை யும் நிர்ப்பந்தமாக வேண்டி உள்ளே புகுந்து பரம போகமான பள்ளிகோளை பங்கப்படுத்தினோமே! இதனில் மிக்கோர் குற்றமுண்டோ? இதனை க்ஷமித்தருள வேணும்; (2) புஷ்பஹாஸ ஸுகுமாரதர மான திருவடிகளன்றோ இவை; பங்கஜராஜஸ்ஸும் பாதாருந்துதமாம்படி

http://acharya.org

சேடீஜநலோசந சர்ச்சாஸஹ ஸௌகுமார்ய ஶாலிநிகளான பிராட்டிமாரும் பிடிக்கக் கூசும் படியான இத்திருவடிகளைக் கொண்டு நடக்கப் பண்ணினோமே! 'இங்ஙனே போந்தருளி' என்று நாங்கள் சொல்லத் தகுமோ? இப்பெரிய குற்றத்தைப் பொறுத்தரு ளாய். (3)அகில ஹேய ப்ரத்யநீகனாய் கல்யாணைகதாநனாய் ஸகல ரக்ஷகனாய் ஸர்வேஶ்வரனான உன்னைக் கொண்டு எங்களுக்குண்டான அமங்களங்களைப் போக்கிக் கொள்ளவும் இல்லாத மங்களங்களை உண்டாக்கிக் கொள்ளவும் ப்ராப்தமாயிருக்க, எங்களுடைய ரக்ஷ்யத்வ ஸ்வரூபத்திற்கு விருத்தமாக உன்னை ரக்ஷிக்கத்தேடி மங்களாஶாஸநம் பண்ணினோமே; ப்ரேம பரவஶர் செய்யுமத்தை நாங்கள் செய்தது அநுகாரமத்தனையிறே, யாருடைய நிலைமையை யார் அநுகரிப்பது பிரானே! க்ஷமித்தருளாய் இதனை.

''ரஸஸிராவ்யதிவித்யவ்ருத்தை:'' என்று பட்டரும், ''ரஸதமநிவேதாய ஸூதியாம்'' என்று தேஶிகனும் பணித்த படியே ரஸநாடியிலே புக்குப்பெருகும் பொருளொன்று கேளீர்; ''இன்று யாம்வந்தோமிரங்கு'' என்றவிடத்தில் இலக்கணப்படி ''இன்று யாம்'' என்னக் கூடாது; இன்றியாம் என்றே சொல்ல வேணும். இன்று + யாம், சந்தியாமிடத்து ''யவ்வரினிய்யாம்'' என்ற நன்னூற் சூத்திரத்தின்படி (இன்றியாம்) என்றே யாகும். மற்று + யான், மற்றியான்; மற்று + யாதும், மற்றியாதும் என்பனபோலே. ஏவஞ்ச, மூலத்திலுள்ள சொல் வடிவம் (இன்றியாம்) என்பதே யாகும். இங்குப் பிரிக்கும்போது இன்று என்றே பிரிக்க வேணுமென்கிற நிர்பந்த மில்லை; இன்றி என்றும் தாராளமாகப் பிரிக்கலாம். இன்றி – ஒருவகையான கைம்முதலுமின்றி என்ற படி. 'நோற்ற நோன்பிலேன் நுண்ணறி விலேன்' 'இடகிலேன் ஒன்றட்டகில்லேன் ஐம்புலன் வெல்ல கில்லேன், கடவனாகிக் காலந்தோறும் பூப்பறித்தேத்தகில்லேன்' ''ந தர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீ ந பக்திமாந் த்வச்சரணாரவிந்தே'' இத்யாதிப் படியே அகிஞ்சநர்களாய் வந்தோமென்று கையை விரித்துக்காட்டி, உன்னுடைய இரக்கத்திற்குத் தண்ணீர் துரும்பாக எங்கள் கையிலே ஏதுமில்லா மையாலே தாராளமாக இரங்கியருளலா மென்கிறார்களாயிற்று. (24)

25. வருத்தம்தீர்மாலை

*ஒருத்திமகன் பாசுரத்தின் ஈற்றடி யில் 'வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைக் குறிப்பு. வருத்தம் தீர்ந்தது எதனாலே என்பதை நாம் ஊஹித்தறிய வேண்டாத படி அது பாசுரத்திலேயே பொறிக்கப் பட்டுளது. திருத்தக்க செல்வமும், சேவகமும் பாட, அதனால் வருத்தம் தீர்ந்ததாகச் சொல்லப்பட்டிரா நின்றதிறே. அப்பாடலின் பொருள்கேளீர். (திருத்தக்க

http://acharya.org

செல்வம்) 'துல்ய ஶீலவயோ வ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணும், ராகவோர்ஹதி வைதேஹீம் தஞ்சேய மஸிதேக்ஷணு' என்று திருவடி சொன்னபடியே பிராட்டிக்குத் தக்க பெருமாளும், பெருமாளுக்குத் தக்க பிராட்டியுமாக அமைந்த தகுதியான செல்வத்தைப் பாடிக்கொண்டே வந்தோமென்பது அந்யாபதேசத்தில். ஸ்வாபதேசத்திலோ வென்னில்; பெரியபிராட்டியாரோ டொத்த செல்வமுடையவர் ஸ்வாமி எம்பெருமானுர். நம்போல்வார்க்குப் புருஷகார க்ருத்யம் பண்ணி எம்பெருமானடி சேர்ப்பிக்கையே பிராட்டிக்குச் செல்வம். இதுவேதான் எம்பெருமானுர்க்கும் செல்வமாகும். அவருடைய திருவடி ஸம்பந்த மில்லாதார்க்கு மோக்ஷமில்லே யென்பது ஸம்ப்ரதாயம். (**சேவகமும் யாம்பாடி**) இரட்டுற மொழிதலால் சேவகமென்கிற சொல் பரத்வ ஸௌலப்யங்களேச் சொல்லும். தமிழில் சேவகமென்று வீரத்திற்குப் பெயராதலால் பரத்வம் தெரிவிக்கப்பட்டதாகும்; வடமொழி விகார மென்று கொண்டால் ஸேவக வ்ருத்தி செய்வதென்று பொருள்பட்டு ஸௌலப்யம் தெரிவிக்கப்பட்டதாகும்.

திருத்தக்க செல்வம் என்றது திருத்தத்தக்க செல்வமென்றபடியுமாகும். *ஒண் சங்கதை வாளாழியான் போலே. 'பயனன்ருகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்ருகத் திருத்திப் பணிகொள் வான்' என்றும், 'இராமானுசா! நீயிந்த மண்ணகத்தே திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கியபின்' என்றும் சொல்லுகிறபடியே *உலகில் திருந்தாதார் தம்மைத் திருத்துகையாகிற செல்வ மன்ருே ஆசாரியர்களுடையது. 'பணிமானம் பிழையாமே யடியேனேப் பணி கொண்ட' என்றவிடத்து (ஈட்டில்) ஐதிஹ்யம் ஈண்டு அநுஸந்திப்பது. 'ஸ்காலித்யே ஶாஸிதாரம்' என்பதன்ருே ஆசார்ய லக்ஷணங்களில் தலேயானது. (சேவகமும்) கண்ணனிடத்திலே பரத்வ ஸௌலப்யங்கள் மாறி மாறி விளங்கினுப் போலே ஆசார்யர்களிடத்தும் இங்ஙனே காணுநின்ருேம். அவர்களது ஞான விளக்கத்தை நோக்கும்போது பரத்வம் தோன்றும். அவர்கள் ஸம்ஸாரிகளோடும் புரையறக் கலந்து பழகும்படியை நோக்கும்போது ஸௌலப்யம் தோன்றும். ஆக இவற்றையெல்லாம் சிந்தை செய்வார்க்கு வருத்தங்கள் தீர்ந்து மகிழ்ச்சியேயாகுமென்னத் தட்டுண்டோ?

திருத்தக்கசெல்வம் என்பதற்கு உட்புகுந்து ஆராய்ந்து அறியக்கூடிய சீரிய பொருளொன்று கேளீர். நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் வ்யவஹாரங்களெல் லாம் திரு என்னுஞ் சொல்லின் சேர்த்தியி ஞலே மிகச் சிறப்புப் பெற்றிருக்கும். பிறர் அபிஷேகமென்பர்; நாம் திருமஞ்ஜநமென்போம். பிறர் பாதமென் பர்; நாம் திருவடி யென்போம். பிறர் துளஸி யென்பர், நாம் திருத்துழாய்

என்போம். பிறர் ஆராதன மென்பர்; நாம் திருவாராதனம் என்போம். பிறர் ஶயனித்தல், நித்ரை செய்தல் என்பர், நாம் திருக்கண்வளர்தல் என்போம். பிறர் ஆடிப்பூரம் என்பர், நாம் திருவாடிப்பூரம் என்போம். இங்ஙனே அளவுகடந்த வ்யவஹார வாசிகள் காணலாம். நம்மாழ்வார் பிரதமப் பிரபந்தத்தில் ''திருமாலுருவொக்கும் மேரு, அம்மேருவில் செஞ்சுடரோன் திருமால் திருக்கைத் திருச்சக்கர மொக்கும், அன்ன கண்டும் திருமாலுருவொடு அவன் சின்னமே பிதற்று நிற்பதோர் திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கே வரும் தீவினையே'' என்றொரு பாசுரமருளிச் செய்துள்ளார். இதில் திரு என்னுஞ் சொல் நிரம்பியிருக்கிற தென்கைக்காக இப்பாட்டை நாம் எடுத்துக் காட்டினோ மல்லோம்; இதில் ஈற்றடியில் 'திருமால் தலைக் கொண்ட' என்றவிடத்தில் மால் என்னுஞ் சொல்லுக்கு வ்யாமோஹம் என்று பொருள்; பைத்தியம் என்றபடி. அதற்கும் திருவைச் சேர்த்தார் ஆழ்வார் என்கிற அதிஶயத்தைக் காட்டவே இப்பாட்டையெடுத்தோம். ஆக, திருத்தக்க செல்வமாவது திருவென்னும் சொற்சேர்த்தியினுல் விளைந்த ஸம்ப்ரதாயச் செல்வம். இப்படிப்பட்ட விலக்ஷண ஸம்பிரதாயத்திலே நாம் ஜநிக்கப்பெற்றோமேயென்று சிந்தனை செய்யச் செய்ய வருத்தமெல்லாம் தீர்ந்து மகிழ்ச்சி வுண்டாகுமன்றோ.

அன்றியும், 'திருவுக்கும் திருவாகிய செல்வா!' என்று ஆழ்வாரும், 'க:ஶ்ரீ: ஶ்ரிய: என்று ஆளவந்தாரும் பேசும்படி யான செல்வமே திருத்தக்க செல்வம். நம்மாழ்வார் 'சுவையன் திருவின் மணாளன்' என்றருளிச்செய்தார். அங்கு வ்யாக்யாத்ரு ஸார்வபௌமர்கள் ''(சுவையன்) பரமரஸிகன். இந்த ரஸிகத்வத்துக்கு ஊற்றுவாய் சொல்லுகிறது திருவின்மணாளன் ... பெரியபிராட்டியார். *அகலகில்லே னென்னப் பிறந்தவன்'' என்றருளிச் செய்தனர். *திருத்தக்க செல்வமென்பதைப் பன்னியுரைக்குங்காற் பாரதமாம். இதற்கு தனியே யொரு புத்தகமிடவேணுமென்று கொண்டு நிற்கிறோமிப்போது. இதற்கு மட்டுமென்ன? ஒவ்வொரு மாலைக்கும் ஒவ்வொரு தனிப்புத்தகமிடவேண்டி யதே. இட்டால் அது காநநசந்த்ரிகையா காமே உபயோகங் கொள்ள உபந்யாஸ கர்கள் எங்கும் மலிந்திருக்கையாலே ஆனந்தமாக இடுவோம் விரைவில். (25)

26. ஆலினிலையான் மாலை

*மாலே மணிவண்ணா பாசுரத்தின் ஈற்றடியில் 'ஆலினிலையாயருள்' என்றிருப்பதை நோக்கியது இம்மாலைக் குறிப்பு. யசோதைப்பிராட்டி கண்ணனை ஆலிலைத்துயின்ற குழவியாகவே அடிக்கடி சொல்லுவள். அம்புலியை யழைக்குமிடத்து ''பாலகனென்று பரிபவஞ்செய்யேல், பண்டொருநாள்

ஆலினிலைவளர்ந்த சிறுக்கனவனிவன்'' என்றாள்; செங்கீரையாட வேண்டும் போது ''உய்ய வுலகுபடைத்துண்ட மணிவயிறு...ஆலினிலையதன்மேல் பையவுயோகு துயில்கொண்ட பரம்பரனே! ' என்றாள். *அக்காக்காய் நம்பிக்கு கோல்கொண்டுவா வென்னும் போது ''ஆலத்திலையானரவினணை மேலான்'' என்றாள். ''பூச்சூடவாரா யென்றழைக்கும்போது ''உண்டிட்டு லகினை யேழும் ஓராலிலையில் துயில் கொண்டாய்'' என்றாள். இங்ஙனே அபரிமிதம். எம்பெருமானுடைய அற்புதமான செயல்களுள் *ஞாலமேழு முண்டு ஆலமாமரத்தினிலைமேல் ஒரு பாலகனாய்த் துயின்ற செயலுக்கு ஈடானது எதுவுமில்லை. ஒரு பெரிய பாசுரம் இட்டருளி இக்கதையைப் பரமபோக்யமாகப் பேசினவர் நம்மாழ்வாரொருவரே. திருவாசிரியத் தின் நிகமனப் பாசுரம் ''நளிர்மதிச்சடையனும் நான்முகக் கடவுளும், தளிரொளியிமையவர் தலைவனுமுதலா, யாவகையுலகமும் யாவருமகப்பட, நிலநீர் தீகால் சுடரிரு விசும்பும், மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க, ஒருபொருள் புறப்பாடின்றி முழுவது மகப்படக்கரந்து, ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமா மாயனையல்லது, ஒரு மாதெய்வம் மற்றுடையமோ யாமே'' என்று வெகு அற்புதமாக அமைந்துள்ளது. இதைச் சிறிது விவரித்து அனுபவிப்போமிங்கு. *நளிர்மதிச் சடையனென்னு மிப்பாட்டின் கீழ்ப்பாட் டில் ஆழ்வார்க்கு ஒரு பெரிய துயரமுண்டாயிற்று. (அதாவது) ஸகலசேதநர்களும் ப்ராப்தஶேஷியான எம்பெருமானை அடிபணிந்து அவனுக்கே வழுவிலாவடிமைகள் செய்ய ப்ராப்த மாயிருக்க, அது செய்யாதே தேவதாந்தரங்களை பஜிப்பதும் ஜீவஹிம்ஸாரூபமான கொடிய காரியங்களாலே அந்த க்ஷுத்ர தெய்வங்களை ஆராதிப்பதுமாயிருந்து ஸம்ஸாரத்தையே பூண்கட்டிக் கொள்ளுகிறார்களே! அந்தோ! இஃது என்ன அநீதி! என்று துயருற்றார். ஒரு ஸம்ஸாரியும் ஆழ்வாருடைய துயரத்தைப் பரிஹரிக்க முன்வராமற்போகவே, இப்பாழும் ஸம்ஸாரிகள் எக்கேடாவது கெடட்டும்; நாமும் இவர்களைப் போலே அனர்த்தப்பட்டுப் போகாமே எம்பெருமானுக்கே அடிமைப்பட்டிருக் கப்பெற்றோமே என்று உகந்து அவ்வுகப்பை வெளியிடுகிறார் இப்பாட்டில்.

ஸம்ஸாரிகள் பஜிக்கின்ற பிறதெய்வங்கள் யாவும் நம்மைப் போலவே பலவகை ஆபத்துக்களுக்கு உள்ளாகி எம்பெருமானுடைய திருவருளால் தப்பிப்பிழைப்பவர்களே யொழிய, தங்களுடைய ஆபத்துக்களைத் தாங்களே பரிஹரித்துக்கொள்ளவோ, பிறருடைய ஆபத்துக்களைத் தாங்கள்

பரிஹரிக்கவோ ஆற்றலுடையவர்களல்லர் என்பதை விளக்கவேண்டி, இந்தத் தெய்வங்களெல்லாம் பிரளயகாலத்தில் எம்பெருமானது திருவயிற்றிலே ஒடுங்கிக்கிடந்து ரக்ஷைபெற்றவை காண்மினென்றும், சிவனும் பிரமனும் தேவேந்திரனும் முதலான எல்லாப் பிராணிகளும் எல்லாவுலகுமுட்பட சிறியதான திருவயிற்றின் ஒரு பக்கத்திலே கலசும்படியாக உள்ளே யிட்டு மறைத்து ஒரு சிற்ருலந்தளிரிலே பள்ளி கொண்ட ஶ்ரீமந்நாராயண மூர்த்தியைத் தவிர்த்து வேருெரு க்ஷுத்ரதேவதையை நாம் ஶேஷியாகக் கொள்ளுவோமோ? கொள்ளமாட்டாடோம். — என்று இத்தகைய அத்யவஸாயத்திஞல் தாம் வாழ்ந்தபடியைச் சொல்லித் தலைக்கட்டிஞராயிற்று. ஆக, ஆலினிலையானுடைய இதிஹாஸம் இதர தெய்வங்களின் அவரத்வத்தையும், ஶ்ரீமந்நாராயணனுடைய பரத்வத்தையும் கையிலங்கு நெல்லிக்கனியாகத் தெரிவிக்க அவதரித்ததாயிற்று.

இவ்வளவேயன்று; எம்பெருமானுடையவொரு அத்புத ஶக்தியோகத்தையும் விளக்கவந்தது இவ்விதிஹாஸம். பொய்கையாழ்வார் தம்முடைய திருவந்தாதியில் (69) "பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு, ஆலிலையின்மேலன்று நீ வளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று வேலை நீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ? சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு" என்ருெரு பாசுரத்திஞல் ஆலின்மேலாலமர்ந்த திருமாலை நோக்கி ஒருகேள்வி கேட்டிருக்கிருர். அது வெகு சமத்காரமான கேள்வியாகவுள்ளது. மஹாப்ரளயத்திலே இந்த விபூதி அழியாதபடி திருவயிற்றிலே இதனை வைத்துக் கொண்டு அப்ராக்ருதமான உனது திருமேனியைச் சிறுக்கி ஒரு சிறுகுழவி வடிவத்தைக் கொண்டவனுகி, ஶயனிப்பதற்குச் சிறிதும் பற்ருத ஒரு ஆலந்தளிரில் நீ பிரளயகாலத்தில் ஶயனித்தருளிஞயென்று பரம ஆப்தர்களான முனிவர் மொழிகின்றனர். 'எத்திறம்!' என்று நினைந்துநைந்து ஈடுபடும்படியான இச் செயலானது முன்பு க்ருஷ்ணுவதாரத்தில் ஏழுபிராயத்தில் *அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும் தயிர்வாவியும் நெய்யளறுமடங்க வமுதுசெய்து ஏழுநாள் ஒருசேரக் கோவர்த்தன மலையை யெடுத்துக் குடையாகப்பிடித்து நின்ற அரும்பெருஞ் செயலைக் காட்டிலும் மிக மிக ஆஶ்சர்யமாயிருக்கின்றது; நீ கண்வளர்ந்த அந்த ஆல் பிரளயவெள்ளத்தில் தோன்றியதோ? விண்ணில் தோன்றியதோ? பிரளயத்தில் கரைந்து போன மண்ணிலிருந்துதான் தோன்றியதோ? இதன் வரலாற்றை விளங்கச் சொல்ல வேணுமென்பது கேள்வி. ஸர்வஜ்ஞனை ஸர்வேஶ்வரனும் விடையிறுக்ககில்லானென்று ஆழ்வாருடைய திருவுள்ள மென்பது சொற்போக்கில் தெரியாநின்றது.

http://acharya.org

இங்ஙனேயொரு சரிதையை நடத்திக் காட்டின திருமாலின் திருவுள்ளந் தானென்? என்னில்; தன்னுடைய அகடித கடநா ஸாமர்த்யத்தினால் நேரும் அதிமாநுஷ சேஷ்டிதங்களிலும், மற்றும் வேதாந்த ப்ரபாதிதங்களாய் பொருத்த மற்றவைபோல் தோன்றுமவையான விஷயங்களிலும் குதர்க்க மூலமான சோத்யங்களைச் செய்யத் தகாதென்று ஶிக்ஷிப்பதேயாகும். இது ஶாரீரக மீமாம்ஸையில் தேர்ந்தபொருள். அதில் இரண்டாமத்யாயத்தின் முதற்பாதத்தில் 'க்ருத்ஸ்நப்ரஸக்திர் நிரவயவத்வ ஶப்தகோபோ வா' (26) என்பதொரு ஸூத்ரம். இது பூர்வபக்ஷ ஸூத்ரம். 'ஶ்ருதேஸ் துஶப்₃த₃மூலத்வாத்' (2–1–27) என்பது ஸித்தாந்த ஸூத்ரம். ப்ரஹ்மம் ஜகத்காரணம் என்னும் வாதத்தில் ப்ரஹ்மமே ஜகத்தாக பரிணமிப்பதாய்த் தேறுகிறது. ப்ரஹ்மமோ நிரவயவமா னது; அது ஜகத்தாகப் பரிணமிக்கும் போது ப்ரஹ்மம் முழுவதுமே காரியப்பொருளாகப் பரிணமிக்க வேண்டியதாகிறது. ஏகதேசேந பரிணமிக்கிறதென்னும் பக்ஷத்தில் ப்ரஹ்மம் நிரவயவமென்று சொல்லுகிற ஶ்ருதி விரோதிக்கும். ஆகையாலே ப்ரஹ்மம் ஜகத்காரணமாக வொண்ணாது– என்கிற பூர்வபக்ஷமே முந்தின ஸூத்ரத்தின் பொருள். (இதைச் சிறிது விவரிப்போம்) கீழே உபஸம்ஹாராதிகரணத்தில் 'க்ஷீரவத்₃தி₄' என்று க்ஷீரத்ருஷ்டாந்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. க்ஷீரத்ருஷ்டாந்தம் பொருந்தாது. க்ஷீரம் ஸாவயவமாகையாலே அது போலே ப்ரஹ்மமும் ஸாவயவமென்ன வேணும். அப்படிகொண்டால் நிரவயவத்வ ஶ்ருதி கோபிக்கும்; நிரவயவமாகில் ப்ரஹ்மம் க்ருத்ஸ்ந பாகத்தாலும் பரிணமமடைந்ததாக வேணும். ஆகட்டுமேயென்னில் க்ருத்ஸ்நமும் ஒருகாரியப்பொருளாக பரிணமிக்க ப்ரஸக்தியில்லை. ஆகையாலே ப்ரஹ்மகாரணத்வவாதம் ஒவ்வாது என்பதாகப் பூர்வபக்ஷம். இதன் மேல் ஸித்தாந்தமுணர்த்தும் ஸூத்ரம்– 'ஶ்ருதேஸ் து ஶப்தமூலத்வாத்' என்பது. துஶப்தம் பூர்வபக்ஷத்தை வ்யாவர்த்திப்பிக்க வந்தது. ப்ரஹ்மம் நிரவயவமென்பதும், அது கார்யப்பொருளாகப் பரிணமிக்கிற தென்பதும் ஆகிய இரண்டும் ஶ்ருதிஸித்தமான அர்த்தங்கள். ப்ரஹ்மமோ ஶப்த ப்ரமாணமொன்றினாலேயே அறியப்படுமது; ஆகையாலே கீழே தோன்றின பூர்வபக்ஷம் யுக்தமன்று என்பதாக ஸூத்ரார்த்தம். இதையும் சிறிது விவரிப்போம். ஸாவயவமான வஸ்துதான் ஏகதேசத்தாலே பரிணமிக்க முடியுமென்றும், நிரவயவமான வஸ்துவானது அப்படி ஏகதேசத்தாலே பரிணமிக்கமாட்டாமல் க்ருத்ஸ்நாம்ஶத்தாலும் பரிணமித்தாகவேணுமென்றும் ஒரு நியதி சொல்லுவதானது லௌகிக பதார்த்த த்ருஷ்டியினால்தானே.

http://acharya.org

இப்படியொரு வ்யாப்தி கல்பிக்க வேணுமானல் பரப்ரஹ்மம் தவிர மற்ற வஸ்துக்களில் மாத்திரமே கல்பிக்கலாம். ப்ரஹ்மத்தினிடத்திலும் இந்த வ்யாப்தி கொள்ள அவசியமில்லை; ஏனெனில், ப்ரஹ்மத்தை நாம் ஶாஸ்த்ரங்கொண்டே அறிகிறோம். அந்த ஶாஸ்த்ரமானது ப்ரஹ்மத்திற்கு நிரவயவத்வத்தையும் பஹுபவனத்தையும் (அதாவது நாநா வஸ்துக்களாகப் பரிணமிப்பதையும்) ஓதியிருக்கின்றது. அது ப்ரஹ்மத்தினுடைய அநிர்வசநீயமான ஶக்தி விஶேஷத்தைப் பொறுத்தது. அத்புத ஶக்தியுக்தமான ப்ரஹ்மத்தினிடத்திலே நாம் லௌகிகவஸ்து த்ருஷ்ட்யா சோத்யம் செய்வது தகாது. ஒன்று பாருங்கள். கண்ணுடைவன்தான் காணமுடியும். காதுடையவன் தான் கேட்கமுடியும்; கண்ணிலாதான் காணகில்லான்; செவியிலாதான் கேட்ககில்லான் – என்று ஒரு வ்யாப்தி சொல்ல நினைத்தால் பரப்ரஹ்மந்தவிர மற்ற பேர்களிடத்தில்தானே இப்படிச் சொல்லமுடியும். ''பஶ்யத்யசக்ஷு: ஶ்ருணோத்யகர்ண: அபாணிபாதோ ஜவநோ க்ரஹீதா'' என்று ஓதப்படுகிற பரமபுருஷனிடத்திலே இந்த வ்யாப்தி பயன்பெருதன்றோ. ஆகவே உலகில் காணும் நியாயத்தைக் கொண்டு ப்ரஹ்மத்தினிடத்தில் சோத்யம் செய்வது கூடாது.

வேதாந்திகள் இங்கு விஶேஷித்துக் குறிக்கொள்ளவேண்டிய விஷயமுண்டு; பரப்ரஹ்மத்திற்கு ஜகதாத்மநா பரிணமம் போலவே ப்ரதிவஸ்து பூர்ணத்வமும் ஶ்ருதிஸித்தமாயிருக்கின்றது. நிரவயவமான ப்ரஹ்மம் வஸ்து தோறும் எங்ஙனே பரிஸமாப்ய வர்த்திக்க முடியும்? என்று சிலர் சோத்யம் செய்வதுண்டு. அந்த சோத்யமும் 'ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத்' என்கிற இந்த ஸூத்ரத்திஞல் ஶிக்ஷிக்கப்பட்ட ந்யாயத்திஞலேயே மடிந்தொழிகின்றது. இவ்விஷயத்தை ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் வெகு சதுரமாக அருளிச்செய்து முடித்திருக்கின்ருர். அப்படியிருந்தும் இதில் இன்னமும் சிலர் தெளிவுபெருமல் கலங்கியிருக்கிருர்கள். பகவான் ஒரு வஸ்துவிலே பரிஸமாப்ய வர்த்தித்துவிட்டால் அவ்வளவோடு பகவான் உபக்ஷீணஞய் விடுகிறபடியால் மற்ரெரு பொருளில் வியாபிக்க எப்படி முடியுமென்று இந்த சோத்யத்தையே திருப்பித்திருப்பிச் செய்துகொண்டு காலங்கழிக்கிருர்கள். அந்தோ! அன்னவர்கள் 'ஶ்ருதேஸ்துஶப்தமூலத்வாத்' என்கிற ஸூத்ரம் என்ன ஶிக்ஷிக்கிறதென்பதையும் இந்த ஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்வாமி என்ன அருளிச்செய்கிருர் என்பதையும் சிறிதும் நோக்கமாட்டிற்றிலர். ''ஶப்தைகப்ரமாணகத்வேந ஸகலேதர வஸ்து விஸஜாதீயத்வாத் அஸ்யார்த்தஸ்ய விசித்ரஶக்தி யோகோ ந விருத்யதே''

http://acharya.org

என்பது ஸ்ரீபாஷ்யஸூக்தி. இதைப் பற்றின விரிவுகளை நம்முடைய ப்ரஹ்ம வ்யாப்தி பரிஷ்க்ரியா, அத்புதசக்தி முதலான க்ரந்தங்களிலே காண்க.

கூரத்தாழ்வான் "கிம் ஸாதந: க்வ நிவஸந் கிமுபா ததாந: இத்யாதியாலே பிறருடைய குசோத்யங்களை அநுவதித்து "இத்யாத்யநிஷ்டித குதர்க்கமதர்க்கயந்த: த்வத்வைபவம் ஶ்ருதிவிதோ விதுரப்ரதர்க்யம்" என்று (வ்யாஸமுநி காட்டின ஒரே பத்ததியாலே) தாத்ருஶசோத்யங்களை நிரஸித்துத் தலைக்கட்டினார்.

வேதாந்த தேசிகனும் அச்யுத ஶதகத்தில் "புரி ஸபஹாநஸரீரோ" என்னும் ஶ்லோகத்தை "அப்பு அஶக்தி – அத்புதஶக்தி:" என்றே தலைக்கட்டினார். ஆலினிலையான் கதையைச் சொல்லப் புகுந்து "பாலாக்ருதேர் வடபலாஶ மிதஸ்ய யஸ்ய" என்கிற ஶ்லோகத்தை, ஒருவாறு பொய்கையாழ்வாரை யடியொற்றி, வினவாகவே தலைக்கட்டினார். அந்த வினவுக்கு விடையிறுக்க அத்புதஶக்தியோக ப்ரபஞ்ஜநமொழிய வேறு தஞ்சமில்லையிறே.

*ஆலினிலையா யருள்' என்பதற்கு ஆசார்யபரமான யோஜனையில், ஆலின் நிலையாய் என்று பிரித்து, ஆல மரத்தின் நிலைமை போன்ற நிலைமையையுடையவரே! என்று பொருள் கொள்வது. "எம்பெருமான் திருவடியிலே ஒதுங்குதல் பனை நிழலிலொ துங்கினாற் போலே; எம்பெருமானார் திருவடி நிழலிலே யொதுங்குகை ஆல நிழலிலொதுங்கினாற் போலே' என்று அம்மங்கியம்மாள் வார்த்தை. பனை நிழலின் தன்மையும், ஆலநிழலின் தன்மையும் உலகமறிந்ததே யாதலால் நாம் விவரிக்கவேண்டா.(26)

27. கூடியிருந்து குளிர் மாலை

*கூடாரை வெல்லுஞ்சீர்ப் பாசுரத்தின் ஈற்றடியில் *கூடியிருந்து குளிர்ந்தென்றதை நோக்கியது இம்மாலைக்குறிப்பு. இன்னாரொடு கூடியிருந்தென்று சொல்லிற்றில்லையாகிலும் கூடத்தகாதவர்களை விலக்கி, கூடியேயிருக்கவேண்டியவர்களோடு கூடுகைதான் இங்கு விவக்ஷிதம். குலசேகராழ்வார் ஒரு திருமொழியிலே "மெய்யில் வாழ்க்கையை மெய்யயெனக் கொள்ளுமிவ்வையந்தன்னொடுங் கூடுவதில்லையான்" "நூலினேரிடையார் திறத்தே நிற்கும் ஞாலந்தன்னொடுங் கூடுவதில்லையான்" "மாரனார் வரிவெஞ்சிலைக்கு ஆட்செய்யும் பாரினாரொடுங் கூடுவதில்லையான்" "உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத் தொடுங் கூடுவதில்லையான்" "தீதில் நன்னெறி நிற்க அல்லாது செய் நீதியாரொடுங் கூடுவதில்லையான்" என்று பன்முறையுங் கூறினார் கூடத்தகாதவர்களை. 'வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர் வ்யவஸ்திதி:। ந ஶௌரி சிந்தாவிமுக ஜந ஸம்வாஸ வைஶஸம்॥

என்னும் ச்லோகத்தையே அப்பாசுரங்கள் விவரித்தனவாயின. அன்னவர்களோடு கூடுவதை விலக்கிக் கொள்ளுகை தானே சிறந்த குளிர்ச்சியாகும். அதற்கு மேல் கூடத்தக்கவர்களோடு கூடவும் பெற்றால் குளிர்ச்சியைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? கூடத்தக்கவர்கள் யாவரென்னில்; குறிக்கொண்டு கேண்மின்; *மறந்திகழு மனமொழிந்து வஞ்சமாற்றி வன்புலன்களடக்கி இடர்ப்பாரத் துன்பந்துறந்து இருமுப் பொழுதேத்தி எல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டர்; *தூராதமனக்காதல் தொண்டர் தங்கள் குழாங்குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடியாராத மனக்களிப்போடழுத கண்ணீர் மழை சோர நினைந்துருகி யேத்துமவர்கள்; *அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளி கொள்ளுமணியரங்கன் திருமுற்றத்தடியார்கள்; *தென்னரங்கனை வாழ்த்தி மால்கொள்சிந்தையராய் ஆட்டமேவியலந்தழைத்து அயர்வெய்தும் மெய்யடியார்கள்; *பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேனென்றிருக்குமவர்கள்; *பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சி யழுது கொண்டிருக்குமவர்கள்; 'த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குஶ விபூதிகர்களாய் ராமாநுஜ பதாம்போஜ ஸமாஶ்ரயணஶாலிகளாயிருக்குமவர்கள்; அத ச, ''அபகதமதமாநைரந்திமோபாய நிஷ்டைரதிகதபரமார்த்தைரர்த்தகாமாந பேக்ஷை: நிகிலஜந ஸுஹ்ருத்பிர் நிர்ஜித க்ரோதலோபை: வரவரமுநி ப்ருத்யைரஸ்து மே நித்ய யோக:'' என்று நித்ய குதூஹல ஶாலிகளாய் *மணவாள மாமுனிவன் பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை யுன்னிச் சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக் கரத்தாலே தீண்டல் கடனென்கிற அத்யவஸாயத்தில் தலைநின்றிருக்குமவர்கள்; அக்னிஜ்வாலையை விழுங்கி விடாய் கெட நினைக்குமா போலேயும், ஆடுகிற பாம்பின் நிழலிலே யொதுங்கி ஸுகிக்க நினைக்குமாபோலேயும், விஷயப்ரவணர்களாய் ஸுகிக்க நினைப்பாருடைய திரளில் நின்றும் விலகி 'உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்றிருக்குமவர்கள். இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணர்களாய் குணநுபவ கைங்கர்யங்களே போது போக்காயிருக்குமவர்கள். ஸர்வ ப்ரகாரத்தாலும் நாஶ ஹேதுவான அஹங்காரத்துக்கும், அதினுடைய கார்யமான விஷயப்ராவண்யத்துக்கும் விளைநிலம் தானாகையாலே தன்னைக் கண்டால் ஶத்ருவைக் கண்டாற்போலே யிருக்குமவர்கள். ஸம்ஸாரிகளைக் கண்டால் ஸர்ப்பத்தைக் கண்டாற் போலேயும், ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் பந்துக்களைக் கண்டாற் போலேயுமிருக்குமவர்கள். ஈஶ்வரனைக் கண்டால் பிதாவைக் கண்டாற்போலே

யும், ஆசார்யனைக் கண்டால் பசியன் சோற்றைக் கண்டாற் போலேயும், ஶிஷ்யனைக் கண்டால் அபிமதவிஷயத்தைக் கண்டாற்போலேயும் குதூஹலித்திருக்குமவர்கள். தேஹயாத்ரையில் உபேக்ஷையும், ஆத்ம யாத்ரையில் அபேக்ஷையும் ப்ராக்ருத வஸ்துக்களில் போக்யதா புத்தி நிவ்ருத்தியுமுடையராயிருக்குமவர்கள். உகந்தருளின நிலங்களில் மங்களாஶாஸந ப்ராவண்யமும் ஆஹாரநியதியும் அநுகூல ஸஹவாஸமும் ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியு முடையராயிருக்குமவர்கள். விஶேஷித்து, *தம் நெஞ்சில் தோற்றினதே சொல்லி உலகத்தை வஞ்சியாதே, முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப் பேசுமவர்கள் நித்ய ஸஹவாஸ யோக்யர்கள். ஆசாரியர்கள் அனைவரும் முன்னாசரித்த ஆசாரந்தன்னை அறியாதார் பேசுகின்ற வார்த்தைகளைக் கேட்டு மருளாதே பூருவர்கள் சீர்த்தநிலை தன்னிலே நிலைநின்றிருக்குமவர்கள் நித்யாநுபவயோக்யர்கள்.

கோவிந்தா! உன்னோடு கூடியிருந்து குளிர வேணும் நாங்கள். உன்றன் பொய்யைக் கேட்டு உன்வரவு பார்த்து யமுனையாற்றில் வார்மணல் குன்றில் பொழுது விடியுந்தனையும் நின்றிருந்து வஞ்சிக்கப்பெற்றோமாய், மீண்டொருகால் நீ எங்கள் பக்கல் வந்தவாறே 'என்னுக்கவளை விட்டிங்கு வந்தாய் இன்னமங்கே நடநம்பி நீயே' என்றும், 'எற்றுக்கு நீயென் மருங்கில் வந்தாய் எம்பெருமான் நீயெழுந்தருளே' என்றும், 'பொய் யொருநாள் பட்டதே அமையும் புள்ளுவம் பேசாதே போகுநம்பீ' என்றும், 'சுவரார் கதவின் புறமே வந்து நின்றீர்—ஏதுக்கிதுவென் இதுவென்னிதுவென்னோ' என்றும், 'மழறு தேன்மொழியார்கள் நின்னருள் சூடுவார் மனம் வாடி நிற்க எம் குழறு பூவையொடும் கிளியோடுங்குழகேலே' என்றும், 'என்னைமார்தன்மபாவமென்னுர் ஒரு நான்று தடி பிணக்கே' என்றுஞ் சொல்லி உன்னுடனே கூடோ மென்று கதவடைத்து ஊடினவர்களன்றோ நாங்கள்; அக்கொடிய நிலைகளெல்லாம் தொலைந்து நாம் எப்போதும் கூடியிருந்து குளிர்வோமாக. கூடியிருப்போமென்றாலே போதுமே; அதற்குமேல் குளிர்வோ மென்று ஒன்று கூற வேணுமோ வென்னில்; கூடியிருந்தே கண்வளர்ந்து போதைப் போக்குவது முண்டே; அங்ஙனன்றிகே ''அவிரலித கபோலம் ஜல்பதோரக்ரமேண – அவிதித கதயாமா ராத்ரிரேவ வ்யரம்ஸீத்'' என்று சக்ரவர்த்தி திருமகனுர் சொன்னபடியே யாகவேணுமென்கை. (27)

28. பறைதருமாலை

*கறவைகள் பின்சென்றின் ஈற்றடியில் *இறைவா நீ தாராய் பறையென்றிருப்பதை நோக்கியது இம்மாலைக் குறிப்பு. திருப்பாவையில் பறையென்னுஞ் சொல் பன்முறையும் வருகிறது. *நாராயணனே நமக்கே பறை தருவானென்று முதற்பாட்டிலேயே கூறிற்று. *கீழ்வானப் பாட்டில் 'பாவாயெழுந்திராய் பாடிப் பறைகொண்டு' என்றது. *நோற்குச் சுவர்க்கப் பாசுரத்தில் *நம்மால் போற்றப் பறை தரும் புண்ணியனுலென்றது. மற்ற விடங்களிற் காணும் பறையில் காட்டிலும் இங்குக் காணும்பறை விஶேஷமுடைத்து. என்ன விஶேஷமென்னில்; *நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியனென்ற விது கும்பகர்ண நிஹந்தாவான சக்ரவர்த்தி திருமகனைச் சொல்லுகிறது. அப்பெருமாளும் பறை தருவதாகச் சொல்லியிருப்பதால் *மாலே மணிவண்ணா பாசுரத்தில் கோரப்பட்ட பொருள்களினிடையே பேசப்பட்ட'சாலப்பெரும்பறையே' என்பதற்கு எது பொருளோ அது பொருளாக இருக்கத் தகுதியில்லை. சாலப் பெரும்பறை யென்பது வாத்ய விஶேஷமாகும். 'நாராயணனே நமக்கே பறை தருவான்.. இறைவா நீ தாராய் பறை' 'அங்கப்பறைகொண்டவாற்றை' என்னுமிடங்களில் படஹ மென்கிற வாத்ய விஶேஷம் பொருளாயிருக்க ஔசித்யலேஶமுமில்லை. பறையென்பதற்கு அர்த்தமாக ப்ரஸித்தமான வஸ்து தொனிக்கும் வஸ்துவாதலால் (த்வநிப்ரதாநமான வஸ்துவாதலால்) த்வநி மர்யாதையில் கிடைக்கும் பொருளே கொள்ளத்தகும். 'அபேக்ஷிதமான வஸ்து' என்னும் பொருளை விவக்ஷித்தே பறை பறை என்கிருர்கள்; இவர்களுக்கு அபேக்ஷிதமான வஸ்து எது வென்னில்; அஃது அடுத்த பாசுரத்தில் இவர்கள் தம்மாலேயே முக்த கண்டமாக விவரிக்கப்பட்டுள்ளது. அதனை விஶதீகரித்தா லொழிய பறை தருமாலையின் விவரணம் தேருது.

'இறைவா நீ தாராய்பறை' என்றவுடனே கண்ணபிரான் முறுவல் பூத்து ''ஆய்ச்சிகாள்! முதற்பாட்டே பிடித்து நானும் குறிக்கொண்டு வருகிறேன்; பறை பறை என்கிறீர்கள்; *அன்றிவ்வுலகமளந்தாய் பாசுரத்தில் பல்லாண்டு பாடுகையையே பரமப்ரயோஜநமாகக் காட்டினீர்கள்; அதிலும் 'பறை கொள்வானின்று யாம் வந்தோம்' என்றீர்கள்; அதற்கடுத்த பாசுரத்திலும் 'உன்னை யருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்' என்றீர்கள்; அதற்கடுத்த பாசுரத்தில் பாஞ்சசன்னியம், பறை, பல்லாண்டிசைப் பார், கோலவிளக்கு, கொடி, விதானமென்று பலவற்றை விரும்பினீர்கள்; அந்த ஸமுதாயத்திலும் பறை யென்பது சேர்ந்திருக்கிறது. முடிவாக *இறைவா நீ தாராய் பறை யென்கிறீர்கள்; இதனுல் உங்களுக்கு விவக்ஷிதமானதை விளம்பியேயாக வேணுமென்ருன்.

http://acharya.org

அதற்கு ஆய்ச்சிகள் 'குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது' என்றார்கள். அதாவது, கைங்கர்யம் செய்கையே எங்களுக்கு விவக்ஷிதமானதென்கை. 'கேசவநம்பியைக் கால்பிடிப்பாளென்னு மிப்பேறு எனக்கருள் கண்டாய்' என்றும், 'வள்ளல் மாலிருஞ்சோலை மணாளனார் பள்ளி கொள்ளுமிடத்து அடிகொட்டிடக் கொள்ளுமாகில்' என்றும் சொல்லுகிறவர் களாகையாலே திருவடி வருடுகையாகிற கைங்கர்யம் செய்துபோக வந்தார்கள் போலும் என்று கருதிய கண்ணபிரான் 'ஆய்ச்சிகாள்! அதுவாகில் விவக்ஷிதம், ஆசை தீரத் திருவடி ஸேவை செய்து விட்டுப் போய் வாருங்கள்' என்று சொல்லித் திருவடியை நீட்டியருளினான்; நப்பின்னைப் பிராட்டியை அழைத்து 'சில ஆய்ச்சிகளின் கையிலே ஆலவட்டமும் கொடு' என்றான். அது கேட்ட ஆயர் சிறுமியர் 'இற்றைப்பறைகொள்வானன்று காண்' என்று தொடங்கித் தங்கள் மனத்திலுள்ள பறையின் பொருளை விசதீகரித்தார்கள்.

'இற்றைப் பறை கொள்வானன்று' என்றது – எங்களுடைய பறை இன்று ஒருநாளோடே முடிந்து போமதன்றுகாண் என்றபடி. பின்னை என்னென்னில்; யாவதாத்மபாவி கைங்கர்யமே எங்களுக்கு உத்தேஶ்யம் என்றார்களா யிற்று. ஆக, 'இறைவா நீ தாராய் பறை' என்றதன் உட்கருத்தை நன்கு விவரிப்பது அடுத்த பாசுரமே யாதலால் அது கொண்டு *பறை தருமாலை விவரிக்க லாயிற்று. பறை தருகைக்கு இன்றியமை யாத ஹேதுக்கள் இப்பாட்டில் உரைக்கப் பட்டன. எங்ஙனேயென்னில்; நாயகனே! நின்னருளே புரிந்திருக்கிற எங்கள் பக்கலில் எடுத்துக் கழிக்கலாம்படியும் சில உபாயங்கள் கிடையாது. 'இரங்கு' என்றும், 'அருள்' என்றும் நாங்கள் அபேக்ஷித்த அருளுக்கு ப்ரதிபந்தகமாக எங்கள் திறத்தில் ஸாதநாம்ஶமொன்று மில்லை யென்று விளக்கமாகக் கூறுகிறார் கள். ஸாத்யோபாயங்களை ஒழித்து ஸித்தோபாயத்தை ஸ்வீகரிக்கு மதிகாரி களுக்குப் பேற்றுக்குக் கைம்முதலாயிருப் பதொரு நற்கருமமில்லை யென்கையும், மேலும் செய்ய யோக்யதை இல்லை யென்கைக்காகத் தங்களுடைய அபகர்ஷத்தை அநுஸந்திக்கையும், மூலஸுக்ருதமான ஈஶ்வரனுடைய குணபூர்த்தியை அநுஸந்திக்கையும், ஸம்பந்தத்தை உணருகையும், பூர்வாபரா தங்களுக்கு க்ஷாமணம் பண்ணுகையும், உபாய பூதனை ஈஶ்வரன் பக்கலிலே உபேயத்தை அபேக்ஷிக்கையுமாகிற இவை ஆறும் அதிகார அங்கங்களாத லால் இப்பாட்டில் இவ்வாறும் வெளியிடப்படுகின்றன.

கீழ் எட்டாம்பாட்டில் ''கோதுகல முடைய பாவாயெழுந்திராய் பாடிப்பறை கொண்டு'' என்றும் 'கூடாரைவெல்லுஞ் சீர்க்கோவிந்தா! உன்றன்னைப் பாடிப்பறை கொண்டு' என்றும் கூறினவிடங்களை

நோக்கினால் இனிமேல் பறை கொள்ள வேண்டாதே ஏற்கெனவே பறை கொண்டுவிட்டதாகத் தெரிய வருகின்றதே யென்று சிலர் திகைப்பதுண்டு; அவ்விடங்களில் பாடுகையாகிற உத்தேஶ்யத்தைப் பெற்று என்பதே பொருளென்றுணர்க; ''சொல்திரியினும் பொருள் திரியா வினைக்குறை'' என்ற நன்னூற் சூத்திரத்தின்படி 'பறை கொண்டு' என்பதற்கு – பறைகொள்ள என்னும் பொருளும் பொருத்தமே.(28)

29. காமங்கள்மாற்றுமாலை

*சிற்றஞ்சிறுகாலே பாசுரத்தின் ஈற்றடியில் *மற்றைநங்காமங்கள் மாற்றென்றிருப்பதை நோக்கியது இம்மாலைக்குறிப்பு. 'மற்றை நங்காமங்கள் மாற்று' என்னும் வாக்கியம் மிகவும் ஸாரமாகக் கொள்ளத்தக்கது; திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தில் மத்யம பதமான நமஸ்ஸானது காகாக்ஷிந்யாயத்தாலே முன்னேயுள்ள ப்ரணவத்திலே அந்வயித்தும், பின்னேயுள்ள *நாராயணாயவில் அந்வயித்தும், தன்னோடே யந்வயித்தும் மூன்று விரோதிகளைக் கழிக்கிறதென்பர். இதனை பட்டர் அஷ்டஶ்லோகியில் 'மந்த்ர ப்ரஹ்மணி மத்யமேந நமஸா' என்கிற இரண்டாம் ஶ்லோகத்திலே விவரித்தருளுகிறார். முமுக்ஷுப்படியில் ''நமஸ்ஸாலே விரோதியைக் கழிக்கிறது'' என்றருளிச்செய்து, ''விரோதிதான் மூன்று; ஸ்வரூப விரோதியும் உபாயவிரோதியும் ப்ராப்ய விரோதியும்'' (83,84) என்றுமருளிச்செய்து, இந்த விரோதிகள் கழியப்பெற்ற நிலைமையில் பேச்சு எங்ஙனேயிருக்கு மென்பதைக் காட்டுமளவில் ''ஸ்வரூப விரோதி கழிகையாவது *யானே நீ யென்னுடைமையும் நீயே யென்றிருக்கை; உபாய விரோதி கழிகையாவது *களைவாய் துன்பம் களையாதொழியாய் களைகண் மற்றிலேனென்றிருக்கை; ப்ராப்ய விரோதிகழிகையாவது *மற்றை நங்காமங்கள் மாற்றென்றிருக்கை (85) என்றருளிச்செய்திருப்பது ப்ரஸித்தம். ப்ராப்ய விரோதி கழிந்த நிலைமையிற் பாசுரம் இதுவென்று காட்டப்பட்டதாயிற்று. இதைச் சிறிது விவரிப்போம். ப்ராப்யமாவது பலன்; பலனை அநுபவிக்கும்போது நேருகிற விரோத மென்னவென்று தெரிந்துகொள்ள வேணும். பலனை அநுபவிக்கும்போது ஆனந்தம் அவச்யமுண்டாகியே தீரும். அந்த ஆனந்தத்தைத் தன்னுடையதாக நினைத்தல் பெரிய விரோதி. நிலாத் தென்றல் சந்தனம் புஷ்பம் முதலானவை தமக்கு ஒரு உபயோகமின்றிக்கே பிறர்க்கே உபயோகப்பட்டுப் பிறரையே ஆனந்தப்படுத்துகின்றன. தாம் சிறிதும் ஆனந்தம் கொள்வதில்லை. அது போலவே பகவானுக்கு நாம் உபயோகப் படுமளவில் அதனால் ஆனந்தப்படுகிற

http://acharya.org

வன் பகவான்தானே யாகவேணும். சேதந லாபம் ஈஶ்வரனுக்கே பேறு ஆகையாலே பேறு பெற்றவன் தானே ஆனந்திக்கப் ப்ராப்தியுண்டு. ஆனால் நிலாத்தென்றல் சந்தனம் புஷ்பமென்று த்ருஷ்டாந்தமாகக் காட்டப்பட்ட பொருள்கள் அசேதநமா கையாலே அவற்றுக்கு ஆனந்தமுண்டாக ப்ராப்தியில்லை. நாம் சேதநராகையாலே சைதந்யப்ரயுக்தமாக நேரக்கூடிய ஆனந்தம் எங்ஙனே தவிர்க்கமுடியும்? என்று கேள்வி பிறக்கும். நம்முடைய கைங்கர்யத்தினால் எம்பெருமான் ஆனந்திக்க, அது கண்டு நாம் ஆனந்திக் கக்குறையில்லை. நாம் செய்யும் கைங்கர்யம் ஸாக்ஷாத்தாக நம்முடைய ஆனந்தத்திற்கு ஹேதுவாகக் கூடாதென்பதே விஷயம். ஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்நத்தில் 'கதாஹமை காந்திக நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி'' என்கிற ஶ்லோக ரத்நத்தினால் இந்த தத்த்வார்த்தத்தை யநுஸந்தித்தருளினார். இந்த ஶ்லோகத் தில் 'ப்ரஹர்ஷயிஷ்யாமி' என்பது ஜீவநாடி. இதில் பகவானே! உனக்கு நான் கைங்கர்யம் செய்து எப்போது ஆனந்தப் படப்போகிறேன் என்று கூறாமல் 'உன்னை எப்போது ஆனந்தப்படுத்தப்போகிறேன் என்று சொல்லியிருப்பதானது 'மற்றை நங்காமங்கள் மாற்று' என்கிற இப்பாசுரத்தின் பொருளையே (வடிக்கட்டின ஸத்ஸம்ப்ரதாயார்த்தத் தையே) அருளிச் செய்தபடி.

அவ்விடத்து ஸ்தோத்ர பாஷ்யத்தில் 'ப்ரஹர்ஷயிஷ்யாமி'யின் ஸ்வாரஸ்யத்தை விளக்காநின்ற வேதாந்தவாசிரியர் ''த்வத்தாஸபூதஸ்ய மே த்வத் ப்ரஹர்ஷயேவ ப்ரதாநம் ப்ரயோஜநம் இதி பாவ:। ஏவம் ஸ்வாதீந ஸ்வார்த்த கர்த்ருத்வ போக்ருத்வ ப்ரமரஹித கைங்கர்ய ப்ரார்த்தநா க்ருதா பவதி'' என்று பணித்தார். சிலவிடங்களில் உகப்பு சேதநநிஷ்டமாகப் பேசப்பட்டாலும் இந்த ஶாஸ்த்ரார்த்தத்துக்கு விரோத மின்றிக்கே அது நிர்வஹிக்கத்தக்கதாகும். த்வயமந்த்ரத்தில் உத்தரவாக்யத்தின் முடிவிலுள்ள நமஸ்ஸுக்குப் பொருள் பணிக்கும் பிள்ளையுலகாசிரியர் ''நம: கைங்கர்யத்தில் களையறுக்கிறது; களையாவது தனக்கென்னப்பண்ணுமது. .... கைங்கர்ய ப்ரார்த்தனை போலே இப்பதத்தில் ப்ரார்த்தனையும் என்றுமுண்டு; 'மருந்தே நங்கள் போகமகிழ்ச்சிக்கு' என்னாநின்றதிறே'' (முமுக்ஷுப்படி 178,179,183,184) என்றருளிச்செய்ததும், அவ்விடத்து வியாக்கியானத்தில் ''தனக்கென்னப் பண்ணுகையாவது – 'போக்தாऽஹம் மம போகோऽயம்' என்கிறபடியே இத்தைத் தன்னுடைய ரஸத்துக்குறுப்பாக நினைத்துப் பண்ணுகை. பகவந்முக விகாஸஹேதுவாகையாலே இது நமக்கு ஆதரணீயம் என்கிற ப்ரதிபத்தியொழிய இதில் போக்த்ருத்வ ப்ரதிபத்தியும் மதீயமென்னும் ப்ரதிபத்தியும் நடக்கு மாகில் அபுருஷார்த்தமாயிறேயிருப்பது.

....சதுர்த்தியில் சொல்லுகிற கைங்கர்ய ப்ரார்த்தனை காதாசித்கமன்றிக்கே நித்யமாய்ச் செல்லுமாபோலே நம: பதத்தில் சொல்லுகிற கைங்கர்ய விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனையும் இங்கிருக்கும் காலத்தோடு ப்ராப்ய பூமியில் போன காலத்தோடு வாசியற எல்லாக் காலமும் நடக்கக் கடவதாயிருக்கும். கந்தல் கழிந்த அந்நிலத்திலும் ஸ்வபோக்த்ருத்வ ப்ரதிபத்தியாகிற விரோதியின் உதயமுண்டோ வென்ன வருளிச் செய்கிறார் 'மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கென்னு நின்றதிறே' என்று. அதாவது, உன்னுடைய அநுபவத்தாலே எங்களுக்குவரும் ஆனந்தத்துக்கு ஸ்வபோக்த்ருத்வ புத்தியை விளைவித்து ஸ்வரூபத்தை அழியாதபடி ஸாத்மிப்பிக்கும் பேஷஜமானவனே! என்று நித்யஸூரிகள் பேசும் பாசுரமாகச் சொல்லா நின்றதிறே யென்கை. ஆக அவ்விஷய வைலக்ஷண்ய ப்ரயுக்தமாய் வரும் ஸ்வபோக்த்ருத்வபுத்தி அங்கும் விளைகையாலே இப்பதத்தில் ப்ரார்த்தனை (நமஸ்ஸிலுள்ள விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனை) என்று முண்டென்னுமிடம் ஸித்தம்'' என்று மணவாளமாமுனிகளருளிச் செய்த ஸ்ரீஸூக்திகளும் இங்கே அநுஸந்தேயம். ஆனால் திருப்பாவை ஸதஸ்யர்களில் பலர் இச்சுவை யறியார்கள். (29)

30. திருவருள்மாலை

*வங்கக் கடல் கடைந்த பாசுரத்தில் *எங்குந் திருவருள் பெற்றின்புறுவரென்றிருப்பது நோக்கியது இம்மாலைக் குறிப்பு. ஆளவந்தார் *எங்குந் திருவருள் பெற்று என்றதை நோக்கியே ''ஶ்ரேயோநஹ்ய ரவிந்தலோசந மந: காந்தா ப்ரஸாதாத்ருதே ஸமஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித்'' என்றருளிச் செய்தார். 'பண்டைநாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு' என்றார் ஆழ்வாரும். பிராட்டி புருஷகாரமான லல்லது எம்பெருமான் காரியம் செய்யா னுகையாலே திருவருள் மிக முக்கிய மென்க. திருவரங்கத்தமுதனார் நூற்றந்தாதியில் நூற்றேழு பாசுரங்களினுல் எம்பெருமானரைப் போற்றுவதையே பரம புருஷார்த்தமாகக் கொண்டவர் நூற்றெட்டாவது பாசுரத்தில் ''பங்கயமாமலர்ப்பாவையைப் போற்றுதும்'' என்று தம்முடைய அபேக்ஷிதஸித்திக்குத் திருவருளையே தஞ்சமாகக் கொண்டாராயிற்று.

இப்பாசுரத்தில் இத்திவ்யப்ரபந்தம் கற்பார்க்குப் பலனுரைத்துத் தலைக்கட்டுகிறது. கீழ் ஓங்கியுலகளந்த பாசுரத்தில் *தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து நீங்காத செல்வம் நிறைந்திடுமென்று பலன் சொல்லி யிருப்பதானது கோபிகள் தாங்கள் அநுஷ்டிக்கும் நோன்பினுல் விளையக் கூடிய பலனைச் சொன்னவாறு;

http://acharya.org

இப்பாசுரம் இத்திருப்பாவை கற்ருர்க்குப் பலன் சொல்லுகிறது. கீதாசார்யன் 'கர்மண்யேவாதிகாரஸ் தே மா பலேஷு கதாசந'' என்று ஒரு பலனேயும் விரும்பத்தகாதென்று சொல்லியிருக்க, இங்குப் பலனுரைப்பது கூடுமோவென்று சங்கிக்கவேண்டா. பலனே விரும்பக் கூடாதென்று சொன்ன பகவானுக்கு – செய்கிற கார்யம் நிஷ்ப்பலமாய் விடுமென்று திருவுள்ளமன்றே. நாமாக ஒரு பலனே விரும்பினுல் க்ஷுத்ர பலனேத்தான் விரும்புவோம்; உயர்ந்த பலனே விரும்ப நமக்குத் தெரியாது; ஆனதுபற்றியே பலனே நீ விரும்பாதே யென்று தெரிவித்தபடி. இங்கு அருளிச் செய்யப்படுகிற பலன் எப்படிப்பட்ட தென்று பார்க்கவேணும்; ''செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால் எங்குந் திருவருள் பெற்று இன்புறுவர்'' என்று திவ்யதம்பதியினுடைய திவ்ய க்ருபா லாபமேயன்ருே பலனுகச் சொல்லப்பட்டது. இது ஸாக்ஷாத் பிராட்டிதானே யருளிச்செய்த பாசுரமாகையாலே, திருப்பாவை யநுஸந்தானத்தினுல் உபயவிபூதியிலும் நமக்கு இன்பம் நிஸ்ஸந்தேஹமென்று தேறியிருக்கலாம்.

திருவருள் என்பதற்குத் திருவின் அருள் என்னும் பொருளேவிட, திருவென்பதை அருளுக்கு அடைமொழி யாக்கி, திருவடி, திருவாய், திருக்கண், திருக்குளம் இத்யாதிகளிற் போலச் சிறந்தவருள் என்று பொருள்கொள்வது பிரகரணத்திற்கு மிகச்சேரும். முன்னே செல்வத்திருமாலால் என்றிருப்பதால் அருள்செய்கையிலே பிராட்டியின் அந்வயம் ப்ராப்தமேயாயிற்று. ஆகவே ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யக்ருபையி ஞல் எங்கும் இன்புறுவர் என்றதாகக் கொள்க. இங்ஙனே நாமெழுதுவதைக் காணும் பிறர் ''திருவின் அருளால் என்று பொருள் கொண்டால் பிராட்டிக்கு மோக்ஷப்ரதத்வமில்லே யென்கிற ஸ்வகீய ஸித்தாந்தத்திற்கு பங்கமாகு மென்று கொண்டு இங்ஙனே யோஜித்த படிபோலும'' என்று (சிலர்) நினேப்பர்கள்.

கீழே நாமெடுத்தக்காட்டிய ''ப்ரயோநஹ் யரவிந்த...'' இத்யாதியான ஆளவந்தார் ஸ்ரீ ஸூக்தியிற் காட்டிலும் இதில் ஒரு விஶேஷமில்லேகிடீர். ஐஹிகமாயும் ஆமுஷ்மிகமாயுமுள்ள ஶ்ரேயஸ்ஸுக் கள் பிராட்டியின் அருளில்லாதவன்று பெறமுடியாதென்னுமிடம் ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். பிராட்டி புருஷகார மாளுலல்லது ஈஶ்வரன் காரியம் செய்யானென்னுமிடத்தை ஸகல ஆசாரியர்களும் ஸமகண்டமாகக் கூறியுள்ளார்கள். சதுச்ச்லோகியின் மூன்ருவது ஶ்லோகத்தின் பாஷ்யத்தில் தேசிகனருளிச் செய்திருக்கும் ஸ்ரீஸூக்தி – ''மோக்ஷப்ரதே பகவதி முமுக்ஷூணும் கடகதயா ஏஷா திஷ்டதீதி ஸர்வ ஸம்மதம்'' என்பதன்ருே. இந்த ஸ்ரீஸூக்தியின் முன்னிலேயில் நவீனர்

களின் நூதனக்கொள்கை இரவியைக் கண்ட இருள்போல் மறையுமன்றோ. ''எம்பெருமான் தான் மோக்ஷமளிப்ப வன்; புருஷகார க்ருத்யம் செய்பவளாக மட்டும் பிராட்டியிரா நின்றுள் என்பது தான் ஸர்வஸம்மதமான ஸித்தாந்தம் என்பதன்றோ மேலேகுறித்த வடமொழி வாக்கியத்தின் நிர்விவாதமான பொருள். அதேயிடத்தில் ஒரு ஶ்லோகமுமிட்டரு ளுகிறுர் தேசிகன்; ''அஸ்தி கர்மார்ஹ ப$_2$லதே$_3$பத்யௌ க்ருத்யத்$_3$வயம் ஶ்ரிய:। நிக்ரஹாத்$_3$ வாரணம் காலே ஸந்து$_4$க்ஷணம் அநுக்$_3$ரஹே''இதி. இந்த ஶ்லோகத்தின் பொருளாவது , அவரவர்களுடைய கருமங்களுக்குத் தக்கபடி பலன் கொடுப்பவன் பகவானேயாவன்; அங்குப்பிராட்டி இருவகையான காரியம் செய்து நிற்பள்; அப்பெருமான் நிக்ரஹோந்முகனுயிருக்கும்போது அந்த நிக்ரஹேச்சையைத் தவிர்க்க முற்படுகை யொன்று; அநுக்ரஹாபிமுகனுகும் போது அவ்வநுக்ரஹத்தை மேன் மேலும் பெருகச் செய்வது மற்ருென்று. ஆக இவ்விரண்டு க்ருத்யங்களே பிராட்டிக்குள்ளனவென்று சொல்லி வைத்திருக்க இதில் பிணக்கு வளர்வது பெருவியப்பே. தேசிகனுடைய ஸம்ஸ்க்ருத வார்த்தைகளை யெடுத்துக் காட்டி அவற்றை நாம் தமிழில் மொழி பெயர்த்துக்காட்டும் ப்ரயாஸம் ஏதுக்கு? அவர் தமிழிலேயே ஸ்பஷ்டமாகப் பணித்திருப்பது காணலாமே. அவருடைய சிறு ரஹஸ்யங்களில் ரஹஸ்ய ரத்நாவலி யென்பது பதின்மூன்ருவது ரஹஸ்யம். இது முப்பது வார்த்தைகள் கொண்டது. இதில் நான்காவது வார்த்தை – ''ஸர்வ ஸ்வாமிநியாய் ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷமாய் ஸஹதர்மசாரிணியான பெரியபிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிஶயத்தாலும், அத்தலையில் வால்லப்யாதிஶயத்தாலும் புருஷகார மாய்க் கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிருள்'' என்பது. இதற்கடுத்த ரஹஸ்யம் ரஹஸ்ய ரத்நாவளி ஹ்ருதய மென்பது. அது ரத்நாவளீ வார்த்தைகளுக்கு அடைவே விவரணம் காட்டுவது; அதையுங் கண்டு தெளிவது.

ஸாரமான வார்த்தையால் தலைக் கட்டுகிறோம். புருஷகாரத்வமும் உபாயத்வமும் ஏகாஶ்ரயத்தில் கூடியிருக்கமுடியாது. பிராட்டிதானே முக்திஸாம்ராஜ்ய மளிக்க வல்லவளா யிருந்தால் அநாயாஸமாகத் தானே கொடுத்து வாழ்விக்க என்ன தடை; தண்டதரனை எம்பெருமான் பக்கலிலே இவள் மன்ருடுவது எதற்காக? த்வாதஶி யன்று ஸூர்யக்ரஹணம் நேர்ந்தால் பாரணைக்கு ப்ராதாந்யமா? உபராகப்ரயுக் தமான உபவாஸத்திற்கு ப்ராதாந்யமா? என்று ஒருவர் தர்மஸந்தேஹம் கேட்க, த்வாதஶியாகையாலே பாரணைக்குத் தான் ப்ராபல்யமென்று எங்கள் பிதாமஹர் பிரபல விசாரஞ்செய்து

ஸஞ்சிகை யெழுதி வைத்திருக்கிருர் என்று சொல்லுவர் ஒரு பெரிய மேதாவி. த்வாதஶியன்று க்ரஹணம் நேருவ தெப்படி யென்கிற விசாரத்தில் அந்தோ! புத்தி செல்லுவதில்லை. அதுபோலவே இவ்விஷயத்திலும் நியமேந வ்யதிகரணதர்மங்களான புருஷகாரத்வ உபாயத்வங்களுக்கு ஸாமாநாதி கரண்யம் கூடுவதெங்ஙனே? என்று இந்த மிகச்சிறு விஷயத்தையும் ஆராயகில்லாது வாதவிவாதங்களை வளர்த்துகின்ருர் களென்ருல் இதனினும் மிக்க வியப்பு வையகத்திலுண்டோ? அவிசாரித ரமணீயங்களான துர்வாதங்கள் நீங்கத் திருவருள் வேண்டியதே. அந்தத் திருவருளின் ப்ரஸ்தாவத்திளுல் தலைக்கட்டியது ஸர்வம்ஸமஞ்ஜஸம்.

நிகமனம்

மாலைக்குறிப்பு இட்டவர்கள் திருவருள் மாலையிலே நிகமனஞ் செய்கையாலே இவர்கள் பெற்ற திருவருளைச் சிறிது விளம்புகிரேம். நம்முடைய இந்நூல் முகமாக இவர்கள் இத்தகைய விஶேஷார்த்த நிதிகளைப் பெற்றதுவே சிறந்த திருவருளாகும்.

''சாதகஸ் த்ரிசதுராந் பய:கணந் யாசதே ஜலதரம் பிபாஸயா। ஸோபி பூரயதி விஶ்வமம்பஸா॥'' என்ருன் பண்டிதராஜன். திருப்பாவை ஸதஸ்ஸை நிர்வஹிக்கப் புறப்பட்டவர்கள் ஏழேழு நிமேஷங்களுக்கு விஷயம் விரும்பினுர் கள். எத்தனைகால மெடுத்து எவ்வளவு அநுபவித்தாலும் கொள்ளமாளாவின்ப வெள்ளமான இந்த மஹாநிதி உலகுக்கெல்லாம் கிடைத்ததானது உண்மையில் மிகச் சிறந்த திருவருளே.

ஸ்ரீ காஞ்சீ ப்ர.ப.அண்ணங்கராசாரியர் ஸ்வாமி எழுதிய

சங்கத்தமிழ்மாலை முப்பது முற்றிற்று.

ஆண்டாள் திருவடிகளே ஶரணம்

எம்பெருமானுர் திருவடிகளே ஶரணம்

ஜீயர் திருவடிகளே ஶரணம்

http://acharya.org